விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 19 செவ்வாய்க்கிழமை (02.06.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

புங்குடுதீவில் ஒப்படைக்கப்பட்டவர் வெள்ளவத்தை சென்றது எவ்வாறு?

அறிக்கை கோருகிறது மன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற குற்றச்சாட்டில் மக்களால் பிடிக்கப்பட்ட ஒன்பதாம் சந்தேக நபரான சுவிஸ் குமார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் எவ்வாறு கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து மீண்டும் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டார் என்பது குறித்து முழுமையான விசாரணை அறிக்கையினை மன்றுக்கு வழங்குமாறு நீதவான் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார். புங்குடுதீவு மாணவி

23ஆம் பக்கம் பார்க்க

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தப் பொங்கல் உற்சவத்தில் பங்கேற்பதற்காகவும். தமது நேர்த்திகளை நிறைவு செய்வதற்காகவும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வற்றாப்பளையை நோக்கி இலட்சக் கணக்கான பக்தர்கள் நேற்று காலை முதலே அங்கு சென்று. காவடிகள். பால்செம்புகள். கற்பூரச் சட்டிகள் என்பன எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றுவதைக் காணலாம்.

வித்தியா கொலை வழக்கு

சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வு கொலைச் சம்பவ வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 9 சந்தேக நபர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதவான் செல்வ நாயகம் லெனின்குமார் முன்னிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே நீதவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

புங்குடுதீவில் உள்ள பாடசாலை மாணவி வித்தியா கடந்த பதின் மூன்றாம் திகதி அன்று புங்குடுதீவில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார். இக்கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முதலில் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். தொடர்ந்து சுவிஸ்நாட்டில் வசித்து வந்த நபர் ஒருவரும் அதனை தொடர்ந்து ஐந்து இளைஞர்களுமாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் ஒன்பது பேரும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் யாழ் மற்றும் ஊர்காவ

24ஆம் பக்கம் பார்க்க

கலகம்; இருவருக்குப் பிணை ஏனையோருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற வளாகத்துக்குள் கடந்த 20ஆம் திகதி கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 129 பேரில் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர் இருவருக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 3 ஆட்பிணை வழங்கி யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று திங்கட்கிழமை விடுவித்தார்.

யாழ்.நகர் பகுதியில் கடந்த மே மாதம் 20ஆம் திகதி கலவரத்தில் ஈடுபட்டமை மற்றும் யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்த 47 பேரில் 45 பேருக்கு எதிர் வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியில் நீடிக்கப்பட்டு மற்றைய இரு சிறுவர்களையும் பிணையில் விடுதலை செய்யுமாறும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 20ஆம் திகி யாழ்.நகரில் இடம்பெற்ற கலவரத்தில் 129 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 4 பிரிவினராக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அந்த வகையில் இரண்டு வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடு

23ஆம் பக்கம் பார்க்க

வெற்றிலையில் மகிந்த போட்டி மைத்திரியால் தடுக்க முடியாது

சவால் விடுகிறார் வாசு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலை சின்னத்தில் மகிந்த போட்டியிடுவது நிச்சயம். அதனை தடுக்க மைத்திரியால் முடியாது என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சரும் எம்.பி. யுமான வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஐ.ம.சு.மு. வின் வெற்றிலை சின்னத்தில் போட்டியிட வாய்ப்பளிக்கமாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கூற முடியாது.

ஏனென்றால் ஐ.ம.சு.மு. என்பது மைத்திரிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்தல்ல. அது பல கட்சிகள் அடங்கியது. எனவே எமக்கே சொந்த

24ஆம் பக்கம் பார்க்க

நிதி மோசடி

பாதுகாப்பு கருதி மகிந்தவுடன் விசாரணைக்கு சென்றார் சிராந்தி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷவிடம் நிதி மோசடி விசாரணை பிரிவினர் நேற்று வெளியிட மொன்றில் வைத்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குண சேகரவை தொடர்புகொண்டு கேட்ட போது. சிராந்தி ராஜபக்ஷ மீது நிதிக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவரது வங்கிக் கணக்குகள் தொடர்பில் வாக்குமூலமொன்றை பெற்றுக்கொள்வதற்காக நேற்றைய தினம் அவரை நிதிமோசடி தடுப்புப் பிரிவில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் சிலரது

24ஆம் பக்கம் பார்க்க

நீதிமன்ற வளாகத்தில் மயங்கினார் தாயார்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு ஊர்காவற்துறை நீதிமன்றில் நேற்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட

24ஆம் பக்கம் பார்க்க

பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ உறுதி

(கொழும்பு)

இலங்கையில் அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என அவரது பேச்சாளர் உறுதிபடுத்தியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ. தனது அமைச்சரவையில் இருந்த மைத்

24ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நல்லெண்ணம் காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்



T.P :- 0777 569 205

01.06.2015 முதல் 08.06.2015 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

(C-1139)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

நாதன் இன்

(பழைய கமல் டொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

நேற்று நடைபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் வருடாந்த பொங்கல் உற்சவத்தில் ...

சரியான நேரத்தில் என்னை வெளிப்படுத்துவேன் !

திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

எனது நோக்கத்தை சரியான நேரத்தில் வெளிப்படுத்துவேன் என முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இப்போது நான் யாருமின்றி நடுவில் இருக்கின்றேன். அரசாங்கம் கலைக்கப்பட்டதன் பின்னர் சரியான நேரத்தில் எனது நோக்கத்தை வெளிப்படுத்துவேன்.

எனக்கு தற்போது அரசியல் கட்சியொன்று இல்லை.

நான் அரசியலிருந்து விலகிக்கொள்ளப் போவதில்லை.

சவால்களுக்கு மத்தியில் நான் பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன்.

நான் எந்தக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவேன் என்பதனை சரியான நேரத்திற்கு அறிவிப்பேன்.

நான் நிச்சயமாக கண்டியில் போட்டியிடுவேன் என திஸ்ஸஅத்த நாயக்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (11)

யாழில் பொலிஸார் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் கொலை மற்றும் அதன் பின்னர் பிரதேசத்தில் ஏற்பட்ட பதற்ற நிலைகள் தொடர்பான வழக்குகள், நேற்றையதினம் யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு வழமையை விட பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருந்தது.

இதனால் யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை முழுவதிலும் நேற்றையதினம் பல்லாயிரக் கணக்கான விசேட அதிரடிப்படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தனால் பதற்றம் நிலவியிருந்தது. (4-11)

டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=

(C-1138)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஓர் அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்.

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000/=-35,000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு:

0766398366 (631)

விபத்து : 2 வயது ஆண் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு வயது ஆண்குழந்தை ஒன்று நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளது.

திருகோணமலை மூதூர் பாட்டலிபுரத்தைச் சேர்ந்த சுபாகரன் டேவிட் என்ற இரண்டு வயதேயான ஆண் குழந்தையே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இதேவேளை குழந்தையின் தந்தையும் தாயும் மற்றும் 7 வயதுச் சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

கடந்த 29 ஆம் திகதி மாலை 5 மணியளவில் புதுக்குடியிருப்பு சிவநகர் பாடசாலைக்கு அருகிலுள்ள ஒழுங்கையொன்றில் ஆட்டோவில் சென்றவர்கள் மீது அரச பேருந்து ஒன்று மோதியுள்ளது.

இதில் ஆட்டோவினைச் செலுத்திச் சென்ற இளம் குடும்பஸ்தரான திருகோணமலை மூதூர் பாட்டலிபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுபாகரன் (வயது-23) சுபாகரனின் மனைவியான வதனி (வயது-21) இவர்களது இரண்டு வயதேயான ஆண்குழந்தையொன்றும், முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவனும் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர்கள் அங்கிருந்து உடனேயே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டனர்.

இருப்பினும் உடன்நிலை மோசமடைந்ததையடுத்து கடந்த 30 ஆம் திகதி சுபாகரன் மற்றும் அவரது ஆண் குழந்தையும் விபத்தில் சிக்கிய சிறுவனும் கொழும்பு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டவர்களில் சிறுவனுக்கு அங்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டுவரும் நிலையில் தந்தையும் மகனும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மீண்டும் மாற்றப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் குறித்த ஆண்குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

இந்தக் குழந்தையின் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை குழந்தையின் தந்தையான சுபாகரன் சுயநினைவற்றநிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த 28 ஆம் திகதி மூதூரிலிருந்து முல்லைத்தீவுக்கு வந்த மேற்படி குடும்பத்தினர் மறுநாள் 29 ஆம் திகதி புதுக்குடியிருப்பு சென்று அங்கு ஆட்டோவொன்றில் ஆறுபேருடன் பயணித்துக்கொண்டிருந்தபோதே பேருந்து மோதி விபத்தில் சிக்கியுள்ளனர்.

ஆட்டோவை மோதித்தள்ளிய இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து, ஆட்டோவை சுமார் 30 மீற்றர் தூரத்திற்கு இழுத்துச் சென்றதாகவும் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (6-11)

பெண் மரணம் கொலையென பொலிஸார் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி பகுதியில் உள்ள வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிகப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளாரென சாவகச்சேரி பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியை சேர்ந்த மகாதேவன் நாகேஸ்வரி (வயது-80) என்பவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

குறித்த வயோதிக பெண் மணி சடலமாக மீட்கப்பட்ட போது கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் அவரது காது அறுந்த நிலையில் இருந்ததோடு, தோடுகள் காப்புக்கள் மற்றும் வீட்டிலிருந்த நகைகள் திருடப்பட்டும் உள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொலை திருட்டுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் வீட்டில் வயோதிக பெண் மணி தனியாக இருந்தமையால் தான் கொலையாளிகள் இலகுவாக அவரை கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

மேலும் திருடப்பட்ட நகைகள் பொருட்கள் குறித்த தகவல்கள் வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் அறிய முடியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராஜபக்ஷவினர் மக்களை ஏமாற்றி மீண்டும் அதிகாரத்திற்கு வரமுயற்சி

மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷவினர் மேற்கொண்ட ஊழல், மோசடிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கும் போது அவர்கள் பல்வேறு விளங்கங்களை கூறி வருவதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவினர் தாம் குற்றம் செய்யவில்லை என்று கூறி மக்களை ஏமாற்றி மீண்டும் அதிகாரத்திற்கு வர முயற்சித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வெலிகம நகரில் ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் ஒன்றை நேற்று முன தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தினமும் நாட்டில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு சென்று பௌத்த வணக்கஸ்தலங்களை அரசியல் மடமாக மாற்றி வருகிறார்.

மின்சார நற்காலிக்கு நான் பயப்படவில்லை என்று மார்பில் அடித்து கொண்டு கூறிய மகிந்த ராஜபக்ஷ, அவரது குடும்பத்தினருக்கு எதிரான ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நடவடிக்கை எடுக்கும் போது "ஐயோ எங்களை வேட்டையாடுகின்றனர்" என்று கத்துகிறார்.

ஷிராந்தி ராஜபக்ஷ அரசியலில் ஈடுபடவில்லை. எனினும் ஜனாதிபதியின் பாரியார் என்பதை ஒரு பதவியாக பயன்படுத்தி வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதை நான் நேரில் கண்டுள்ளேன்எனவும்வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-5)

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் போதைப் பொருள் குளிசைகள் மற்றும் போதைப்பொருள்களை கொண்டுவந்து விற்பனை செய்வோருக்கு மரண தண்டனையை அமுல் படுத்துவது சிறந்ததாகும் என்று தான் யோசனையொன்றை முன்வைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதற்கான வாதப் பிரதிவாதங்களை நாட்டில் இன்று முதல் ஏற்படுத்துவதற்கான யோசனையை தான் முன் வைப்பதாகவும் அதனூடாக வெளிப்படும் மக்களின் கருத்துகளை செவிமடுத்து அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தையொட்டி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

ஜனாதிபதி மைத்திரி பங்கேற்ற கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் சென்றவர்களுக்குப் பிணை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றிய கூட்டத்தில் துப்பாக்கியுடன் சென்ற சம்பவத்தில் கைது செய்யப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், இராணுவ சிப்பாய் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோருக்கு நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மூவரையும் நேற்று அங்குனுகொலபெலெஸ்ஸ நீதிமன்றில் ஆஜர்படுத்திய சந்தர்ப்பத்தில் பிரதான நீதவான் மயுர சமரதுங்கவினால் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.இதற்கமைய ஒவ்வொரு சந்தேக நபருக்கு தலா 2 இலட்சம் ரூபாய் சரீர பிணை மற்றும் 25,000 ரூபாய் ரொக்க பிணை மூலம் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதோடு, இரண்டு வாரத்திற்கு ஒருமுறை குற்ற புலனாய்வு பிரிவில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவில் கடமை புரிந்த இராணுவ சிப்பாய் ஒருவர் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேசத்தில் ஜனாதிபதி பங்குபற்றிய கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.அதன் பின்னர் கடந்த மே மாதம் 14ஆம் திகதி சந்தேக நபரான இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டார். மேலும் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரையும் பொலிஸ் விசேட விசாரணை பிரிவினர் கைது செய்திருந்தனர். இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்திய சந்தர்ப்பத்தில் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றில் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

விற்பனைக்கு

ஸ்கூட்டிபெப் (Scooty pep), கூல் பார் ஒன்றின் லைற்போட் (12 அடி நீளம்), Sony Set, AC கள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0772958009

இராசி பலன்

02.06.2015
(வைகாசி 19, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
பூரணை முன்னிரவு 10.10 மணிவரை
அனுசம் முன்னிரவு 8.18 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
பூரணை விரதம்,
சர்வதேச இளைஞர் தினம்

வளவன்

மீனம் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தொழில் ரீதியான பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு.

மேடம் குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

இடபம் வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், களஸ்திர நன்மையுண்டு.

மிதுனம் மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

கும்பம் நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும்.

கடகம் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், உடல்நலம் சீராகும், கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

மகரம் இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

சிம்மம் சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

தனுசு திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

விருச்சிகம் விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே வந்து சேரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்திதரும், பயணத்தால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு.

துலாம் எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

கன்னி கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், தன்னம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 211

பொறாமையிலிருந்து விடுதலை!

எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது... தென்னிந்தியாவில் நாக ரிகத்தைப் பற்றியே அறியாத மக்கள் வாழும் ஒரு கண்காணாத கிராமத்தில் ஒரு வயதான தம்பதியர் இருந்தனர். ஒருநாள், முதன்முறையாக அந்த கிரா மத்தில் ஒரு சந்தை நடந்தது. அந்த வய தான மனிதர் சந்தைக்குச் சென்று காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த எல்லாப் பொருட்களையும் பார்த்தார். ஒரு கண்ணாடியை எடுத்துப் பார்த்து, அதில்தான் கண்டதைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார்! அவர் வாழ்நாளில் அதற்கு முன் ஒருபோதும் கண்ணா டியைப் பார்த்ததில்லை. அதை வீட் டிற்கு எடுத்துச் சென்றார். அவ்வப் பொழுது கண்ணா டியை எடுத்துப் பார்த்து விட்டு அவர் மனைவி வருவதற் குள் மீண்டும் அதை பழைய படியே வைத்துவிடுவார்.

இதை எப்படியோ கவ னித்துவிட்ட மனைவி, ஒரு நாள் அவர் வெளியே சென்றிருந்த சமயத்தில் அதை எடுத்துப்பார்த்து விட்டாள். அவள் ஆச்சரி யத்தில் கத்தினாள், நான் நினைத்தது போலவே இன் னொரு பெண்!

(சிரிப்பு)

நமது தன்னுடைய என்ற எண்ணத்தினாலும் பொறா மையினாலும் நமது கற் பனைகளுக்கு முடிவேயி ன்றி இருக்கிறது! அநேக மாக ஒருபோதும் நமது கற்பனைகள் நிஜத்துடன் ஒத்துப்போனதேயில்லை. நாம் சற்று நின்று நமது பொறாமையினுள் உற்றுநோக்கு வோ மாயின், அது அடிப்படையற்றதும் தேவையற்றதும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

...நீங்கள் யாரையாவது பிடித்து வைத்துக்கொள்ள முயற்சி செய்தால், அது அந்த மனிதருக்கும் கஷ்டத்தையே தருகிறது.

நீங்கள் உங்கள் எல்லாக் கருத்துக் களையும் அவர்மீதே பிரதிபலிப்பீர் கள். அவரும் நீங்கள் அவர்மீது பிரதிபலித்த கருத்துக்களுக் கேற்றவாறு நடந்துகொள்ள வேண்டும். அவர் கூண்டில் அடைக்கப்பட்டது போல் உணர் வார். அவருடைய புறத்தன்மை பிளவுபடும். அவரால் உங்களு டன் இயல்பாக இருக்க முடி யாது. மேலும் இதை ஒரு உறவு முறை என்றும் அழைக்க முடி யாது!

நீங்கள் உண்மையிலேயே ஒரு மனிதரை நேசித்தால் அவரு க்கு விடுதலை கொடுங்கள்! அவரைப் பிடித்து வைத்துக் கொள்ள முயற்சி செய்யாதீர்கள்; அப்பொழுதுதான் உண்மையான உறவு மலரும்; அப்பொழுது தான் ஆழமான அன்பையும் விசுவாசத்தையும் தவிர வேறெ தையும் சார்ந்திராத உறவு மலர முடியும்.

நீங்கள் எதையேனும் பற்றிக் கொள்ள முயற்சி செய்யும் கணமே, அதைத் தவறவிட்டு விடுகிறீர்கள். எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி வெறுமனே அவரை நேசியுங்கள்.

அதிசய உலகம்

விமானத்தில் செல்லோடேப் ஒட்டிய ஊழியர்..
படம் பிடித்து இணையத்தில் பதிவேற்றிய பலே பயணி...

பிரித்தானியாவில் விமானம் ஒன்று புறப்படுவதற்கு முன்பாக அதன் என்ஜினில் செல்லோடேப் ஒட்டப்பட்டதை விமான பயணி புகைப்படம் எடுத்து இணையத்தில் பதிவேற்றியதால் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

பிரித்தானியாவில் ஈஸிஜெட் (Easy Jet) நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று புறப்பட தயாராக இருந்தது.

இந்நிலையில் விமான சேவை நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் விமானம் புறப்படுவதற்கு முன்பாக அதன் என்ஜினில் செல் லோடேப் போட்டு ஒட்டி னார்.

இதை பயணியான ஆடம்வுட் பார்த்து அதிர் ச்சியடைந்தார். மேலும் இந்த காட்சியை தனது செல்போனில் புகைப்படம் எடுத்து டுவிட்டர் இணைய தளத்தில் பதிவேற்றினார்.

அதை பல்லாயிரம் பேர் பார்த்து தங்கள் டுவிட்டர் பக்கங்களில் ரீ டுவீட் செய்ததால் பெரும் பரபர ப்பு ஏற்பட்டது. இந்நிலையில் விமான நிறுவனமே ஆடம்வுட்டின் இந்த பதிவுக்கு பதில் கூறியது. அதில், விமானம் உயரத்தில் பறக்கும்போது அதிவேகமான காற்று பட்டு விமானத்தின் பாகங்களுக்கு சேதம் ஏற்படக்கூடாது என்பதற்காக வழக்கமாக செய்யப்படும் ஏற்பாடுதான் இது என்று தெரிவித்துள்ளது.

சமைப்போம் சுவைப்போம்

இறால் குடைமிளகாய் வறுவல்

தே.பொருட்கள்:

இறால் - 1 கிலோ
பச்சை குடைமிளகாய் - 2
சிவப்பு குடமிளகாய் - 1
வெங்காயம் - 4
பூண்டு - 6 துண்டுகள்
மஞ்சள்தூள் - 1/2 டீ ஸ்பூன்
மிளகுத்தூள் - 1/4 டீ ஸ்பூன்
சீரகம் - 1/2 டீ ஸ்பூன்
கறிவேப்பிலை - ஒரு கொத்து
மிளகாய்த்தூள் - 2 டீ ஸ்பூன்
உப்புத்தூள் - 2 டீ ஸ்பூன்
எண்ணெய் - 1/2 கப்

செய்முறை

இறாலை சுத்தம் செய்து நன்கு கழுவிக் கொண்டு தண்ணீரை ஒட்ட பிழிந்துக் கொள்ள வேண்டும். வெங்காயம், குடைமிளகாயை நறுக்கி வைக்க வேண்டும். பூண்டை நசுக்கி வைக்கவேண்டும். அடி கனமான பாத்திர த்தில் ஒரு டீஸ்பூன் எண்ணெயை ஊற்றி இறாலை போட்டு நன்கு வதக்கி ஒரு தட்டில் கொட்டி வைக்கவேண்டும்.

பிறகு மீதியுள்ள எண்ணெயை ஊற்றி பூண்டை முதலில் போட்டு தொடர்ந்து வெங்காயத்தை போட்டு நன்கு வதக்கவேண்டும். பிறகு குடமிளகாயை கொட்டி கறிவேப்பிலையை போட்டு வதக்க வேண்டும். பிறகு எல்லாத்தூளையும் போட்டு நன்கு கிளறிவிட வேண்டும். குடைமிளகாய் பாதி வேக்காடாக இருக்கும் பொழுது, இறாலைக் கொட்டி எல்லாவற்றையும் சேர்த்து கலக்கி விடவேண்டும். பிறகு ஐந்து நிமிடம் அடுப்பில் வைத்திருந்து நன்கு கிளறிவிட்டு இறக்கி கூடாக பரிமாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கி தோட்டாக்கள் 122 மீட்பு

(கொழும்பு)

திக்வெல்ல, கொட்டஉட கடுகஹ கேவத்த பிரதேச மண்டபத்துக்கு அண்மையில் வீதி வெட்டிக்கொண்டிருந்த போது, துப்பாக்கி தோட்டாக்கள் 122, வெற்று தோட்டாக்கள் 8 மற்றும் குண்டை வெடிக்க வைப்பதற்கான சுற்றமைப்பு ஆகியவற்றை மீட்டுள்ளதாக திக்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

1988-1989 ஆம் ஆண்டு கிளர்ச்சி காலகட்டத்தின் போது இவை மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

பாதுகாப்புப் படையினர் அரசியலில் ஈடுபட தடை

ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாதுகாப்புப் படையினர் அரசியலில் ஈடுபட தடை செய்யப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மெதிரிகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், எதிர்வரும் காலங்களில் முப்படை, பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினருக்கு அரசியல் தடை செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தை செயற்படுத்தி அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு மாத்திரமே அவர்களுக்கு உள்ளது.

எமது நாட்டு இராணுவம் ஒழுக்க சீரான இராணுவம் என்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இனி வரும் காலங்களில் சகல பாடசாலைகளிலும் மாணவர் படையணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்தார். (இ-5)

பத்தாவது ஆண்டு நிறைவில் இராஜேஸ்வரி
புடைவை மாளிகை பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்!

இன்றுபோல் என்றும் இன்முகம்காட்டி
அன்பும் அறமும் காட்டி ஆதரவு நல்கி
நல்வாழ்க்கை வாழ்க இனிதே!

இராஜேஸ்வரி புடைவை மாளிகை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 6953
0777225310
N.நித்தியானந்தன்

மனம் மகிழ்ந்து வாழ்த்துபவர்:
இ.ஸ்ரீதரன்-வேணுகா ட்ரவல்ஸ், நாச்சிமார்
கோவிலடி, யாழ்ப்பாணம்.
(629)

தவறிவிட்டது

திரு.க சுதாகரன் ஆகிய எனது NPJZ-8292 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளுக்குரிய பதிவுச் சான்றிதழ் 22.05.2015 அன்று வீட்டிலிருந்து நெல்லிடிக்கு வரும் வழியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 0779094731 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 1131)

அரச ஊழியர்களுக்கு நிபந்தனைப் பட்டியல்

உடன் அமுலுக்கு வரும் வகையில் அரச ஊழியர்களுக்கு நிபந்தனைகள் அடங்கிய பட்டியல்ஒன்று அரச பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

சகல அரசாங்க திணைக்களங்கள், காரியாலயங்கள் மற்றும் சபைகளுக்கு அமைச்சினால் இது தொடர்பிலான சுற்றறிக்கை ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் மக்கள் தினம் என்று ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் சகல அரச ஊழியர்களும் காரியாலயத்துக்கு கட்டாயம் சமுகமளிக்க வேண்டும்.

மக்கள் அனுப்புகின்ற கடிதங்களுக்கு ஒருவாரகாலத்துக்குள் பதில் அனுப்பு வதாக அறிவிக்க வேண்டும். அத்துடன் ஒரு மாதத்துக்குள் அக்கடிதத்துக்கு கட்டாயம் பதில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மக்கள் கடிதங்களுக்கு பதில் அனுப்பும் போது, கேள்விகள் கேட்கப்பட்டுள்ள மொழியிலேயே பதில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பெரும் நிதியை செலவழித்து மற்றும் அரச சொத்துக்களை பயன்படுத்தி அரச வைபவங்கள் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளை மீறுகின்ற அரச ஊழியர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

வாசு செத்துவிட்டார்; ஆவியே அலைகிறது

(கொழும்பு)

வாசுதேவ நாணயக்கார 1994 ஆம் ஆண்டே மரணித்து விட்டார்.

அவருடைய ஆவியே அலைந்துகொண்டிருக்கிறது என்று நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யவேண்டும் என்று நிறைவேற்று குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்விசாரா ஊழியர்களாக எமக்கு நியமனம் பெற்றுத் தந்த **கௌரவ டக்ளஸ் தேவானந்தா** (பா.உ) (செயலாளர் நாயகம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி) **கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்)** (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் EPDP) ஆகியோருடன் பிரதேச பொறுப்பாளர்களுக்கும் எமது நியமனத்தை நிரந்தர நியமனமாக்குவதற்கு முன்னின்று அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தந்த எமது கல்லூரி பீடாதிபதி **எஸ். அமிர்தலிங்கம் (SLTES)** அவர்களுக்கும் இலங்கை கல்விசாரா ஊழியர் சங்க பொதுச் செயலாளர் AKW **விஜய சேகர** அவர்களுக்கும் யாழ். மாவட்ட பொதுச் செயலாளர் **எஸ். ஜெயராம் (ரமணன்)** அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்விசாரா ஊழியர்கள் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: 63 செவ் 8 ல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: O/L ஜேமன் PR எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும் தொ.இ: B/4590	பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: உத்தரம் கி.பா: 26 உயரம்: 5'1" தகைமை/தொழில்: BA/ பட்டதாரி தொ.இ: G/3355
பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: விசாகம் கி.பா: 40 செவ் 7 ல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: A/L/ அரச தொழில் தொ.இ: B/4592	பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா: 28 செவ் 7 ல் உயரம்: 5'3" தகைமை/தொழில்: BA FOLLOWING/ தனியார் தொழில் தொ.இ: G/3105
பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: பூரம் கி.பா: 28 சூரிசெவ் 10 ல் உயரம்: 160cm தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர் தொ.இ: B/4593	பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 10 1/4 உயரம்: 5'7" தகைமை/தொழில்: BSC / தனியார் தொழில் தொ.இ: G/3194
பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: சித்திரை கி.பா: 28 செவ் 7 ல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில் தொ.இ: B/4595	பிறப்பு: 1969 இந்து நட்சத்திரம்: அச்சுவினி கி.பா: 30 உயரம்: 5'1" தகைமை/தொழில்: BA/ ஆசிரியர் தொ.இ: G/1302

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
Sri Lanka Sangam Jaffna Vanaham.org

அவதூறுகளும் குற்றச்சாட்டுக்களும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை

ஈ.பி.டி.பியின் செயலாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

என்மீதும் நான் சார்ந்த கட்சி மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களும், அவதூறுகளும் அரசியல் உள்நோக்கம் கொண்டவையென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் வடமராட்சி வடக்கு சக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பேச்சுவார்த்தையின் ஊடாகவே எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென்பதை நாம் நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் எமது தமிழ் தலைமைகளின் தவறான வழிநடத்தல்களினால் தான் எமது மக்கள் அளவிட முடியாத இழப்புகளையும் துன்ப துயரங்களையும் எதிர்கொள்ள வேண்டி வந்தது.

இந்நிலையில் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்பதையே எமது பிரதான நோக்கமாக இருந்த போதிலும் இதற்கு மாறாக கூட்டமைப்பினர் எமது மக்களின் பிரச்சினைகளை தீராப்பிரச்சினையாக வைத்துக் கொண்டு அதன்மூலம் தமது சுயலாப அரசியலை முன்னெடுப்பதையே தமது நோக்காகக் கொண்டு இற்றை வரை செயற்படுகின்றனர்.

அந்த வகையில்தான் எனதும் எனது கட்சிசார்ந்ததுமான அவதூறுகளையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டதாக திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நான் ஏனைய தமிழ் அரசியல்வாதிகளைப் போன்று அல்லாமல் நேர்மையான, நியாயமான அரசியலை முன்னெடுக்க நாம் விரும்புகின்றோம் என்றும் சுட்டிக் காட்டினார்.

இச்சந்திப்பின் போது சங்கப் பிரதிநிதிகளது தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அதேவேளை, தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பிலும் செயலாளர் நாயகம் தெளிவுபடுத்தினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், ஈ.பி.டி.பியின் வடமராட்சி கரையோர அமைப்பாளர் ரட்னகுமார், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர். (இ)

வித்தியாவின் கொலையைக்கண்டித்து பேரணியும் மௌனப் பிரார்த்தனையும்

நாளை பருத்தித்துறையில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் வன்புணர்வின் பின்னர் கோரமாக கொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் கொலையைக் கண்டித்தும் மாணவியின் சாவுக்கு நீதி கோரியும் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் அமைதிப் பேரணியும் மௌனப் பிரார்த்தனையும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயிலில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை காந்தி சிலையடியிலிருந்து ஆரம்பமாகும் அமைதிப் பேரணி பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயிலை அடையும் என்றும் அங்கு மாணவியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் இடம் பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை. குறித்த பேரணியையும் மௌனப்பிரார்த்தனையையும் தடை செய்யுமாறும் இதனால் அசம்பாவிதங்கள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்து பருத்தித்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையினையும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்துவது மக்களின் ஜனநாயக உரிமை என்றும் அதனை நீதிமன்றம் ஒருபோதும் தடை செய்யாது என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இத்தகைய போராட்டங்கள் இடம்பெறும் போது பொதுச் சொத்துக்களையும் பொது மக்களையும் பாதுகாப்பது பொலிஸாரின் கடமை.

அதில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய பொலிஸாருக்கு அதிகாரங்கள் இருக்கின்றதாகவும் சுட்டிக்காட்டிய நீதிபதி பொலிஸ் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆர்ப்பாட்டம் இடம்பெறும் போது பொதுமக்களுக்கான பாதுகாப்பை வழங்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

சம்பந்தரின் குருபூசையும் பரிசளிப்பு விழா நிகழ்வும்

வண்ணைசாந்தையர்மடம்ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவுக்கு அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் திருமுறைச் செல்வன் சி.கிருஷ்ணமூர்த்தி முதன்மை விருந்தினராகலந்துகொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

திருமுறை மனனப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுவோர்

பாலர் பிரிவு தரம் 01

முதலாம் இடம் பா.அக்ஷயா (ஏஞ்சல் இன்டர்நஷனல் பாடசாலை), இரண்டாம் இடம் சு.மானுஷா (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாம் இடம் அ.ருஷாளினி (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

பாலர் பிரிவு தரம் 02

முதலாம் இடம் கி.சுரபி (யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கு.யுகானா (யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), மூன்றாம் இடம் உ.யாகினி (யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

கீழ்ப்பிரிவு தரம் 03, 04

முதலாம் இடம் சி.நிரோசினி (யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாம் இடம் ம.சாலினி (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), இரண்டாம் இடம் யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை (இ-3)

விருது வழங்கும் விழா

(DMI) கொம்பியூட்டர் எடியுகேசனின் வருடாந்த விருது வழங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் (DMI Computer Education இன் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம் ஆகிய பயிற்சி மையங்களூடாக கணனி, ஆங்கில கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளன. (இ-3)

கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் தொழில் நுட்பவியல் கல்லூரியில் கணனி தொடர்பான பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 19.06.2015 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப தேசிய சான்றிதழ்-NVQ Level 4 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், போதனா மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கணனி வலையமைப்புக்கான சான்றிதழ்-NVQ Level 4 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், விஞ்ஞானம், போதனா மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இ-3)

ஏழாலை வடக்கு மக்கள் முன்னேற்றக்கழகத்தினால் பல்வேறுபட்ட உதவிகள் மக்களுக்கு வழங்கிவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை வடக்கு மக்கள் முன்னேற்றச்சங்கத்தின் நிதியுதவியுடன் பிரதேச மக்களுக்கு பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிலையத்தின் தலைவர் நித்திரராஜ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு ஏழாலை வடக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான கோழி வளர்ப்பு உதவிகள், நிலையத்துக்கான தையல் இயந்திரங்கள், இலவச கணனி வகுப்புகளுக்கான கணனிகள், சிறுவர்பாடசாலைக்கான விளையாட்டு உபகரணங்கள், இலவச கணித, ஆங்கில வகுப்புகளுக்கான உதவிகள் என்பன நிலையத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், பா.கஜதீபன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் அ.தவப் பிரகாசம் மற்றும் கிராமசேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிரான் அலஸ் சிறையிலிருக்க வேண்டியவர்

நீதிமன்றில் வாதம்

சிறையில் இருக்க வேண்டிய டிரான் அலஸ் வெளியில் இருப்பதாகவும் இதன்மூலம் விசாரணைகளில் வெளிப்படைத் தன்மையில்லை என்பது புலப்படுவதாகவும் ராடா நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் சாலிய விக்ரமசூரிய சார்பில் ஆஜரான சட்டத்தரணி நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் டி சில்வா நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் இதனை அவர் கூறியுள்ளார்.

எமில் காந்தனை, சாலிய விக்ரமசூரியவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸே அறிமுகம் செய்தார். விசாரணைகளில் வெளிப்படைத் தன்மை இல்லாததன் காரணமாகவே பொலிஸார் டிரான் அலஸை இதுவரை கைது செய்யவில்லை எனவும் சிறையில் இருக்க வேண்டியவர் வெளியில் சுதந்திரமாக நடமாடுவதாகவும் சட்டத்தரணி அனில் டி சில்வா கூறியுள்ளார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக அழிவடைந்த வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ராடா நிறுவனத்தில் கோடிக்கணக்கில் மோசடி நடந்துள்ளதாகவும் அந்தப் பணம் விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த எமில் காந்தன் என்பவருக்கு வழங்கியதாக குற்றம் சுமத்தி பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணைப் பிரிவு வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர் சார்பில் சட்டத்தரணி அனில் டி சில்வா ஆஜராகி வாதிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

இளைஞர் தொழிற்பயிற்சிக்கு கைகொடுக்கும் ஜேர்மன் நாட்டின் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

தொழிற்பயிற்சி துறையில் இலங்கைக்கும் ஜேர்மன் நாட்டிற்கும் இடையிலான கூட்டிணைப்பானது 5 தசாப்தங்களிற்கும் மேலான ஒன்றாகும். இது 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திலிருந்து (CGTTI) ஆரம்பமாகின்றது. இது ஜேர்மன் நாட்டின் இலங்கையின் அபிவிருத்தி மீதான ஆதரவினை எடுத்துக்காட்டும் அதேவேளை இலங்கையில் தொழிற்கல்வி துறையின் அபிவிருத்தியில் முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ளது. இவற்றில் சிலோன் ஜேர்மன் தொழிற் பயிற்சி நிறுவனம்.(CGTTI) பயிலுநர் பயிற்சி நிறுவனம் (ATI), சிலோன் ஜேர்மன் புகையிரத பயிற்சி நிறுவனம் (SLGRTTC) மற்றும் விவசாய எந்திரவியல் பயிற்சி நிறுவனம் (FMTC) ஆகிய நிறுவனங்களை உருவாக்கியது மற்றும் பயிற்சிகளை தரநிர்ணயம் செய்தல் போன்ற வற்றினை இக்கூட்டிணைப்பின் முக்கியமான அடைவுகளாக கூறலாம்.

சகல வசதிகளையும் கொண்ட இலங்கை- ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனமானது கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது

இக்கூட்டிணைப்பின் ஒரு மைல்கல்லாக கிளிநொச்சியில் ஜேர்மன் நாட்டின் அபிவிருத்திக்கான கூட்டுறவு GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) மற்றும் ஜேர்மன் அபிவிருத்தி வங்கி (KfW) என்பவற்றின் நிதியனுசரணையுடன் 8.7 மில்லியன் யூரோ செலவில் கிளிநொச்சி அறிவியல் நகரில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமானது-Sri Lankan- German Training Institute(S LGTI) உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இது இன்றும்தொழிற்றுறையில் திறன்மிக்க இளைஞர்களை உருவாக்கும் 50 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட சிலோன் ஜேர்மன் தொழிற் பயிற்சி நிறுவனத்தை போலவே தற்கால தொழிற்றுறை சந்தையில் உள்ள தொழில் வல்லுநர்களுக்கான கேள்விக்கேற்ப பேரினால் பாதிக்கப்பட்ட வடக்கிலேயுள்ள இளையோர்களை தொழிற்றிறன் மிக்கவர்களாக உருவாக்குவதை நோக்கமாக கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எதிர்வரும் 2016 மே மாதமளவில் முதற்கட்ட பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ள. இந்நிறுவனவத்திலே இக்கற்கை நெறிகளை உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (NVQ-6),டிப்ளோமா(NVQ-5)மற்றும் சான்றிதழ்(NVQ-4)தரத்திலே ஒவ்வொரு துறையிலும் பெற்றுக் கொள்ளலாம். இத்தொழில்நுட்ப நிறுவன வளாகமானது 15 ஏக்கர் நிலப்பரப்பில் அதி நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், தற்கால தொழில் நுட்பங்களுக்கான ஆய்வு கூடங்கள் மற்றும் 180 மாணவர்களுக்கான விடுதி வசதிகள் என்பவற்றுடன் அமைக்கப்பட்டு வருகிறது. அத்துடன் இந்நிறுவனமானது ஒவ்வொரு வருடமும் 200 மாணவர்கள் உள்வாங்கி 600 மாணவர்களை பயிற்றுவிக்க கூடியதானதாக அமையவுள்ளது. இந்நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு தேசிய தொழில் தகைமை (NVQ)-3 இனை கொண்டிருத்தல் வேண்டும். எனவே இத்தகைமையை வழங்கி இந்நிறுவனத்தில் இணைந்து கொள்ளக் கூடியவாறு வடக்கு மாகணத்திலுள்ள இளையோர்களை தயார்ப்படுத்தவும் இப்பிராந்தியத்தில் தொழிற்றிறன் மிக்க இளையோரை உருவாக்கவும் GIZ (Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit) நிறுவனமானது இலங்கை அரசாங்கத்தின் கூட்டிணைப்போடு தொழிற்பயிற்சி அதிகார சபையின் (VTA) (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு) பயிற்சி நிலையங்களையும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை (NAITA) கிளிநொச்சி, Don Bosco (மன்னார், பூநகரி மற்றும் வவுனியா), மற்றும் ORHAN (வவுனியா) என்பவற்றின் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்து தேவையான உபகரணங்களையும் வழங்கி இப்பயிற்சி நிலையங்களை சிறந்த தொழிற்பயிற்சி நிலையங்களாக அபிவிருத்தி செய்துள்ளது. இப்பயிற்சி நிலையங்களில் தொழில் நுட்ப கல்வியுடன் தொழில் வாய்ப்பொன்றின் போது தனியார் துறையினரால் பயிலுநர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆங்கில மொழியறிவு மற்றும் ஆளுமைத்திறன் என்பவையும் போதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக கடந்த காலங்களில் இப்பயிற்சி நிறுவனங்களில் வாகன தொழில்நுட்பத் துறையில் பயின்றவர்கள் DIMO,Lanka Ashok Leyland, Sampath Motors, Swani Motors போன்ற நிறுவனங்களிலும் இலத்திரனியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைகளில் பயின்றவர்கள் Abans, Singer, SriLanka Telecom போன்ற நிறுவனங்களிலும் மற்றும் மின்னிணைப்பு துறையில் பயின்றவர்கள் Fentons,MAS holding மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களிலும் கவர்ச்சிகரமான பயிலுநர் கொடுப்பனவுகளுடன் உள்ளக பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவை மட்டுமன்றி இப்பிராந்தியத்தில் தேவை மிக்க வளர்ந்து வரும் துறைகளான வெதுப்பக தொழில் நுட்பம் (Bakery Technology) மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் (Hospitality Management) போன்ற துறைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவற்றின் முன்மாதிரியாக யாழ்ப்பாணத்தில் தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து Jetwing Hotels நிறுவனமானது காரைநகர் பயிற்சி நிலையத்தில் 75 இளைஞர்- யுவதிகளுக்கு விருந்தோம்பல் முகாமைத்துவம் பயிற்சியை ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது. இப்பயிலுநர்களில் 90 வீதமானவர்கள் பயிற்சியின் நிறைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் "Jetwing Yarl" விடுதியில் நிரந்தர பணியாளர்களாக உள்வாங்கப்படவுள்ளார்கள். இவ்வாறே இன்னும் பல துறைகளிலும் தனியார் துறையினரின் கூட்டிணைப்போடு தொழிற் பயிற்சியை முன்னெடுப்பதற்கும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் GIZ (Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit) நிறுவனமானது தொடர்ச்சியாக பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலே தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) இன் பயிற்சி நிலையமானது தேவையான கட்டடங்கள், ஆய்வு கூடங்கள் மற்றும் வேலைத்தள உபகரணங்களுடன் நவீன மயப்படுத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டிற்கு பின்னராக மொத்தமாக 82 மாணவர்கள் மின்னியல், இலத்திரனியல், தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் வாகன தொழில்நுட்ப துறையில் NVQ-4 தரத்திலான கற்கைநெறியை பூர்த்தி செய்துள்ளதுடன் பெரும்பான்மையானோர் உள்ளக பயிற்சிக்காக இணைக்கப்பட்ட நிறுவனங்களிலேயே பயிற்சிக்காலம் முடிந்த பின்பும் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் வவுனியா தவசிக்குளத்தில் அமைந்துள்ள (ORHAN) நிறுவனமானது மாற்று வலுவுள்ளவர்களுக்கு தொழிற்பயிற்சியை வழங்கும் வகையில் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் துறையில் தொழிற்பயிற்சிகளை வழங்கக்கூடிய வகையில் தேவையான கட்டடங்கள் மற்றும் ஆய்வு கூட பயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர முல்லைத்தீவு மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (VTA) மாங்குளம் வீதியில் அமைந்துள்ள பயிற்சி நிலையமானது வெதுப்பக தொழில்நுட்பம், உணவு பதனிடல், மின்னியல், இலத்திரனியல் மற்றும் வாகன தொழில்நுட்பம் போன்ற துறைகளை பயிற்றுவதற்கு ஏற்ற வகையில் அனைத்து வகையான உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ஏனைய செயல்முறை கற்கைகளுக்கு தேவையான உபகரணத் தொகுதியும்வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறே கிளிநொச்சி A-9 வீதியில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி அதிகார சபையின் (VTA) பயிற்சி நிலையத்தில் கட்டுமானத்துறை மற்றும் வெதுப்பக தொழில்நுட்பம் ஆகிய துறைகளும் யாழ்ப்பாண தொழில் பயிற்சி அதிகாரசபையின் (VTA) கைதடி A-9 வீதியில் பயிற்சி நிலையமானது மின்னியல், இலத்திரனியல், வாகன தொழில் நுட்பம் மற்றும் காய்ச்சி ஒட்டுதல் போன்ற துறைகளை பயிற்றுவிப்பதற்கும் ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி நிலையங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கக்கூடிய வகையில் ஆர்வமுள்ள இளையோர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றன. மேலும் விபரங்களை அறிந்து கொள்ளவோ அல்லது பயிற்சியில் இணைந்து கொள்ளவோ மேலே குறிப்பிட்டுள்ள பயிற்சி நிலையங்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

மேலும் GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) நிறுவனமானது பிராந்திய ரீதியாக தொழில் வழிகாட்டல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. இந்நிகழ்வானது GIZ (Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit) நிறுவனத்தின் அலுவலர்களுடன் அவ்வப்பிராந்திய தொழிற்பயிற்சி நிலைய அலுவலர்களும் இணைந்து நிகழ்வில் பங்கு பற்றும் இளையோர்களுக்கு பயிற்சி கிடைக்கக்கூடிய துறைகள் மற்றும் தொடர்ந்து அத்துறையில் பட்டப் படிப்பு வரை செல்லக்கூடிய படிமுறைகள், அதற்கான பயிற்சி நிலையங்கள் என்பன பற்றியும் ஒவ்வொரு தொழிற்றுறையிலும் கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புகள் என்பன பற்றியும் தெளிவூட்டல்களை வழங்கி வருகின்றனர்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்டு வரும் தொழிற் பயிற்சி கல்லூரியானது இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் மாணவர்களை உள்வாங்குவதற்கு தயாராகவுள்ள போதும் இவ்வாய்ப்பினை சரியான முறையில் பயன்படுத்தி இப்பிராந்தியத்தில் தொழிற்றிறன் மிக்க இளையோராக தம்மை வளர்த்து சிறந்த எதிர்காலத்தினை அமைத்துக் கொள்வது இப்பிராந்தியத்தில் உள்ள இளையோரினதும் அவர்களின் பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

Vocational Training In the North of SriLanka (VT-North)
Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ) GmbH
No.33,4th Lane, Kanagapuram,Kilinochchi
T.P:021 228 5668/378
www.vtnaita.com
www.giz.de

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொக்கிளாயில் தனியார் காணியில் விகாரை அமைக்கும் பணியை உடன் நிறுத்த வேண்டும்

சிவசக்திஆனந்தன் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்

(குருமன்காடு)

கொக்கிளாயில் விகாரை கட்டும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொக்கிளாயில் வைத்தியசாலை அமைந்துள்ள பகுதி மற்றும் அதற்கு அண்மையிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை நீதிமன்றத்தின் ஆணையையும் மீறி அபகரித்து படைத்தரப்பினரின் உதவியுடன் பௌத்த துறவி ஒருவர் விகாரையை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இக்காணி அபகரிக்கப்பட்டதை எதிர்த்து கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு முறைப்பாடுகளைச் செய்தும் இன்றுவரை குறித்த காணி உரியவரிடம் கையளிக்கப்படவில்லை. இந்நிலையில் தற்பொழுது அங்கு விகாரையை கட்டும் பணி துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுவரும் பௌத்த விகாரை கட்டுமானங்களுக்கு எதிராகவும், குறிப்பாக தனியார் காணிகளை அபகரித்து விகாரை அமைக்கும் பணிகளுக்கு எதிராகவும் நாம் தொடர்ந்தும் எமது எதிர்ப்பினைத் தெரிவித்து வந்துள்ளோம்.

மேற்படி கொக்கிளாய் தனியார் காணி தொடர்பாக முந்தைய அரசாங்கத்துடனும் பல்வேறு முறைப்பாடுகளைச் செய்துள்ளோம். கொக்கிளாயில் உள்ள தனியார் காணி தொடர்பான வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் இப்பொழுது கொக்கிளாயில் உள்ள தனியார் காணியில் விகாரை கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களின் தலைமையில் படையினர் உங்களது ஆணைக்குக் கட்டுப்பட்டு இத்தகைய சட்டவிரோதமாக தர்மத்துக்கும் நீதிக்கும் புறம்பான பணிகளில் ஈடுபட மாட்டார்கள் என்று நினைத்திருந்தோம். ஆனால், இன்றும் சட்டத்தின்மீது எவ்வித அச்சமும் தயக்கமுமின்றி சட்டத்தை ஒதுக்கி வைத்து விட்டு, நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டு கட்டுமானப் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

தங்களது அரசாங்கம் இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த தவறுமானால், நல்லிணக்கம் என்பது அர்த்த மற்றதாகிவிடும் என்று நாங்கள் உணர்கின்றோம். ஆகவே, தாங்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு, கட்டுமானப் பணிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, படையினரை திரும்பவும் தங்களது முகாம்களுக்குள் இருக்குமாறு பணிப்புரை வழங்க வேண்டும்.

அத்துடன், குறித்த காணியை உரித்துடைய தனியாருக்கே ஒப்படைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். இது மட்டுமே வடமாகாணத்தில் அமைதியையும் இயல்பு வாழ்வையும் மீளக் கட்டியெழுப்பும். இந்த விடயத்தில் தங்களது காத்திரமான உடனடி நடவடிக்கையை எதிர்பார்க்கின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (2-250)

பாலியல் வன்முறைகளுக்கு எதிராக மன்னாரில் நேற்று அமைதி ஊர்வலம்

வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு நீதி கோரியும் குறிப்பாக புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்தும் கைதுசெய்யப்பட்ட 9 குற்றவாளிகளுக்கும் அதியுயர் தண்டனை வழங்கக்கோரியும் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த அமைதி ஊர்வலம், நேற்று இடம்பெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந் தன் தலைமையில் நேற்று காலை 9 மணியளவில் மன்னார் பொது நூலகத்துக்கு முன்பாக குறித்த அமைதி ஊர்வலம் ஆரம்பமானது.

நூற்றுக்கணக்கான பெண்கள் தமது வாயை கறுப்புத் துணியினால் கட்டி, சுலோகங்களை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்று மன்னார் பஸார் பகுதியில் ஒன்று கூடினர்.

அங்கு சுமார் 30 நிமிடங்கள் அமைதியான முறையில் சுலோகங்களை ஏந்தியவாறு நின்றனர். பின்னர் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கையெழுத்துக்கள் இடப்பட்டு, பிரதான வீதியூடாக சென்று மீண்டும் மன்னார் பொது நூலக நுழைவாயிலை சென்றடைந்தனர். (2)

புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு நிகழ்வு நாடளாவியரீதியில் ஆரம்பம்

(மன்னார்)

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் சமூக அபிவிருத்திப் பிரிவினால் இலங்கையில் நடைமுறைப்படுத்தும் சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தின நிகழ்வு, நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த வகையில் நேற்று காலை 9 மணியளவில் முசலி பிரதேச செயலாளர் செல்லத்துரை கேதீஸ்வரன் முசலி பிரதேசத்துக்கான சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு நிகழ்வை வைபக ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வு, மே 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 10ஆம் திகதி வரை போதை தொடர்பான எதிர்ப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

முசலி பிரதேச வாழ்வின் பிரதேச உத்தியோகஸ்தர் எம்.பிர்தொஸ், வங்கி முகாமையாளர் பீரிஸ் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நதிர், அஸ்லிப் மற்றும் பூநொச்சிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவு திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் வாஜத் ஆகியோர் கலந்து கொண்டனர். (2)

'வன்முறையை சமூகத்தில் ஏற்றுக்கொள்ளமாட்டோம்'

பெண்கள் அமைப்புக்கள் வவுனியாவில் போராட்டம்

பெண்கள் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் இணைந்து பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு துரிதமான நீதி கோரி வவுனியாவில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் வாய்களை கறுப்புத் துணிகளால் கட்டியவாறு பதாகைகளை ஏந்தியிருந்தனர். இப்போராட்டம், வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக காலை 9 மணிக்கு ஆரம்பமானது. பெண்கள் அமைப்புகள், பெண்கள் அமைப்புகளின் வலையமைப்பு மற்றும் பெண்களுக்காக பணியாற்றும் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை சமூகத்தில் ஏற்றுக் கொள்ளமாட்டோம், பெண்கள், சிறுவர்களுக்கான வன்முறைகளுக்கு துரிதமான நீதியை பெற்றுத்தா என்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர். இப்போராட்டம் 10.45 மணியளவில் நிறைவுபெற்றது. (2)

வாகனம் விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் பலி; 8பேர் காயம்

மன்னார் பிரதான பாலத்தடியில் சம்பவம்

கற்பிட்டியில் நடைபெற்ற திருமண நிகழ்விற்கு சென்றுவிட்டு திரும்பிய படிரக வாகனம் விபத்திற்குள்ளாகியதில் பெண் ஒருவர் பலியானதுடன் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை மன்னார் பிரதான பாலத்தடியில் நடைபெற்றது.

இதில் மன்னார், எருக்கலம்பிட்டியை சேர்ந்த முனாஸ் முனிதா (வயது-52) என் பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார். காயமடைந்த எட்டுப்பேரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். எம்.றிஸ்வான (வயது-50), எப்.ஜஸ்மிலா (வயது-54), எம்.சகானா(வயது-9), ஆர்.றம்லா (வயது-19), ஆர்.தஸ்லினா(வயது-50), ஆர்.தஸ்வியாக (வயது-15), ஆர்.றிஸ்கா(வயது-10), எஸ்.எச். முனபர்(வயது-37) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கற்பிட்டியில் திருமண நிகழ்வொன்றுக்குச் சென்று விட்டு நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட படிரக வாகனம் ஒன்று நேற்று அதிகாலை மன்னார் தீவையும் நிலப்பரப்பையும் இணைக்கும் பிரதான தாம்போதியில் விபத்துக்குள்ளானது.

பாலத்தை அண்டிய தாம்போதி பகுதியில் வேகமாக வந்துகொண்டிருந்த படிரக டிப்பர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததினால் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்ததினாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (2)

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

வித்தியாவின் படுகொலைக்கு நீதிகோரி நேற்று அமைதிவழி கறுப்புப்பட்டி போர்



(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட மகளிர் சம்மேளனம் மற்றும் சிறுகுகள் பண்பாட்டு மையம் ஆகிய வற்றின் ஏற்பாட்டில் புங்குடுதீவு மாணவி சிவ லோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்விற் குட்படுத்தப்பட்டு பின்னர் படுகொலை செய் யப்பட்ட சம்பவத்திற்கு நீதிகோரி வாயை கறுப்புப் துணியினால் கட்டி நேற்றைய தினம் காலை9மணிதொடக்கம்10மணிவரைஅமைதி வழி கறுப்புப்பட்டி போராட்டம் ஒன்றை கிளி நொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடி நடத்தினர்.

இதன்போது ஆண்கள், பெண்கள் என இரு பாலாரும் பதாகைகள் ஏந்தியவாறு அமைதி யான முறையில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது அவர்கள், "பெண்களுக்கும் சிறுபிள்ளை களுக்கும் எதிரான வன்முறைகளுக்கான நீதியைதுரிதப்படுத்தக்கோருகின்றோம், பெண்க ளுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகளை (எங்களது நாட்டில் சமூக த்தில்) எப்போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் ஆகிய பதாகைகளை ஏந்தி இருந்தனர். இப் போராட்டத்தில் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நேற் றையதினம் 25 மாவட்டங்களில் முன்னெடுக் கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (2-277)

வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறாமையினால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றோம்

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராமங் களில் வசிக்கின்ற மக்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். கிளி நொச்சி மாவட்டத்தில் உள்ள பல கிராமங்கள் வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சூழ்நிலை யில் இதுவரை முன்னேற்றம் எதுவும் காணாத நிலையில் உள்ளன.

இங்கு மீளக்குடியேறிய மக்களுக்கு வீட் டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது வன்னி யுத்தத்தின் போது அனைத்தையும் இழந்து குடும்ப அங் கத்தவர்களை பிரிந்த நிலையிலும் மீளக் குடியமர்ந்த பல குடும்பங்கள் வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறாமையால் பல்வேறு சிரமங் களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாகவன்னி யுத்த சூழ்நிலைமுடிவுற்று மீளக்குடியமர்ந்தநிலையில்தற்போதுதிருமணம் செய்தவர்களும் யுத்தம் நடந்த காலப்பகு தியில் சொந்த இடத்தில் வசிக்காமல் வேறு மாவ ட்டங்களில் வசித்து விட்டு தற்போது சொந்த இடங்களுக்கு மீள வருகை தந்தவர்களுக்கும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் மீளக் குடியேறிய ஆரம்பகால குடும்பங்களில் வயது வந்த பிள்ளைகள் வயோதிபர்கள் உள்ளனர். இவ்வாறான குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங் கள் வழங்கப்படாமல் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டுத்திட்டம் வழங்கப்படாமல் இருப்பது குறித்து பாதிக்கப்பட்ட குடும்பங்களை விசா ரித்த போது, கிராம அலுவலரை கேட்குமாறு வீட்டுத்திட்டத்திற்கு பொறுப்பானவர்கள் கூற கிராம அலுவலக பிரதேச செயலாளர் தொடர்பு கொள்ளுமாறு கூற இவ்வாறு தொடர்கதை யாக அமைகின்றது.

இந்தவிடயம்தொடர்பில்வடக்குமாகாணசபை அக்கறை கொண்டு ஒவ்வொரு கிராம ரீதியாக மக்களை அணுகி தரவுகளைப்பெற்று பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு உதவ முன் வரவேண்டு மென கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

மதகு பால ஓட்டையை சீர்செய்து தாருங்கள்

கிளிநொச்சி, அக்கராயன் காட்டம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள மதகுப் பால த்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை காரணமாக மோட் டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டியில் செல்பவர்கள் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

அக்கராயன் மணியங்குளத்தின் பின்புற மாகவுள்ள பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இந்த மணல் அகழ்வில் ஈடுபடுகின்ற உழவு இயந்திர ங்கள் மற்றும் டிப்பர் ரக வாகனங்கள் இந்த வீதியின் ஊடாக இரவில் பயணிக்கின்றன. இத னால், அதிக பாரத்தைத் தாங்க முடியாத இந்த மதகுப் பாலத்தில் ஓட்டை வீழ்ந்துள்ளது. மீள்குடியேற்றத்தின் பின்னர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் அமைக் கப்பட்ட இந்த மதகு பாலமே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் மதகுப் பாலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டையை செப்பனி ட்டு போக்குவரத்திற்கு உதவுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

மக்கள் இலகுவாக சேவையினைப் பெறும் வகையில் கிராமிய வங்கிகளின் செயற்பாடு அமைய வேண்டும்

சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிராம மக்கள் இலகுவாக சேவைகளைப் பெறும் வகையில் கிராமிய வங்கிகள் பணியாற்ற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திர குமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கரைச்சி தெற்கு பலநோ க்கு கூட்டுறவுச் சங்கம் நவீன மயப்படுத் தப்பட்டு மீளமைக்கப்பட்ட கிராமிய வங்கி யினை அண்மையில் திறந்துவைத்து உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகை யில்,

கடந்த யுத்த காலத்தில் நெருக்கடிகளில் வாழ்ந்த மக்களுக்கு கூட்டுறவுத்துறை மிகு ந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தப் பாதிப்புக்களால் வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கி வந்த அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் தமது சொத்துக்களை முற்றாக இழந்து விட்டன. அதுமட்டுமன்றி, பல சங்கங்கள் தமது பணியாளர்களையும் இழந்துள்ளன.

இதனால், மீள்குடியேறிய காலத்தில் கூட்டுறவு அமைப்புகள் இயங்கமுடியாத நிலை காணப்பட்டது. அப்போது அரசாங்க மும் பல்வேறு தொண்டர் அமைப்புகளும் கூட்டுறவுத்துறையை மீளவும் வளப்படுத் துவதற்காக பல்வேறு உதவிகளை வழங் கின.

இருப்பினும், இன்று கூட்டுறவுச் சங்க ங்கள் தொடர்ந்தும் முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டுமாயின், பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றன. மேலும் உருவாகிவரும் போட்டிச் சந்தைக்கு ஈடு கொடுக்கும் வகையில், செயல் வீச்சுடன் இயங்கக்கூடிய வகையில் கூட்டுறவுச் சங் கங்கள் தம்மை மாற்றிக்கொள்ள வேண் டும். ஆயினும், இலாப நோக்கங்களை மட்டும் மையமாகக்கொண்டு செயற்படுவ தைத் தவிர்த்து, சேவை நோக்கையும் தன்னகத்தே கொண்டவையாக கூட்டுறவுத் துறை இயங்கவேண்டும்.

எனவே, கிராம மக்களின் மேம்பாட்டை இலக்காகக்கொண்டு இயங்கும் இவ்வாறான கிராம வங்கிகள் வாழ்வாதாரத்தை மேம் படுத்துவதற்காக காத்திருக்கும் மக்களுக்கு தமது சேவையை இலகுவான முறையில் வழங்க முன்வர வேண்டும். இன்று எத் தனை வங்கிகள் இயங்கிவந்தாலும், அவற் றில் சாதாரண மக்கள் தமது கடன் வசதிக ளைப் பெற்றுக்கொள்வதில் பாரிய நெருக் கடிகளை எதிர்கொள்கின்றனர்.

தமது வாழ்வாதாரத்திற்கான தொழில் வாய்ப்பை விருத்தி செய்வதற்காக வங்கிக் கடனைப் பெற முயற்சிக்கும் ஒருவர் ஒன்று க்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களை பிணைக்கு ஒப்பமிட அழைத்து செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எனவே, கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதை இலக்காகக்கொண்டு இயங் கும் இவ்வாறான கிராமிய வங்கிகள் மக்க ளுக்கு இலகுவாக சேவையாற்றக்கூடிய வகை யில் செயலாற்ற வேண்டியது அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்தி ஜீஜாவைச் சந்தித்த டினிகா!

நீநீ ஜீஜா ஒரு குட்டிப் பெண். அவளை நீநி என்றும் அழைக்கலாம். ஜீஜா என்றும் அழைக்கலாம். அவளை நிறையப் பேருக்குப் பிடிக்கும். காரணம் அவள் எல்லோரிடமும் அவ்வளவு அன்போடு பழகுவாள். அவளுக்கு மேஜிக்கூடத் தெரியும். ஆனால் அது கொஞ்சம் ரகசியம். அதை எல்லோரிடமும் காட்டிக் கொள்ள மாட்டாள்.

அன்று உடல்நிலை சரியில்லாததால் நீநி பள்ளிக்குச் செல்லவில்லை. வீட்டில் தனியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். அப்போது டொக்... டொக்... எனக் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அட யாருப்பா இந்த நேரத்தில்? என்றபடியே எழுந்து சென்று கதவைத் திறந்தாள். வாசலில் நான்கு பெரிய்ய்ய்ய கால்கள் மட்டும் தெரிந்தன. தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள் ஜீஜா.

வெளியே பச்சை நிறத்தில் நான்கு மாடி உயரத்துக்கு ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அதன் பற்கள் நம்கை அளவுக்கு இருக்கும். இரண்டு கண்கள். நீண்ட கழுத்து.

ஆனாலும் நீநி பயப்படவில்லை. அவள்தான் எல்லோருக்கும் பிடித்த வளாயிற்றே. எதுக்கு பயப்படனும்? அதனால் அந்த உருவத்தைப் பார்

த்து என்னப்பா... என்ன வேண்டும்? என்று கை காட்டிக் கேட்டாள்.

அதன் தலை நான்கு மாடி உயரத்தில் இருந்ததால் அதற்கு நீநி பேசுவது கேட்கவில்லை. உடனே ஜீஜா பம்பம்போலே பம்பம்போலே என்ற மந்திரத்தை சுறினாள். உடனே அவள் அந்த உருவத்தின் உயரத்துக்கு பெரியவளாக மாறினாள்.

ம்... இப்ப சொல்லு என்ன வேணும் உனக்கு? எதற்கு என்னை எழுப்பினே? என்று கேட்டாள். நான் இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன். ரொம்ப பசிக்குது. சாப்பிட ஏதாச்சும் தாயேன் என்றது அது.

தர்றேன். ஆனா நீ இவ்வளவு பெருசா இருந்தா எப்படி வீட்டுக்குள்ளே வருவே? என்று கேட்டாள் நீநி.

அது திகைப்புடன் யோசித்தது. கவலைப்படாதே என்ற நீநி பம்பம்போலே, பம்பம்போலே என்ற மந்திரத்தைச் சொல்லி அதன் தலையில் ஒரு குட்டு குட்டினாள். உடனே அது நாய்குட்டி அளவுக்கு மாறிவிட்டது. நீநியும் அவளுடைய சாதாரண உருவத்துக்கு வந்துவிட்டாள். வா என வீட்டுக்குள் சென்றாள்.

ராகாதா என்று கேட்டது.

அப்போ கொதகொத குள்ளா... கொதகொத குள்ளா,னு சொல்லிட்டு இரு. சீக்கீரம் தயாராகிடும் என்றாள் நீநி.

அந்த விலங்கும் கொதகொத குள்ளா...கொதகொத குள்ளானு சொல்லிக்கொண்டே இருந்தது. கஞ்சியும் சீக்கீரம் தயாரானது.

அந்த கூடான பாத்திரத்தை துணியால் பிடித்து எடுத்து வந்து முன் அறையில் வைத்த நீநி கூடு குறைய ஒரு கரண்டியால் துழாவினாள்.

ஆமா நீ யாரு? எங்கிருந்து வர்றே என்று கேட்டாள். எங்களை டைனோசர்னு கூப்பிடுவாங்க. நான் ஆறரைக் கோடி வருடத்துக்கு முன்னாடி இருந்து வர்றேன்.

இப்போ ஊர் உலகம் எப்படி இருக்குனு பார்க்கலாம்,னு வந்தேன் என்றது அது. ஓ...நீதான் டைனோசரா? உன் பேரு என்ன டைனோசர் என்று கேட்டாள் நீநி.

பேரா அப்படினா?

எனக்கு நீநிஜீஜானு பேரு. எங்க அப்பா, அம்மா, ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் நீநி, னு கூப்பிடுவாங்க.

உன்னை எப்படி கூப்பிடுவாங்க? என்று கேட்டாள். எனக்கு பேரு எல்லாம் இல்லை.

நீயே ஒரு பேரு வையேன் என்றது டைனோசர்.

நீநி கொஞ்ச நேரம் யோசித்து விட்டு டினிகா... நல்லா இருக்கா? என்றாள். டினிகா... நல்லா இருக்கே என்றது அது குஷியாக.

அதற்குள் கஞ்சி ஆறியிருந்தது. டினிகா அதனை ருசித்துக் குத்தது.

நேரமாச்சு நான் கிளம்புறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது டினிகா.

நீநி ஜீஜாவும் உறங்கச் சென்றுவிட்டாள்.

கொஞ்ச நேரத்தில் டொக்... டொக்... என்று மீண்டும் கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால், மீண்டும் டினிகா. இப்ப என்னப்பா? என்று கேட்டாள் நீநி.

என்னைக்குட்டியாமாத்தினியே...

திரும்ப பெருசா மாத்து. எங்க கூட்டத்துல என்னைச் சேர்த்துக்க மாட்டேங்கிறாங்க என்றது டைனோசர். ஸ்ஸ்ஸாரிப்பா மறந்தே போயிட்டேன் என்ற நீநிஜீஜா மந்திரத்தை சொன்னாள். பம்பம்போலே பம்பம்போலே...

☆☆☆☆☆☆☆☆☆☆☆

ஜஸ்கீரீம் சாப்பிடுறியா?

ஜஸ்கீரீமா ...அப்படின்னா?

ஜஸ்கீரீம்னா ஜஸ்கீரீம்தான்; என்ன சுவையில் இருக்கும்?

ஜஸ்கீரீம் மாதிரிதான் இருக்கும்: வேற ஏதாச்சும் இருக்கா?

நூடுல்ஸ் சாப்பிடுறியா?

வேணாம். கஞ்சி கிடைக்குமா? என்று கேட்டது அது. நீநிக்கு கஞ்சி வைக்கத் தெரியாது. ஆனாலும் சமையல் புத்தகத்தில் இருந்ததைப் படித்து செய்து விடலாம் என்ற நம்பிக்கையில்அந்தவிலங்கை உட்காரச் சொல்லிவிட்டு சமையல் அறைக்குச் சென்றாள்.

புத்தகத்தில் சொன்னது மாதிரியே பாத்திரத்தில் தண்ணீர் வைத்து கொஞ்சம் அரிசிபோட்டு கொஞ்சம் உப்பும் போட்டாள் குட்டியான அந்த விலங்குசமையல்அறையின்உள்ளே வந்து திட்டு மீது ஏறி பாத்திரத்தை ஆர்வமாகப் பார்த்தது. சீக்கிரம் தயா

இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06:2015
02

- 1615 - பிரெஞ்சு கத்தோலிக்க மதப் பரப்புனர்களின் முதற்தொகுதியினர் கனடாவில் கியூபெக் நகரை அடைந்தனர்.
- **1896 - மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த வானொலிக்கான காப்புரிமம் பெற்றார்.**
- 1924 - ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த அனைத்து பழங்குடிகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் அறிமுகப்படுத்தினார்.
- 1946 - இத்தாலியில் முடியாட்சியை குடியரசாக மாற்றும் முடிவுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். இத்தாலியின் மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான்.
- 1953 - இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டு விழா முதற்தடவையாக தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.
- 1966 - நாசாவின் சேர்வெயர் 1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.
- 1992 - டென்மார்க் மக்கள் மாஸ்ட்ரிக்ட் உடன்பாட்டுக்கு எதிர்த்து வாக்களித்தனர்.
- 1999 - பூட்டானில் முதற் தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2003 - வேறொரு கோளுக்கான (செவ்வாய்) மார்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற தனது முதலாவது விண்கலத்தை ஐரோப்பிய ஆய்வு மையம் ஈசா கசகஸ்தானிலிருந்து ஏவியது.

பிறப்புகள்

- 1965 - ஸ்டீவ்வா மற்றும் மார்க்வா, ஆஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்கள்.

இறப்புகள்

- 1842 - பி. கந்தப்பிள்ளை, யாழ்ப்பாணப் புலவர், வைத்தியர், நாவலரின் தந்தை.
- 1882 - கரிபால்டி, நவீன இத்தாலியை உருவாக்கியவர். (பி. 1807)
- 1981 - தாவீது அடிகள், யாழ்ப்பாணத் தமிழறிஞர் (பி. 1907)

மார்க்கோனி

வானொலியையும், கம்பியில்லாத் தந்தி முறையையும் உலகுக்குத் தந்த அவர் தான் 'வானொலியின் தந்தை' என போற்றப்படும் மார்க்கோனி. 1874 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாள் இத்தாலியின் பொலொனா நகரில் பிறந்தார் குலீல்மோ மார்க்கோனி. தந்தை வசதி வாய்ந்த தொழிலதிபதிர். எனவே மார்க்கோனிக்கு மிகச்சிறந்த கல்வி வழங்கப்பட்டது. வீட்டிலேயே தந்தை உருவாக்கியிருந்த சிறிய நூலகத்திலிருக்கும் புத்தகங்களை படித்து மகிழ்வதுதான் மார்க்கோனியின் பிள்ளைப்பருவ பொழுதுபோக்கு.

வானொலி என்ற சக்தி வாய்ந்த ஆயுதத்தை உலகுக்குத் தந்த மார்க்கோனி 1937 ஆம் ஆண்டு ஜூலை 20-ஆம் நாள் தமது 63 ஆவது அகவையில் உரோம் நகரில் காலமானார்.

சுமார் எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக உலக மக்களை மகிழ்வித்து வந்திருக்கிறது வானொலி. வெறும் பொழுதுபோக்கு சாதனமாக மட்டுமின்றி தகவல் களஞ்சியமாகவும் அது செயற்பட்டு வருகிறது.

தொலைக்காட்சி, இணையம் என்று பல தொடர்பு சாதனங்கள் வந்தாலும் இன்றும் பலரது வாழ்க்கையில் வானொலிக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. வானொலியில் ஒரு நல்ல நிகழ்ச்சியை கேட்ட பிறகு நன்றி சொல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் உண்மையில் மார்க்கோனிக்கு தான் நன்றி சொல்ல வேண்டும்.

மார்க்கோனியின் விடாமுயற்சியால்தான் அதுவரை நிசப்தமாக இருந்த வானம் அதன் பிறகு குரல் மூலமும், இசை மூலமும் பேசத்தொடங்கியது. வான் அலைகளுக்கு உயிரூட்டிய மார்க்கோனியின் கதை நமக்கு சொல்லும் உண்மை எளிதானதுதான் தொலை நோக்கும் விடாமுயற்சியுடன் சேர்ந்த கடின உழைப்பும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம். இதே பண்புகளை பின்பற்றும் எவருக்கும் அந்த வானம் நிச்சயம் வசப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

வாழ்க்கை வரலாறு

...'என்னால் முடிந்த வரை குறைக்கிறேன்' என்று சொன்னேன். அப்படி இப்படியாக 2 ஆயிரம் அடியை குறைத்தேன். இப்ப 19 ரீல் ஆச்சு.

ரஜினி சாரிடம் சொன்னேன். அவர் '19 ரீல் படம்னா இரண்டு இடைவேளை விட்டால்தானே சரியாக இருக்கும்?' என்று கேட்டார்.

ராஜ்கபூர் நடித்த 'சங்கம்', 'மேரா நாம் ஜோக்கர்' ஆகிய படங்களுக்கு 2 இடைவேளை வைத்தார்கள்.

அதுமாதிரி தமிழில் 'படையப்பா'வுக்கும் செய்யலாமா என்று ரஜினி சார் யோசித்தார். இதுபற்றி, தனது ஆப்த நண்பர் கமல் சாரிடமும் யோசனை கேட்டார்.

'எக்காரணம் கொண்டும் இரண்டு இடைவேளை வைக்காதீர்கள். அது சரியாக இருக்காது. நீளத்தை குறைக்கும் பொறுப்பை டைரக்டரிடம் விட்டு விடுங்கள். அவர் பார்த்துக்கொள்வார்' என்று கமல் கூறினார்.

இதுபற்றி ரஜினி தீவிரமாக சிந்தித்தார். 'குறைந்த பட்சம் 5 ரீலாவது குறைத்தால்தான் சரியாக இருக்கும்.

ஆனால், எல்லா சீனும் முக்கியமானவை. உங்களால் 5 ரீல் குறைக்க முடியுமா?' என்று என்னிடம் கேட்டார்.

'குறைக்கிறேன் சார் என்று அவரிடம் சொல்லிவிட்டேனே தவிர, காட்சிகளின் வீரியம் குறையாமல், கதையின் விறுவிறுப்புக்கு பங்கம் நேராமல் 5 ரீல்களை குறைப்பது என்பது எனக்கு பெரும் சவாலாகவே இருந்தது.

என்றாலும் 4 நாட்கள் தொடர்ந்து இரவு பகலாக உட்கார்ந்து 14 ஆயிரத்து 500 அடியாக படத்தை குறைத்தேன். அதன்பின் படத்தை பார்த்தபோது காட்சிகள் குறைக்கப்பட்டது தெரியாமல், படம் விறுவிறுப்பாக இருந்தது.

பேசாமல் போன ரஜினி

முதல் பிரதி தயாரானதும், ஏவி.எம். ஏசி தியேட்டரில் படம் பார்த்தோம். ரஜினி சார் சில நண்பர்களுடன் வந்திருந்தார். என்னுடன் சில நண்பர்களும் வந்திருந்தார்கள்.

படம் முடிந்ததும் ரஜினி சார் ஒருவார்த்தைகூட சொல்லாமல் என்னிடம் கை கொடுத்துவிட்டுப் போய்விட்டார். படம் பற்றி எதுவும் சொல்லாமல் போனதால் எனக்கு இரவு முழுக்க தூக்கம் இல்லை.

ஆனால் மறுநாள் காலையில் நேரில் வரச்சொல்லி போன் செய்தார். அவரை சந்தித்தபோது 'நேற்று படம் முடிந்ததும் உங்ககிட்ட எதுவும் சொல்லாமல் போய் விட்டேன். நம்ம இரண்டு பேர் சைடிலும் வந்தவங்க மத்தியில் நான் 'படம் சூப்பர்'னு சொல்லிட்டா, அவங்களும் அதையே சொல்லிடுவாங்க.

நமக்கு படம் பற்றிய அவங்களோட உண்மையான கருத்து கிடைக்காது. என் நண்பர்கள் 'படம் நல்லா இருக்கு. ஆனால் இதுக்கு எதுக்கு 'படையப்பா'ன்னு பேரு? நீலாம்பரின்னே வெச்சிருக்கலாமே' என்று சொன்னாங்க.

எனக்கு படம் ரொம்ப பிடிச்சிருக்கு. 14 ரீலா குறைத்த பிறகும், குறைத்த மாதிரி தெரியாமல் 'விறுவிறு'வென்று போகுது. உடனே 'ரீரிக்கார்டிங்' ஆரம்பிக்கச் சொல்லிடுங்க' என்றார். ரஜினி சார் கணிப்பும், என் கணிப்பும் ஒரே மாதிரி இருந்ததை ரசிகர்களும் உறுதி செய்தார்கள். அவர்களும் எங்கள் உணர்வுகளை பிரதிபலித்ததால் படையப்பா சாதனை படைத்தது." இவ்வாறு கே.எஸ்.ரவிக்குமார் கூறினார்.

(தொடரும்)



கருவாச்சி காவியம்

வைரமுத்து–153

...செத்த பாம்பா இருந்தா பெராந்து வந்து செந்தூக்காத் தூக்கிட்டுப் போயிருக்குமே!

சாகல. இம்புட்டு நீளம் சாரப் பாம்புக்குத் தவிர வேற பாம்புக்கு இல்லையே! சாரைதானோ? சாரைக்கு அடிவகுறு மஞ்சப் பூத்து இருக்குமே! இது சாரையுமில்ல.

புதருக்கு வெளிய இவ லேசாத் தலையத் தூக்கவும் பாம்பும் தலையத் தூக்குச்சு. சிமிட்டாமப் பாக்குறா. விரியம் பாம்போ? இல்லையே! விரியனுக்கும் சாரைக்கும் மொனையாத்தான இருக்கும் மூக்கு. இது சப்பட்டையா இருக்கே.

இன்னுங் கொஞ்சம் உத்துப் பாத்தா. ரெண்டு சக்கரம் தெரியுது தலையில. நல்ல பாம்பேதான்! நல்ல பாம்பேதான்!

என்னா பண்ணுது பாம்பு? ஏன் இப்படிக் கடப்பாரை மாதிரி நேராப்படுத்திருக்கு? எரையுண்ட மயக்கத்துல எளப்பாறிக் கெடக்கோ? இல்லையே! வயிறு எங்கயும் புடைக்கலையே! ஒரே சீரா இருக்கே.

என்னதான் பண்ணுதுன்னு இருந்து பாத்திருவோம். என்னதான் தகிரியத்த ஏத்தி நெஞ்ச நிமித்திக்கிட்டாலும் நல்ல பாம்பு வெறியெடுத்துத் தன்ன வெரட்னா என்ன ஆகும்ன்னு நெனைக்கிறப்ப கர்ப்பப்பைக் குள்ள கலக்கமாகுது, கருவாச்சிக்கு.

பாம்பு வெரட்னா மட்டும் நேரா ஓடப்படாதுடி. வளஞ்சு வளஞ்சு ஓடுனாத்தான் தப்பி

க்கலாம். ஆத்தா பெரியமூக்கி எப்பவோ சொன்னது இப்ப நெஞ்சுக்குழியில வந்து நிக்கிது.

அவ பாத்துக்கிட்டேயிரு க்க, தலைய லேசாத் தூக்கித் தரையில மூக்கத் தேய்க்குது பாம்பு. செத்தவடத்துல, சிட் சிடன்னு சின்னதா ரெண்டு சத்தங்கேட்டுச்சு.

தலப்பக்கம் வாய்ப்பூட்டு வெடிச்சு, பஞ்சு மாதிரி ஒரு பொருளு பட்டின்னு வெளிய வந்துச்சு.

ஒடம்புலயிருந்து வெடிச்சு வந்த பஞ்சில தலையும் கண்ணும் படமும் அடிச்சடிச்ச மாதிரி அப்படியே இருக்கு.

யாத்தே! பாம்பு சட்டை உரிக்குது சாமி கருவாச்சி நெஞ்ச இறுக்கிப்புடிச்சு நின்னு போனா.

இருதயம் கூட்டுக்குள்ள அடிக்கிற சத்தமும் மூக்குவழி காத்து போக்குவரத்து நடத்துற சத்தமும் மட்டும்தான் அவ காதுக்குக் கேக்குது இப்ப.

பாம்பு சட்டை உரிக்கிறதப் பாக்கணும்; பாம்பு சட்டை உரிக்கிறதப் பாக்கணும்ன்னு சின்னவயசுலருந்து நான் சேத்துவச்ச ஆசை எம் பிள்ளைய நான் தேடிப் போற இந்த அத்துவானக் காட்லதான் பலிக்கணுமா?

தலச் சட்ட கழத்துற வரைக்கும் தவிச்சுப் போய்க் கெடந்த பாம்பு அப்பறம் சுறுசுறுப்பாயிருச்சு.

தலைய ஒரு ஆட்டு ஆட்டித் தலச்சட்டையக் கழுத்துக்குக் கீழ தள்ளிட்டு, தன் சக்தியெல்லாம் ஒண்ணு கூட்டித் தலைய முன்னுக்க நீட்டி முன்னேறுது.

படுத்த எடத்துல படுத்த மேனிக்குப் பாறையோட சட்டை ஒட்டிக்கெடக்க, சட்டைய விட்டு வெளியேறுது பாம்பு சரசரன்னு. பாம்பு மேல்பக்கம் அகலமாகவும் கீழப்பக்கம் குறுகலாகவும் இருப்பதனால கீழ்ச்சட்ட உரிக்கிறது லேசா இருக்கு பாம்புக்கு. காணக் கெடைக்காத இந்தக் கண் காட்சியக் கண்ட கருவாச்சி திகில் புடிச்சுத் திக்குமுக்காடிப் போனா. ஆறடி நீளச் சட்டையக் கீழ போட்டுட்டு அதுலயிருந்து பாம்பு விறுவிறுன்னு வெளியேறிப் போறதக் கண்ணால பாக்குறா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்

சர்வாங்க ஆசனம்

மல்லாந்து படுக்க வேண்டும். பின் ஒவ்வொரு கால்களாக (முடக்காமல்) தூக்க வேண்டும். உடல் தரையிலும் இடுப்புப் பகுதிக்கு மேல் கால்கள் மேல் கால் விரல்களை மடக்கியும் நீட்டியும் செய்ய வேண்டும். இதனால் காலிலுள்ள இரத்த ஓட்டம் உடலுக்குச் செல்கிறது. பின்பு கால்களை மெதுவாக சம நிலைக்குக் கொண்டு வர வேண்டும். இப்படிச் செய்வதால் இரத்த ஓட்டங்கள் கால்களுக்குச் சீராகச் செல்கிறது.

இதனால் இரத்தக் குழாயில் இரத்தம் உறைவது, இரத்தக் குழாய் அடைப்புக் குறைகின்றன.

தல ஆசனம்

நேராக நின்று கொண்டு இரண்டு கைகளையும் புஜத்துக்கு மேல் தூக்கி அவற்றை முன்னும் பின்னும் அசைப்பதனால் தோள் பட்டையில் உள்ள பந்துக்கிண்ண மூட்டுக்கள் நன்றாக அசையும். இதனால் தோள்பகுதி சதை வலு வடைகின்றன.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு பந்துக் கிண்ண மூட்டுப் பிடிமானம் ஏற்பட்டு கையை ஓரளவுக்கு மேல் தூக்க முடியாத நிலை ஏற்படும். அதற்கு இந்த ஆசனம் மிகச் சிறந்த சிகிச்சையாகும்.

கழுத்து ஆசனம்

கட்டிலில் படுத்துக்கொண்டு தலையைக் கட்டிலின் விளிம்புக்குக் கொண்டு வந்து இடப்பக்கம், வலப்பக்கம், மேல், கீழ் எனக் கழுத்தைத் திருப்புவதன் மூலம் கழுத்துப்பிடிமானம், மூளைக்கு இரத்த ஓட்டம் ஏற்படும்.

முக்கிய குறிப்பு:

கழுத்தில் எலும்பு தேய்ந்து இருப்பவர்கள் மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டிருப்பவர்கள் இந்தப் பயிற்சியைச் செய்யக்கூடாது.

வயிற்றுப் பயிற்சி

நன்றாக கால்களைச் சேர்த்து வைத்து நேராக நிற்கவேண்டும். பின் மூச்சை நன்றாக இழுத்து மேலும் கீழும் விட வேண்டும். இப்படிச் செய்வதனால் வயிற்றுப் பகுதி தசைகள் நன்றாக வேலை செய்யும்.

நெஞ்சையும் வயிற்றுப் பகுதியையும் பிரிக்கக்கூடிய சவ்வு இந்தப் பயிற்சியின் போது மேலும் கீழும் இறங்குவதால் கணையத்துக்கு அதிக இரத்த ஓட்டம் ஏற்பட்டு இன்சுலின் உற்பத்தியைப் பெருக்க ஏதுவாகிறது. வயிற்றுப் பகுதி சுருங்கி விரிவதால் சிறு நீர்ப்பையும் சரிவர வேலை செய்ய உதவுகின்றன.

நன்றாக மூச்சை விட்டு பிரணாயாமம் செய்வதனால் இரத்தச் சீனியின் அளவு (சாப்பிடாமல் இருக்கும்போது) குறைவாக இருக்கும். பலவகையான யோகாப் பயிற்சிகளினால் இரத்தத்தில் சீனி, கொழுப்புச்சத்து மற்றும் உடற் பருமன் குறைவது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தனுராசனா (Dhanurasana), அர்தமத்சயேந்திராசனா (Ardha matsayendrasana) ஆகியன நீரிழிவு நோயை அதிக கட்டுப் பாட்டுக்குள்கொண்டுவருவது அறியப்பட்டுள்ளது.

நீரிழிவு நோயாளிகளுக்கான உணவுகள்

நீரிழிவு நோயாளிகள் மற்றும் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் அதை சாப்பிடக்கூடாது, இதை சாப்பிடக்கூடாது என்று அவர்களுடைய உடல் நலனைக்



கருத்திற்கொண்டு ஏகப்பட்ட நிபந்தனைகள் உள்ளன. அதனால் சாப்பாடு என்றாலே அவர்களுக்கு சலிப்பு ஏற்படுவது இயற்கை. ஆனால் அவர்களும் எல்லோரையும் போல வாய்க்கு ருசியாக விதவிதமாகச் சாப்பிடலாம் என்கிறார்கள் உணவு நிபுணர்கள். அவர்களின் ஆலோசனையின் பேரில் சில வெரைட்டியான உணவு வகைகள் இங்கே தரப்பட்டுள்ளன.

நீரிழிவு நோயாளிகள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய சில குறிப்புகள்

நீரிழிவு நோயாளிகள் எல்லா வகையான கீரைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். குறிப்பாக வெந்தயக் கீரை உடம்புக்கு மிகவும் நல்லது. ஆனால் மண்ணுக்கு அடியில் விளையும் கிழங்கு வகைகள், வெண்ணெய், நெய், பாஸ்தா, கடலை எண்ணெய் போன்றவற்றைத் தவிர்த்து விடுங்கள்.

நீரிழிவு நோயாளிகள் கடைகளில் கிடைக்கும் ஆரோக்கிய பானங்களைத் தவிர்த்துவிடுங்கள். ஏனென்றால் அவற்றில் கலோரியின் அளவு அதிகமாக இருக்கும்.

இரத்த அழுத்த நோயாளிகள் உப்பை மிக மிகக் குறைவாகவே சேர்த்துக்கொள்ளுங்கள். எல்லா வகையான பழங்களையும் கீரைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் எண்ணெய்யில் பொரித்த பண்டங்கள், ஊறுகாய், நெய் போன்றவற்றைத் தவிர்த்து விடுங்கள்.

சாப்பிடவேண்டிய உணவுகள்

கொய்யா, அப்பிள், ஒரேஞ்சு, சாத்துக்குடி சிலதுண்டு பப்பாளி, தக்காளி, கோலி பிளவர், முட்டைக் கோஸ், இஞ்சி, குடை மிளகாய், புடலங்காய், சுரக்காய், பீர்க்கங்காய், பீன்ஸ், வெண்டைக்காய், முளை கட்டிய பயறு, காராமணி பச்சைப் பயறு போன்ற வற்றை உட்கொள்ளலாம்.

நீரிழிவுநோய் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் மேற்கண்ட ஏதேனும் ஒரு பழத்தை நாளொன்று எடுத்துக் கொள்ளலாம்.

தவிர்க்கவேண்டிய உணவு

வாழைப்பழம், சப்போட்டா, சீதாப்பழம், அன்னாசி, பலாப்பழம், உருளைக்கிழங்கு, பரங்கிக்காய், காரக்குணை, சேனைக்கிழங்கு, கரட், பீட்ரூட் மற்றும் காபோவைரதேற்று உணவு வகைகள் எல்லாம் தவிர்க்க வேண்டியவை. மீதமுள்ள ஏனைய பழவகைகளையும் தவிர்க்கவும்.

பொரித்துச் சாப்பிடவேண்டாம். பொரியல் செய்து சாப்பிடலாம். நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. கொஞ்சம் நம்முடைய உணவுப் பழக்க முறைகளில் கூடுதல் கவனம் செலுத்தினால் நீரிழிவு நோய் வராமல் தப்பித்துக்கொள்ளலாம்.

கோவைக்காய் பச்சடி

சாதாரணமாக எல்லா காய் கறி கடைகளிலும் தாராளமாகக் கிடைக்கக்கூடியதுதான் கோவைக் காய். கொஞ்சமாய் துவர்ப்புச் சுவையுடைய இந்தக் கோவைக் காயில் பொரியல், வற்றல், கூட்டு, சாம்பார் செய்து உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

மற்றும் கோவைக்காய் பச்சடி சிறந்த மருத்துவ குணமுள்ள நறுக்கிய கோவைக்காயுடன் மோர், மிளகுப்பொடி, சீரகப்பொடி, இஞ்சி சிறிது சேர்த்து தேவையான அளவு உப்பு கலந்து விட்டால் அவ்வளவுதான் கோவைக்காய் பச்சடி தயார்.

இதனை வாரம் இரண்டு நாள் பகல் உணவில் சேர்த்துவந்தால் போதும். வாய்ப்புண் குணமாகும். நீரிழிவு நோயாளிகள் இரத்தத்தில் சேரும் சீனி அளவைக் கட்டுப்படுத்தும்.

இதனைப் பொதுவாக எல்லோருமே சாப்பிடலாம். பரம்பரை காரணமாக நீரிழிவு நோய் இருப்பவர்கள் கோவைக்காயை 35 வயது முதலே உணவில் சேர்த்துக் கொண்டால் நல்லது. நீரிழிவு நோய் வராமல் தடுக்கலாம்.

பச்சையாகவே கோவைக் காயை மென்று துப்பி விட்டாலே வாய்ப்புண் ஆறிவிடும். வயிற்றுப்புண் இருப்பவர்கள் வாரம் காயை எடுத்து மோருடன் அரவையில் அரைத்து குடித்தாலும் மேற்சொன்ன பலன்களைப் பெறலாம். கோவைக்காயை முற்றியதாக இல்லாமல் பிஞ்சுக்காயாகப் பார்த்து வாங்கவேண்டும். பிஞ்சுக்காய் இளம் பச்சை நிறத்தில் இருக்கும்.

ஓட்ஸ் தோசை

தேவையான பொருட்கள்

ஓட்ஸ்-ஒரு கப் (200 கிராம்)
அரிசிமாவு- 1/4 கப்(50கிராம்)

நெய்-1/2 தேக்கரண்டி
மிளகு/ சீரகப்பொடி- 1/2 தேக்கரண்டி (கரகரப்பாகப் பொடித்தது)
உப்பு- தேவையான அளவு
சமையல் எண்ணெய் தோசை சுடுவதற்கு

செய்முறை: ஓட்ஸை 15, 20 நிமிடங்கள் ஊறவைக்கவும். பிறகு மிக்ஸியில் நன்கு அரைக்கவும் அரைத்த ஓட்ஸ் மாவுடன் அரிசி மாவு, உப்பு சேர்த்து நன்கு கலக்கவும்.

ஒரு சிறிய வாணலியில் நெய்யை உருக்கி மிளகு, சீரகப் பொடி சேர்த்து ஓட்ஸ் கலவையுடன் சேர்க்கவும். கலந்த மாவு தோசை மாவு பதத்திற்கு இருக்க வேண்டும்.

தோசை வார்ப்பதற்கு முன் அரைக்கரண்டி புளித்த தயிர் சேர்த்து மெல்லிய தோசைகளாகச் சுட்டு எடுக்கவும். மிருதுவான தோசைக்கு வெங்காய சட்னி நல்ல கூட்டணி.

நார்ச்சத்து நிறைந்த ஓட்ஸ், இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது. ஓட்ஸ் கொழுப்பையும் குறைக்க வல்லது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த அணியினரின் திட்டங்களை முறியடிப்பதற்கு தயாராகவுள்ளோம்

அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த தலைமையிலான மூன்றாம் அணி ஒருபோதும் எமக்கு அழுத்தம் பிரயோகிக்கும் அணியாக திகழாது. அவர்களின் திட்டங்களை முறியடிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். இதன் பிரகாரம் கிராம மட்டத்திலிருந்து கட்சியை பலப்படுத்துவதற்கான நட வடிக்கைகளை மும்முரமான முறையில் முன்னெடுத்து வருகின் றோம் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மகிந்த அணியின் வரு கையை பெரிதுபடுத்த வேண் டிய தேவையில்லை நல்லாட்சி மிக்க திட்டங்களை முறியடிக் கும் வகையில் மகிந்த தலை மையிலான அணியினர் செய ற்பட்டு வருவதனை மக்கள் நன்கு அறிவார்கள். இதன் பிரகாரம் மக்களின் ஆணை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடை க்கப் பெறுவது உறுதியாக் கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மகிந்தராஜபக்ஷ தலைமை யில் மூன்றாவது அணி தோற் றம் குறித்தும் கருத்தும் தெரி விக்கும்போதே அமைச்சர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கை யில்,

பாராளுமன்றம் இன்னும் சில வாரங்களில் கலைக்கப் படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்நிலையில் மக்களின் பணங்களை சூறை யாடியவர்களை ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் நிராகரி த்தனர். இருந்த போதிலும் தற்போது பாராளுமன்ற தேர் தல் அண்மையிற்கும் தருண த்தில் மீளவும் மக்களினால் நிராகரிக்கப்பட்டவர்கள் ஆட் சிப்பீடம் ஏற முனைகின்ற னர்.

அடுத்த பாராளுமன்ற தேர்தலில் மூன்றாவது அணி யாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை யில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த சிலர் தயாராக வருகின்றனர்.

ஆகவே மூன்றாவது அணி என்ற பெயரில் எம்மை எவ ராலும் வீழ்த்த முடியாது நாம் பலமான அணியினர். தற் போது கிராம மட்டத்தில் பல மானதொரு கட்சியாக ஐக் கிய தேசியக் கட்சியை நாம் கொண்டு வர அனைத்து சூட்சு மமான திட்டங்களை முன் னெடுத்து வருகிறோம்.

மகிந்த தலைமையிலான மூன்றாம் அணி ஒரு போதும் எமக்கு அழுத்தம் பிரயோ கிக்கும் அணியாக திகழாது. அவர்களின் திட்டங்களை முறியடிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். இதனை பெரிது படுத்த வேண்டிய தேவையி ல்லை.

தற்போது பாராளுமன்ற நல்லாட்சிமிக்க திட்டங்களை முறியடிக்கும் வகையில் மகி ந்த தலைமையிலான அணி யினர் செயற்பட்டு வருகின் றனர்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தினை நிறைவேற்றும் தருணத்தில் அரசின் திட்டங்களுக்கு எதிராக பாராளுமன்றத்தில் செயற்பட்ட விதத்தினை மக் கள் நன்கு அறிவார்கள்.

ஆகவே நாட்டு மக்களை ஏமாற்றிய காலம் முடி வடைந்து விட்டது. தேர்தல் வரட்டும் மக்களின் ஆணை யார் பக்கம் உள்ளது என்பது தெரியவரும்.

அடுத்த பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை வெற்றியை நாம் பெற்றுக் கொள்வோம்.

அடுத்த தேர் தலில் மக்க ளின் ஆணை ஐக்கிய தேசி யக் கட்சிக்கு கிடைக்கப் பெறு வது உறுதி என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	120	80	90
உருளைக்கிழங்கு	100	100	100
பச்சைமிளகாய்	50	80	50
தக்காளி	80	80	70
மரவள்ளிக்கிழங்கு	50	60	50
கோவா	100	120	100
கரட்	160	240	160
பூசணி	40	40	40
புடோல்	100	80	80
வாழைக்காய்	60	40	40
சின்ன வெங்காயம்	150	150	100
பெரிய வெங்காயம்	120	120	120
பாகற்காய்	140	120	160
வெண்டிக்காய்	160	100	120
கருணைக் கிழங்கு	100	120	90
பயற்றங்காய்	130	80	160
லீக்ஸ்	160	200	180
பீற்றூட்	120	160	40
கறிமிளகாய்	140	120	60
முருங்கைக்காய்	300	400	400
போஞ்சி	200	200	160
கத்தரிதம்புள்ள	100	60	80
கீரை - 1 பிடி	40	40	30
தேசிக்காய்	160	120	180
தேங்காய் (ஒன்று)	150	40-60	50
இராசவள்ளி	100	140	120
வெங்காயப்பூ	—	—	—
முள்ளங்கி	80	120	50
பொன்னாங்காணி	30	30	30
வல்லாரை	10	20	20

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 389

Search for people, places and things Nagendram Home

மகீபன் தீபன்

சங்கர் நிறோ

குணா குணாலன்

சுரேஸ் கௌரி

அம்பி டைகர்

தமிழ்மதி மானசா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாதுகாப்புத் திட்டம் யாருக்கு வைக்கப்படும் குறி?

'விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று வரையப்படும்' என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கடந்த மே 19 ஆம் திகதி மாத்தறை சமுத்திர மாவத்தையில் நடந்த போர் நிறைவுக்கு வந்து ஆறாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும். போர் வீரர்கள் ஞாபகார்த்த அணி வகுப்பு நிகழ்வில்தான் இந்த அறிவிப்பை அவர் முதல் முறையாக வெளியிட்டிருந்தார். அதற்குப் பின்னர், கடந்த 24 ஆம் திகதி வெலிக்கந்தையில் உள்ள கிழக்குப் படை களின் தலைமையகத்துக்குப் பயணம் மேற் கொண்டிருந்தபோது, படையினர் மத்தியில் உரையாற்றிய போதும், இந்த தேசியப் பாதுகாப்புக் கொள்கை தொடர்பாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்தினால் உருவாக்கப்பட வுள்ள இந்த விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படை நாட்டில் மற்றொரு ஆயுதப் போராட்டம் தோன்றுவதை தடுப்பதேயாகும். இந்த விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டம் தொடர்பான அமைச்சரவையில் ஆராயப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையுடன் இந்த திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் மேலதிக உட்சேர்ப்புகள் செய்யப்படுவது குறித்த, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைகளும் பெறப்பட்டு, அவற்றையும் உள்ளடக்கியதாக இந்த விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்கிறது அரசாங்கம். இலங்கையைப் பொறுத்த வரையில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரப் போவது இதுவே முதல் முறையாக இருக்கும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், ஐந்தரை ஆண்டுகளாகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திடம் இத்தகைய தொரு தேசிய பாதுகாப்புத் திட்டம் இருந்திருக்கவில்லை. போருக்கு பின்னர், இத்தகையதொரு தேசிய பாதுகாப்புத் திட்டம் அவசியம் என்பதை, முன்னர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியிருந்தார்.

அவர், படைபலத்தின் மூலம் அதனைக் சாதிக்கலாம் என்று கருதினார். போர் முடிவுக்கு வந்த பின்னரும், படைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும் என்றும், 3 இலட்சம் படையினரைத் திரட்டி தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இவர்களின் கணிசமானவர்கள் வடக்கிலும், கிழக்கிலும் நிறுத்தப்பட்டு, பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும், மற்றொரு கிளர்ச்சி ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்றும் அவர் 2009 இல் கூறியிருந்தார். ஆனால், அப்போது அந்த யோசனை கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அதற்கு போருக்காக, நாட்டின் ஒட்டு மொத்த வளங்களுமே, செலவிடப்பட்டிருந்த நிலையில், மேலும் இராணுவ பலத்தைப் பெருக்கி வைப்பது சாத்தியமற்றதாக இருந்தது ஒரு காரணம். மற்றது, அப்போதிருந்த அரசாங்கத்துக்கு எதிரானவராக மாறத் தொடங்கியிருந்த, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஆலோசனைகளை கேட்கும் நிலையிலும் மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் இருக்கவில்லை. இருந்தாலும், பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச இந்த விடயத்தில் கவனம் செலுத்தாதிருந்தது ஆச்சரியமே. அதற்காக, போருக்குப் பிந்திய பாதுகாப்புத் திட்டம் எதையும், முன்னைய அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்று கருத முடியாது .

மீண்டும் ஒரு போர் ஏற்படாத வகையில், தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் முன்னைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டன. வடக்கில் மிக அதிகளவிலும், கிழக்கில் அதிகளவிலும் படையினரைக் குவித்து வைத்திருத்தல், வடக்கில், மிக அதிகளவிலும், கிழக்கில் அதிகளவிலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவை வலுப்படுத்தி, பெருமளவில் புலனாய்வாளர்களைப் பணியில் அமர்த்துதல். இவையிரண்டும் தான் கோத்தபாய ராஜபக்சவினால், கையாளப்பட்ட பிரதானமான போருக்குப் பிந்திய பாதுகாப்புத் திட்டங்களாகும்.

கோத்தபாய ராஜபக்ச இந்த இரண்டு பலத்தையும் மிகவலுவாக நம்பியிருந்தார். இன்னொரு ஆயுதக் கிளர்ச்சி வடக்கில் ஒருபோதும் ஏற்படாது என்றும் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் புலனாய்வுப் பிரவு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்தார்.

அதைவிட, முன்னைய அரசாங்கம் தேசிய பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறும் அளவுக்கு வெளிப்படைத் தன்மை கொண்ட ஒன்றாக இருந்திருக்கவில்லை. அப்போது மஹிந்த ராஜபக்சவிடம் நிறைவேற்று அதிகாரங்கள் இருந்தன.

அவற்றில் கணிசமானவற்றைத் தானும் பயன்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்றவராக கோத்தபாய ராஜபக்சவும் இருந்தார். எனவே, அவர்களால் தாம் விரும்பியபடி பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய ஆளுமை இருந்தது. ஆனால், இப்போது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்துக்குப் பதில் கூற வேண்டிய ஓர் அரசாங்கமே இப்போது இருக்கிறது. எனவே, விரிவான தேசிய பாதுகாப்புக் கொள்ளை அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்பட்டே உருவாக்கப்படுகிறது. இந்த விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டமானது, வடக்கில் இன்னொரு ஆயுதக்கிளர்ச்சியைத் தடுப்பதை நோக்கமாக கொண்டிருந்தாலும், தெற்கில் அத்தகைய நிலை ஒன்று ஏற்படுவதை தடுப்பதும்கூட இதன் இலக்காக இருக்கிறது.

ஏனென்றால், இரண்டு தடவைகள் தெற்கில் ஜே.வி.பி யின் ஆயுதக் கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. 1971 ஆம் ஆண்டும், 1988 -89 ஆம் ஆண்டுகளிலும் இந்த ஆயுதக் கிளர்ச்சிகள் தெற்கில் வீரியம் பெற்றிருந்தன. இந்த இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளின் போதும், ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர், எனினும், அதுப்பற்றிய முறையான எந்தப் பதிவுகளும் இல்லை, விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

எனவே ,அதுபோன்று மீண்டும் ஒரு ஆயுதக்கிளர்ச்சி தெற்கிலும்கூட ஏற்படாத வகையில், தடுப்பது விரிவான தேசிய பாதுகாப்புக் கொள்ளையின் அடிப்படை அம்சமாகும். இந்த விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டத்திலும்கூட, புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்தல், நிலைப்படுத்தல் என்பன முக்கியமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால், முந்திய அரசாங்கத்தைப் போன்று, வடக்கிலும் கிழக்கிலும் வெளிப்படையாக இராணுவத்தைப் பெருமளவில் குவித்து பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. எனவே, இரகசியமான முறையில் செயற்படக் கூடிய புலனாய்வுப் பிரிவுகளை உருவாக்குதல் அல்லது பணியில் அமர்த்துதல் இந்த திட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்கும்.

அடுத்து, படையினரை நிலைப்படுத்தும் திட்டம் ஒன்று வகுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கில் பெருமளவில் குவித்துவைக்கப்பட்டுள்ள இராணுவத்தைக் குறைக்க வேண்டும் என்றும் எல்லா மாகாணங்களிலும் சமமாக நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கைகள் தமிழர் தரப்பினால் முன்வைக்கப்படுகின்றது.

சில வெளிநாடுகள்கூட இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், அரசாங்கமோ அதற்கு இணங்குவதாக இல்லை. கடந்த சில நாட்களுக்கு முன்னரும்கூட அமைச்சர் ராஜித சேனாரத்ன, யார் என்ன சொன்னாலும், வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற மாட்டோம் என்று கூறியிருந்தார். இந்த நிலையில், அரசாங்கம் தேசிய பாதுகாப்புத் திட்டம் ஒன்றினூடாக, படையினரை நிலைப்படுத்தும் மாற்று உத்தி ஒன்றை அறிமுகப்படுத்தலாம். ஆனால், அதில் அரசாங்கம் எந்தளவுக்கு வெற்றிபெறும்என்றுகருதமுடியவில்லை.

இந்த தேசிய பாதுகாப்புத் திட்டம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்படும் ஒன்று அல்ல. இது இராணுவத்தினரைத் திருப்திப்படுத்துவதற்கானது. அதனால்தான், மாத்தறையில் போர் வீரர்கள் ஞாபகார்த்த அணிவகுப்பின் போதும், வெலிக்கந்தை படைத்தளத்தில் வைத்தும் இதனைக் குறிப்பிட்டிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

எனினும் வெறுமனே படைகளை நிலைப்படுத்துதல் பற்றியே கவனம் செலுத்துவதன் மூலம் அதனை வெற்றிகரமான ஒன்றாக மாற்ற முடியாது. ஏனென்றால் அரசியல் உரிமைகள் குறித்த ஆட்சியாளர்களின் அக்கறையீனமே, இலங்கையில் நிகழ்ந்த ஆயுதக் கிளர்ச்சிகளின் அடிப்படையாக அமைந்தது.

எனவே, அரசியல் உரிமைகள் விடயத்தில் தீர்வுகள் எட்டப்படாமல், தேசிய பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் மட்டும், இந்த விவகாரத்துக்கு நிரந்தரமான தீர்வை எட்டிவிட முடியாது.

அதைவிட இந்த தேசிய பாதுகாப்புத் திட்டம், தமிழர்களை எந்நேரமும் சந்தேகத்துடன் நோக்கும் ஒன்றாகவே இருக்கப் போகிறது என்பதால், இருதரப்பு சந்தேகப் பார்வைகள் நீடிக்கும் அது நல்லிணக்கச் சூழலை ஏற்படுத்தாது.

இந்த விரிவான பாதுகாப்புத் திட்டத்துக்கு அமெரிக்கா, இந்தியா போன்ற நட்பு நாடுகளின் ஆலோசனைகளைக் கோருவது குறித்தும், அமைச்சரவையில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்து எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் அதிகளவில் வெளிநாட்டு ஆலோசனைகளைக் கோரும் என்று எதிர்பார்க்க முடியாது. கோட்பாட்டு அம்சங்கள் குறித்த ஆலோசனைகள் வேண்டுமானால் கோரப்படலாம்.

நடைமுறைப் பாதுகாப்புத் திட்டங்கள் விடயத்தில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளை ஒதுக்கி வைத்திருக்கவே அரசாங்கம் விரும்பும். ஏனென்றால் வடக்கிலிருந்து படையினர் குறைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த நாடுகள் ஆதரிப்பவை. அதனை ஏற்கனவே பகிரங்கமாக வெளிப்படுத்தியிருப்பவை. இதனால், இந்த விடயங்களில் ஆலோசனை கேட்டு நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்ள அரசாங்கம் முனையாது என்றே தெரிகிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய தேசிய கட்சியே எமக்குப் பிரதான எதிரி

சுசில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியே எமக்கு பிரதான எதிரியாகும். ரணில் தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்துவதே எமது கட்சியின் பிரதான இலக்காகும். சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகமுமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒருபோதும் மூன்றாவது கூட்டணி உருவாகாது. அவர் எந்த சந்தர்ப்பத்திலும் கட்சியை விட்டு வெளியேற மாட்டார். அதேபோல் அவரை பிரதமர் வேட்பாளராக்குவது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மகிந்த தலைமையில் மூன்றாவது அணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கும் என்று செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பலமான கட்சியாகவே களமிறங்கும். கட்சியை இரண்டாக பிரிக்கும் எண்ணம் எம்மிடையே இல்லை. கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அதன் பங்காளிக் கட்சிகளை இணைத்துக் கொண்டு முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியது.

இதன்போதும் கட்சியில் அனைவரையும் ஒன்றிணைத்து பல

மான கூட்டணியாக களமிறக்குவது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம். ஆகவே எந்த சந்தர்ப்பத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி இரண்டு கட்சியாக களமிறங்காது.

அதேபோல் மகிந்த ராஜபக் ஷ தனித்து களமிறங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. ஏனெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவர் முக்கிய உறுப்பினராக செயற் படுகின் றார். கட்சியில் முக்கிய தீர் மானங்கள் மேற்கொள் ளும் சந்தர்ப்பங்களில் அவரது ஆலோசனையையும் நாம் கேட்டே செயற் படுகின்றோம். அவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை புறக்கணித்து செயற்படுவார் என நாம் நினைக்க வில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

ஜனாதிபதியைக் கொலை செய்ய பலமுயற்சிகள் இடம்பெற்றுள்ளன

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கான பல முயற்சிகள் இடம்பெற்றுள்ளதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கான

அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது முன்னாள் பாதுகாப்பு செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ என அவர் தெரிவித்தார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்ற பல்வேறு கொலைகளுக்கு பொறுப்பு கூற வேண்டியதும் கோத்தபாய ராஜபக்ஷ தான் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் என தான், அன்று நிறைவேற்று சபையில் வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

இலங்கையர்களின் வெளிநாட்டுப் பணத்திற்கு கூடுதல்வட்டி வழங்கப்படுமென அரசு அறிவிப்பு

இலங்கையர்களின் வெளி நாட்டு பணத்திற்கு கூடுதல் வட்டி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்துள்ள இலங்கையர்கள், அந்தப் பணத்தை கொண்டு வந்து இங்கு வைப்புச் செய்தல், கூடுதல் வட்டி வழங்கத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கூடுதலான வட்டியும், அதிகளவான பாதுகாப்பையும் வழங்கத் தயார் என தெரிவித்துள்ளது.

கூடுதலான வட்டியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சில இலங்கையர்கள் வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்துள்ள பணத்தை நாட்டுக்கு கொண்டு வரும்மாறு வைப்பாளர்களிடம் கோருகின்றோம்.

வெளிநாட்டு நிதியை பெற்றுக் கொள்வதற்காக இலங்கையர் அல்லாத தரப்பினருக்கு பாரியளவில் பணத்தை செலுத்துவதற்கு பதிலாக அந்தப் பணத்தை இலங்கையர்களுக்கு செலுத்த விரும்புகின்றோம்.

முதலீட்டாளர்கள் தங்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டு பணத்தை நாட்டுக்குள் கொண்டுவர விரும் பாமை அவ்வளவு சாதகமான நிலைமையல்ல என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

பத்து பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணம் இவ்வாறு வெளிநாட்டு வங்கிகளில் இலங்கையர்கள்வைப்புச்செய்துள்ளனர்.

இந்தப் பணத்தை மீளவும் நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, டொலரின் பெறுமதி அதிகரிப்பு ஆகிய சாதகத்தன்மைகளை பயன்படுத்திக் கொள்ள வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்துள்ள பணத்தை நாட்டுக்கு கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

நல்ல தொடக்கம்

உலகத்தில் வேடிக்கையான உண்மை ஒன்று உண்டு. எதையுமே ஆரம்பம் செய்வது கொஞ்சம் சிரமம். ஆரம்பித்துவிட்டால் பத்துப்பேர் சேர்ந்துகொண்டு பிரமாதப்படுத்த தயாராக இருப்பார்கள். starting trouble நம் தேசிய வியாதி. ஏன் மனிதகுலப் பொது அம்சம்.

ஒரு விழா முடிந்து தேசிய கீதம் என்று அறிவித்தால் மேடையில் இருப்பவர் மக்களைப் பார்ப்பார். மக்கள் மேடையை முறைப்பார்கள். இவரைப் பார் அவரைப் பார் என்று சுவரைப்பார்த்து முடிப்பார்கள். யாராவது ஜன என்று சத்தம் கொடுத்து ஆரம்பம் செய்தால் கணமண சத்தம் காதைக் கிழிக்கும்.

எப்படித் தொடங்குவது என்ற இந்தத் தடுமாற்றத்தை ஒழிக்க, சட்டென்று தொடங்க ஒரு நல்ல பழக்கத்தை நமது பெரியோர்கள் ஏற்பாடு செய்தார்கள். பிள்ளையாரை வணங்கி ஆரம்பம் செய் என்று பழக்கி விட்டார்கள். பல கீர்த்தனைகள் தெரிந்த பாகவதர்கூட எதைப்ப பாடுவ தென்று சங்கடப்படாமல் வாதாவி கணபதி என்று ஆரம்பித்து மற்றவர் களை தான் சங்கடப்படுத்துவார்.

இரண்டு மனிதர்கள் சந்தித்தால் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தடுமாற வேண்டாதபடி சௌக்கியமா? என்ற கேள்வியை கண்டு பிடித்தாரே. அந்த மனிதர் வாயில் அரைக் கிலோ சக்கரை போட வேண்டும். அடடா அவருக்கு நீரிழிவுநோய் இல்லாத சௌக்கியம் இருக்க வேண்டும். இந்த சௌக்கியமா? என்ற கேள்வி மாதிரித்தான் பிள்ளையார் வணக்கம் கலைகளை, திறமையை, ஆற்றலை வளர்க்கும் நல்ல தொடக்கம் பிள்ளையார் வணக்கம்.

உலக மகா எழுத்தாளர் ஒருவர் இருந்தார். நான் எழுதியதை எவன் படிக்கப் போகிறான். என்ன ராயல்டி வரும் என்பன போன்ற கவலையே இல்லாமல் மனிதன் எழுது எழுது என்று எழுதிக் குவித்தவர். புனை பெயர் டெக்னிக் வராத காலத்திலேயே எழுத்தாளன் (எழுத்தை ஆள்பவன்) என்ற புனைபெயர் பெற்றவர் அவர். எழுத்தாளன் என்றாலே அவர் தான் வியாசர். அவருக்கும் பிரச்சினை. பிரச்சினைகள் இருந்தால் தானே பெரிய மனிதன் என்று அர்த்தம். அவர் சொல்லும் வேகத்தில் எழுதி முடிக்க ஆள் கிடைக்காத அவஸ்தை அவருக்கு. அதாவது நல்ல ஸ்டெனோ கிடைக்காத பிரச்சினை.

வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர வழிகாட்டும் இலக்கியத்தை எழுத நினைத்த வியாசருக்கு எழுதுவதே பிரச்சினை. டாக்டருக்கே இருமல்...! அம்மா கையால் ஒரு டம்ளர் சுக்குக் கசாயம் குடிக்கும் பிரபல டாக்டர்கள் போல நல்ல நண்பர் நாரதரிடம் பிரச்சினை தீர வழி கேட்டார் வியாசர். வழி சொல்பவர்களுக்கு வழி கேட்க வேண்டி வரும். உலகம் அவ்வளவு வெறி.

பிள்ளையாரைப் பிடித்தால் பிரச்சினை தீரும் என்ற நாரத முனிவரின் நல்ல யோசனை மகரிஷிக்கு மகிழ்ச்சி தந்தது. பிள்ளையாரைப் பிடித்து சொல்லும் வேகத்தில் எழுதுங்கள் சுவாமி என்றார். அவரோ நான் எழுதும் வேகத்தில் சொல்ல முடியுமா? என்று திருப்பிக் கேட்டார். பிரச்சினையின் விளிம்பில் புதிய பிரச்சினை அதுதான் வாழ்க்கை? சோதனைகள் வந்து ஜெயிப்பதுதான் வெற்றி. எழுதுகிற வேகத்தில் சொல்ல வேண்டுமா? சொல்லுகிறேன் எழுதும் என்றார்.

எப்படி முடியும் விநாயகர் கேட்டார். உங்கள் அருள் இருப்பதால் முடியும் என்றார் வியாசர். விநாயகர் சிரித்துவிட்டார். சின்னசின்ன கண்கள் குவிய...பெத்தம் பெரிய வயிறு குலுங்க...ஓ! அதுதான் எத்தனை அழகு!கஸ்டம் வந்தால் புலம்பாதீர்கள் அதிர்ஷ்டம அவ்வளவு தான் என்று அலுத்து துக்க தீட்சை கொடுத்து உலகை இருட்டாக்காதீர்கள். மனித முயற்சியும் கடவுள் கருணையும் இணைந்தால் ஆகா, அதுதான் அழகு.மனிதன் இட்ட பணியை கடவுள் செய்கிறார். மக்கள் பணியே மகேசன் பணி. ஊருக்கு உழைப்பவனுக்கு ஒத்துழைக்க வேண்டியது கடவுளின் கட்டாயம். கடவுள் நல்லவர்களின் வேலைக்காரன்.

அடடா! அவர்தானே தலைவனே இல்லாத தலைவன். நாயக் = தலைமை. வி= இல்லாமை விநாயகர் தலைவர் இல்லாதவர். தலைவர் இல்லாத தலைவர்- தொண்டர்களின் வேலைக்காரர்! அதில் இன்னொரு சூட்சுமம். ஆனையாக இருப்பவர் பிள்ளையார். ஆனால் ஆனையை அடக்கும் அங்குசம் அவர் கையில். என்ன அர்த்தம். தட்டிக் கேட்க ஆளில்லாத தலைவர்கள் தங்களை தாங்களே அடக்கிக் கொள்ள வேண்டும். இதையே இன்னொரு விதமாகச் சொல்வதெனில், எவன் தன்னைத்தானே அடக்கிக் கொள்கிறானோ அவன்தான் பெரிய தலைவன். எப்படியோ நமது பெரிய தலைவர் பெரிய உடம்பை வளைத்து குழைத்து யம்மென்று வியாசர் எதிரில் உட்கார்ந்தார். உம் சொல்லலாம் என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினார். இரண்டு தந்தங்களும் பளீர்பளீர் என்று மின்னின. வியாசர் என்ற வெள்ளைத் தந்தங்களின் வசீகரத்தில் ஈடுபட்டு வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்த்தான்.

அடுத்த விநாடி பளீர் என்று சத்தம்! பளீர் என்று மின்னிய தந்தத்தில் ஒன்று பிள்ளையார் கையில்!சுவாமி இது என்ன? அழகான தந்தந்தம்... முழியாகி விட்டீர்களே. பதறினார் வியாசர். அழகு என்பது பார்த்து ரசிப்பதற்கு மட்டுமா. பயன்பட வேண்டாமா. கண்ணுக்கு அழகாக இருக்க எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். கருத்துக்கு அழகாய் இருக்க வேண்டாமா? இதுதான் என் எழுத்தாணி என்றார் கணபதி. என்ன பெரிய கொள்கை? Utility- Beauty என்ற இரண்டில் எது பெரிது? என்றால் Utility is the best Beauty என்றபடி வாழ்க்கை பிறருக்குப் பயன்படவே என்பது பிள்ளையாரிஸம்.

அழகாய் இருக்க ஆசைப்படு. அழகை இழந்தாவது அடுத்தவருக்குப் பயன்படு. வியாசரின் உதவியாளர் வேகவேகமாய் எழுதுகிறார். வியாசர் கடினமான சுலோகங்கள் சொல்லும்போது புரிந்து கொள்ள விநாயகர் யோசித்தார் என்றும் அப்போது வியாசர் மேலும் பல சுலோகங்களை மனதில் எழுதிக்கொண்டார் என்று கதை சொல்வார்கள். அவர்களோடு சண்டைக்குப் போனார் அருணகிரிநாதர்.

என்ன அநியாயம் முழுமுதற்கடவுள் விநாயகர் வியாசர் சொன்ன பிறகாம் எழுத வேண்டும். முன்கூட்டியே என்ன சொல்லப் போகிறார் என்று ஊகித்து எழுதி விடமாட்டாரா? என்று நினைத்தார். போட்டாரே ஒரு போடு. முத்தமிழ் அடைவினை மகாபாரதக் கதையினை, முற்படை கிரிதனில் மேரு மல மீது , முற்படை எழுதிய.- முன்கூட்டியே எழுதிய (அதாவது வியாசர் எழுத சொல்லும் முன்பே எழுதிய) முதல்வோனே- விநாயகனே!

யார் தலைவனுக்கு தலைவனோ அவர்தான் தொண்டருக்குத் தொண்டன். கஷ்டம் வந்தால் புலம்ப வேண்டாம் கைகொடுக்க கடவுள் உண்டு. மனிதன் கடவுளுக்காகவா? இல்லை ! கடவுள் மனிதனுக்காக!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

உண்ண உணவு கொடுத்த பின் சுட்டுக் கொல்வது மனித நீதியா?

இலங்கை ராணுவத்தின் பிடியில் கே.பி.பாலகுமாரன் மற்றும் அவரது மகன்...

இலங்கை போரினவாத அரசால் கொடூரமாக அரங்கேற்றப்பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலை ஐந்தாண்டுகளைக் கடந்திருக்கிறது.

இறுதிக்கட்ட போரின்போது காணாமல் போனவர்கள் மற்றும் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் நிலை குறித்த மர்மம் இன்னும் விலகவில்லை. இந்த நிலையில், அவர்கள் உயிரோடுதான் இருக்கிறார்களா என்ற கேள்வியை சிறீசேன அரசுக்கு எதிராக உரக்க எழுப்ப ஆரம்பித்துள்ளனர் ஈழத்தமிழர்கள்.

மே 19 2009. இலங்கை மண்ணிலிருந்த விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டார்கள் என்று வெற்றியை இலங்கை இராணுவம் கொண்டாடிய தினம். மனித உரிமைகளைக் காற்றில் பறக்க விட்டு காட்டுமிராண்டித் தாக்குதலை 'போர்' என்ற பெயரில் ஈழத் தமிழர்கள் மீது தொடுத்தது இலங்கை இராணுவம்.

அதில், இறந்தவர்கள் எண்ணிக்கை மட்டும் 70 ஆயிரம் பேர். துப்பாக்கித் தோட்டாக்கள் துளைத்து முடமாக்கப்பட்டவர்கள், குடும்பத்தை இழந்து நிர்க்கதியானவர்கள், கணவரை இழந்து விதவையானவர்கள் எண்ணிக்கையும் இதில் அதிகம். வன்னி பகுதியைச் சேர்ந்த 1,46,679 பேர் இதுநாள் வரை காணாமல் போனவர்கள் பட்டியலில் வைத்திருக்கிறது இலங்கை அரசு.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் குழுவின் 28 ஆவது கூட்டத் தொடரில், '2010 இல் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பெயரால் 11,000 பேரை இலங்கை அரசு சிறைப்படுத்தியிருப்பதாகக் கூறியுள்ளது.

அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர், என்ன நிலையில் உள்ளனர் என்ற விவரங்களை வெளியிட அரசு மறுக்கிறது. இது அவர்களின் குடும்பங்களைக் கடும் மன அழுத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

எனவே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விவரங்களை வெளியிட வேண்டும், குடும்ப உறுப்பினர்கள் அவர்களைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும்' என்ற கோரிக்கை ஐ.நா அதிகாரிகள் மத்தியில் முன்வைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் ஆனந்தி சசிதரனிடம் பேசினோம். 'என் கணவர் எழிலன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருகோணமலை அரசியல் பிரிவு பொறுப்பாளராக இருந்தார்.

ராணுவத்தின் பிடியில் அப்பாவி இளைஞர்கள்...

போர் உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது என் கணவர், நான் மற்றும் என்னுடைய மூன்று குழந்தைகளும் 17 ஆம் திகதி முல்லைத்தீவில் இருந்தோம். குடிக்க தண்ணீர்கூட கிடையாது. நாலாபுறமும் தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளும் குண்டு பொழியும் சத்தங்களும் கேட்டுக்கொண்டே இருந்தது.

அதற்கு மறுதினம், வட்டுவாகல் என்ற இடத்தில் ஃபாதர் பிரான்ஸிஸ் என்பவரின் தலைமையில் என் கணவரும் 1,000 இற்கும் மேற்பட்ட போராளிகளும் வெள்ளைக் கொடியேந்தி இலங்கை இராணுவத்திடம் சரண் அடைந்தார்கள்.

அதில், யோகரத்தினம் யோகி, லாரன்ஸ் திலகர், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், முன்னாள் யாழ்ப்பாண அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நிர்வாகச் சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், பிரியன், தீபன், விளையாட்டுத் துறை ராஜா மற்றும் அவரது மூன்று பிள்ளைகள், வில்வன், இன்பன், மஜீத், ஹோல்சர் பாபு, கவிஞர் புதுவை ரத்தினதுரை, வே.பாலகுமார், மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோரும் இருந்ததை நான் நேரில் பார்த்தேன்.

அவர்கள் சரணடைந்து கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளை கடந்து விட்டன. அவர்கள் உயிரோடுதான் இருக்கிறார்களா என்பதை இதுநாள் வரை இலங்கை அரசாங்கம் தெரிவிக்காமல் மௌனம் காத்து வருகிறது' என்றார்.

'இலங்கையில் 2 இலட்சம் தமிழ் மக்கள் காணாமல் போயிருக்கிறார்கள். உயிரோடுதான் இருக்கிறார்களா என்பதை இலங்கை அரசு தெரிவிக்க வேண்டும்' என்று சொன்ன பிரித்தானிய தமிழர் பேரவையின் ஊடகப் பொறுப்பாளர் சுதா, அதற்கான ஆதாரப் புகைப்படத்தையும் நம்மிடம் கொடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி சந்திரநேரு சந்திரகாந்தன் பகிர்ந்து இருக்கும் தகவல்கள் அத்தனையும் அதிர்ச்சி ரகம். 'அந்த சமயத்தில் பசில் ராஜபக்ஷ மூலம் இலங்கை இராணுவத்தைத் தொடர்புகொண்டோம். விடுதலைப்புலிகள் சரணடைய தேவையான அனைத்து விடயங்களையும் செய்வதாக உறுதி தந்தார்கள்.

நான் உடனே நடேசன் அண்ணனைத் தொடர்புகொண்டு விவரத்தைச் சொன்னேன். அவர் என்னையும் வருமாறு அழைத்திருந்தார். ஆனால், முள்ளிவாய்க்கால் பகுதியில் என்னை இராணுவம் அனுமதிக்காததால் நான் செல்லவில்லை. மறுநாள் அதிகாலையில், மகிந்த ராஜபக்ஷ என்னைத் தொடர்புகொண்டு, 'அவர்களுடைய சரணடைதலை நான் முழுமையாக வரவேற்கிறேன். இதை நீங்கள் கட்டாயம் அவர்களிடம் சொல்ல வேண்டும். எத்தனை பேர் சரணடைய போகிறார்கள்?' என்று கேட்டார்.

அதற்கு நான், '3000 போராளிகளும், 22,000 ஜனங்களும்' என்று சொன்னேன். விடயத்தை நடேசனிடம்சொன்னேன். போராளிகள் வெள்ளைக் கொடியை ஏந்தி வருவார்கள். அவர்களைச் சுட்டு விடாதீர்கள் என்று எல்லா முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. சரணடைய வந்தவர்களுக்கு தேநீர் கொடுத்து உபசரித்துள்ளனர். அந்த தேநீரின் சுவை நாக்கிலிருந்து போவதற்குள் அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டனர்' என்று வெடித்திருக்கிறார்.

போரில் காயம்பட்டவர்களுக்கு, தன் உயிரைப்பற்றி கவலைப்படாமல் இறுதிவரை சிகிச்சை அளித்து வந்தவர் மருத்துவர் வரதராஜா. அமெரிக்காவில் வசித்து வரும் அவரிடம் பேசினோம். 'போர், இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அதை போர் என்றே சொல்ல முடியாது. கண்மூடித்தனமான தாக்குதலை இலங்கை இராணுவம்மேற்கொண்டிருந்தது.

அப்போது நான் பணி செய்த அனைத்து மருத்துவமனையிலும் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியிருந்தது. யூனிசெஃப் சொன்ன பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மீதும் தாக்குதல்கள் நடந்தன. ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் மாண்டு விழுந்தார்கள். அடிபட்டவர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்கக் கூடாது என்பதில் இலங்கை ராணுவம் மிகத் தெளிவாக செயற்பட்டது.

நான் இருந்த பகுதியும் கடைசியில் இராணுவத்தின் பிடியில் வந்தது. மே 15 ஆம் திகதி நடந்த ப்பட்ட தாக்குதலில் காயம் அடைந்தேன். கைதுசெய்து மூன்றரை மாதங்கள் சிறை வைத்தனர். பின், சர்வதேச மருத்துவர்கள் அமைப்பின் அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டேன்' என்கிறார் அவர்.

காணாமல் போல இலட்சக் கணக்கானோர் பற்றி விரைவில் உண்மை வெளிவர வேண்டும்.

-யூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானில் மரணதண்டனையை ஒழிக்கக்கோரிய வழக்கு தள்ளுபடி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டுள்ள 8ஆயிரம் தீவிரவாதிகளையும் தூக்கிலிடும் நடவடிக்கையில் அந்நாட்டு அரசு தீவிரம் காட்டி வரும் நிலையில் மரண தண்டனையை ஒழிக்கக் கோரிய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

உலகமெங்கும் மரண தண்டனைக்கு எதிரான குரல் வலுத்து வருகிறது. குறிப்பாக, நாகரீக சமுதாயத்தில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள், அமைப்புகள் கூறி வருகின்றன.

இந்த நிலையில் பாகிஸ்தான் உயர் நீதிமன்றில் மரண தண்டனையை ஒழிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில், "பாகிஸ்தானில் மரண தண்டனை விதிப்பது என்பது, நாட்டின் அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 9 இற்கு எதிரானது.

எனவே இது சட்டவிரோதமானது. மரண தண்டனையை ஒழிக்க உத்தரவிட வேண்டும்" என கூறப்பட்டிருந்தது.

வாடன் கட்சியை சேர்ந்த பாரிஸ்டர் ஜபருல்லா கான் என்பவர் தாக்கல் செய்த இந்த வழக்கை நீதிபதி மியான் சாகிப் நிசார் தலைமையிலான 3 நீதிபதிகளை கொண்ட அமர்வு நேற்று முன் தினம் விசாரித்தது.

விசாரணை முடிவில் இந்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தீர்ப்பில் நீதிபதிகள் கூறி இருப்பதாவது,

குற்றவியல் சட்டங்களில் குறைபாடுகள் இருப்பதாக கருதினால், உரிய திருத்தம் செய்து பாகிஸ்தான் பாராளுமன்றம்தான் அவற்றை களைய வேண்டும்.

இந்த வழக்கில், எந்தவொரு சட்டப்பிரிவை எதிர்த்தோ, மரண தண்டனை குறித்த சட்டப்பிரிவு பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று எந்த சட்டத்தின் அடிப்படையில் குறிப்பிடுகிறீர்கள் என்றால் வழக்குதாரரால் அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 9-I மட்டுமே சுட்டிக்காட்ட முடியும்.

இது எந்தவொரு மனிதரின் உயிருக்கும், உரிமைக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று சொல்கிறது. ஆனால் இந்த உரிமை, சட்டத்திற்கு உட்பட்டதுதான்.

உயர்நீதிமன்றில் தன் அதிகார வரம்பினை செலுத்துகிறபோது, அது பாராளுமன்றத்துக்கு யோசனைகள் கூறலாமே தவிர, உத்தரவு பிறப்பிப்பது என்பது சரியாக இருக்காது.

கிரிமினல் நீதி வழங்கும் முறை நியாயமானதாக இல்லை, அது அர்த்தமற்றது என்ற வழக்குதாரரின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 10-ஏ, நேர்மையான விசாரணை, செயற்பாடுகளுக்கு உறுதி அளித்துள்ளது.

எனவே ஒருவர் தன் மீதான வழக்கில் நேர்மையானபடிக்கு விசாரணை நடத்தப்படவில்லை என கருதினால், அந்த வழக்கு விசாரணைக்கு எதிராகவோ, தண்டனைக்கு எதிராகவோ, தீர்ப்புக்கு எதிராகவோ அவர் உரிய நீதிமன்றத்தில் முறையிடலாம்.

இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (இ)

பாய்ந்து செல்லும் ரோபோ சிறுத்தை அமெரிக்க நிபுணர்கள் புதிய சாதனை

(வோஷிங்டன)

பாய்ந்து செல்லும் 'ரோபோ' சிறுத்தையை அமெரிக்க நிபுணர்கள் உருவாக்கி சாதனை படைத்துள்ளனர்.

பலவிதமான 'ரோபோ'க்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்காவின் மகா சூலுட்ஸ் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த நிபுணர்கள் பாய்ந்து செல்லும் 'ரோபோ' சிறுத்தையை தயாரித்துள்ளனர்.

சிறுத்தை புலியை போன்ற தோற்றத்தில் 4 கால்களுடன் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த ரோபோ அண்மையில் சோதித்து பார்க்கப்பட்டது. அது உண்மையான சிறுத்தைப்புலி போன்று அதிவேகத்தில் பாய்ந்து சென்றது.

பல தடைகளை தாண்டி தானாகவே தாவிக்குதித்து மின்னல் வேகத்தில் சென்றது. இந்த 'ரோபோ' காமிராக்களோ அல்லது மற்ற தொழில் நுட்பங்களோ பயன்படுத்தவில்லை. மாறாக அதில் 'லிடார்' என்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டதாக் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

அமெரிக்க செனட் சபை மீது வெள்ளை மாளிகை காட்டம்

அமெரிக்கப் பிரஜைகளிடமிருந்து பெருமளவிலான தொலைபேசி தரவுகளை சேகரிப்பதற்கு அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கும் சட்டத்தை நீட்டிக்கத் தவறியமைக்காக ஜனாதிபதி அலுவலகம் செனட் சபையை கடுமையாக விமர்சித்துள்ளது.

"பொறுப்பற்ற தவறு" என்று அதனை வர்ணித்துள்ள வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர், செனட் சபை கட்சி பேதங்களை மறந்து நிலைமையை சீராக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் தரவுகளை சேகரிப்பது மிக முக்கியமானது என்று வெள்ளை மாளிகை நிர்வாகம் கூறியுள்ளது.

ஆனால், குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மை பலம் கொண்டுள்ள செனட் சபையில் இருதரப்பு உடன்பாட்டை எட்டமுடியாமல் போய்விட்டது.

எனினும், புதிய சட்டம் எதிர்வரும் நாட்களில் நிறைவேற்றப்பட வாய்ப்புள்ளது எனத் தெரியவந்துள்ளது. (இ-5)

புருண்டியில் பாராளுமன்ற தேர்தலை தள்ளிவைப்பதற்கு அரசாங்கம் தயார்

(புஜும்புரா)

புருண்டியில் உள்ளாட்சி மற்றும் பாராளுமன்ற தேர்தலை தள்ளிவைக்க தயார் என அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. அதில் 3வது தடவையாக அவர் போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெறுகிறது.

இதற்கிடையே ஜனாதிபதிபியார்ரே நகுருன்ஜிசா, தன்சானியா நாட்டில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்க சென்ற போது அங்கு திடீரென ராணுவ புரட்சி ஏற்பட்டது. ஆனால் அப்புரட்சியை அரசு விசுவாச ராணுவ படைகள் புரட்சியை முறியடித்து விட்டது.

இதையடுத்து மே 26ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தல்கள், தேர்தல் ஆணையத்தின் வேண்டுகோள் படி ஜூன் 5ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டது. எனினும் நேற்று முன்தினம் நடைபெற்ற கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில், புருண்டியில் பாராளுமன்ற தேர்தலை ஒன்று அல்லது ஒன்றரை மாதங்கள் தள்ளி வைக்கும் படி வலியுறுத்தப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்டுள்ள அரசு தரப்பு, தேர்தலை தள்ளிவைக்க தயாராக இருப்பதாக அரசு செய்தித் தொடர் பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாடு முழுமையாக தோல்வி அடைந்துவிட்டதாகவும், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா 3ஆவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவதற்கு மாநாட்டில் எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

மேலும் அரசுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்த போவதாகவும் அக்கட்சிகள் கூறியுள்ளன. (இ)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடன் இராணுவம் கடும்துப்பாக்கிச்சண்டை

5பொலிஸார் உட்பட 13பேர் பலி!

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அடிக்கடி இராணுவம் மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தும் தலிபான்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு அரசு ஈடுபட்டு வருகிறது.

இந்தநிலையில் சமன்கான் மாகாணம் டாரா - இ சப் பெய்ன் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடிகள் மீது நேற்று முன்தினம் அதிகாலை தலிபான்கள் திடீரென தாக்குதல் நடத்தினர்.

அப்போது அங்கிருந்த பாதுகாப்பு படை வீரர்கள் தலிபான்களுடன் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். இருதரப்புக்கும் இடையே நடந்த கடும் சண்டையில் 5 பொலிஸ் காரர்கள் உட்பட 13 பேர் பலியாகினர். ஒரு பொலிஸ்காரர் உட்பட 10 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

500 சிறுவர்களைப்பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதற்கு திட்டம்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சதி

ஈராக்கை சுற்றி உள்ள பகுதிகளில் 500 சிறுவர்களை கடத்தி தீவிரவாத தாக்குதலில் ஈடுபடுத்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டமிட்டு உள்ளனர். உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகள் கூறிய தகவல் படி தீவிரவாத குழு சிறுவர்களை தற்கொலை தாக் குதல்களுக்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

சிரியா மற்றும் ஈராக் மேற்கு மாகாணமான அன்பர் மாகாணம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் 500 சிறுவர்களை கடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அன்பார் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த ஒரு வாரத்தில் ஈராக்கின் கிழக்கு மாகாணத்தில் உள்ள வீடுகள், அரசுபதா பள்ளிகள் அல்குயிம், அனஹ் மற்றும் ராவா ஆகிய பகுதிகளில் இருந்து 16 வயதுக்கு கீழ் உள்ள 100க்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு உள்ளனர். என ஈராக் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தியாலோ பொலிஸ் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் காசிம் அல் ஷைதி கூறும் போது, சிறுவர்களை தற்கொலை படை தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கடத்துவதாக கூறினார். மேலும் அவர் கூறும்



போது, அவர்களுக்கு ஆயுத பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஏப்ரல் மாதம் குடும்பத்தில் உள்ள குழந்தை பருவத்தினரை 100க்கும் மேற்பட்டவர்களை கடத்தி ஈராக் கிய படைகளுடன் போரிட வைத்து உள்ளனர் என ரஹாப் அல் அபுதா ஈராக் பெண்கள் பாராளுமன்ற குழு தலைவர் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திர கட்சிக்குள் பயங்கரவாதிகள்!

அமைச்சர் அர்ஜுன குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பயங்கரவாதிகள் இருப்பதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மோசடியான நபர்களே 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை எதிர்க்கின்றனர்.

எமது கட்சியிலும் பயங்கரவாதிகள் உள்ளனர். கட்சி, ஆட்சிக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை.

கொள்ளைகளில் ஈடுபட்ட சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் 19வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் போது அதனை எதிர்த்தனர். அதனை குழப்ப முயற்சித்தனர். 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கும் அதே கதிதான் ஏற்பட்டுள்ளது.

வெளியில் இருப்பவர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் ஒரு பிரிவினர் 20 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதை தடுக்க முயற்சித்து வருகின்றனர்.

விருப்பு வாக்கு தேர்தல் முறை காரணமாக சூதாட்டக்காரர்கள், கசினோகாரர்கள், குதிரை ஓட்ட பந்தயகாரர்கள், மதுசார வர்த்தகர்கள், கசிப்பு முதலாளிகள், திருடர்கள் கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திற்கு வந்தனர்.

பணம் இருந்தால் எவரும் நாடாளுமன்றத்திற்கு வரலாம். அதனை நிறுத்தவே 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

ஒருகோடி பெறுமதியான கஞ்சாவுடன் இலங்கையர்கள் மூவர் கைதாகினார்

இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற இலங்கை தமிழர்கள் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது அவர்களிடமிருந்து இந்திய ரூபா ஒரு கோடி மதிப்பினான 10 கிலோ கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே மண்டபம் தோணித்துறை கடற்கரையில், நேற்று முன்தினம் நள்ளிரவு ராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி கென்னடி தலைமையினான குழுவொன்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதன் போது அங்கு பதுங்கி இருந்த 3 பேரிடம் விசாரணை மேற்கொண்டதில், இவர்கள் இலங்கை, தலை மன்னார் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் மண்டபம் மற்றும் குடியாத்தம் அகதிகள் முகாமில் தங்கியிருந்து, கள்ள தோணியில் இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்றதும் தெரியவந்தது.

இதனை அடுத்து அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு,மண்டபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

மக்களால் மாத்திரமே என்னை பதவியிலிருந்து நீக்க முடியும்

பிரதமர் பதவியிலிருந்து மக்களால் மாத்திரமே தன்னை நீக்க முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி கிடைத்த மக்கள் ஆதரவு தான் பிரதமராவதற்கு கிடைத்ததென பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் யார் பிரதமராக வேண்டும் என்பதனை மக்களே தீர்மானிக்க முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

கொலைக்குக் கண்டனம்

(திருகோணமலை)

மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றியவருமான சச்சிதானந்தம் மதிதயன் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டமையைகிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர்கள் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கருத்தியல் ரீதியாக எழும் எதிர்வினை மற்றும் முரண்பாடுகளை கருத்தியல் ரீதியாக எதிர்கொள்ளாமல் வன்முறை வழியை தேர்ந்தெடுத்ததினால் இன்று ஓர் அரச அதிகாரியை நாம் இழந்து நிற்கின்றோம். சச்சிதானந்தம் மதிதயன் சமூகசேவை உத்தியோகத்தராக மட்டுமல்லாது தான் வாழ்ந்த சமூகத்திற்கும் பல காத்திரமான பணிகளை ஆற்றியுள்ளார்.

படுகொலை கலாசார இருண்ட யுகம் நிறைவுபெற்று விட்டது என நாம் எண்ணியிருந்த நேரத்தில் இப் படுகொலை நடைபெற்றுள்ளது. முரண்பாடுகளை தீர்ப்பதற்கு கொலை ஒரு வழியாகவோ அல்லது தீர்வாகவோ அமையமாட்டாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட சச்சிதானந்தம் மதிதயனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் கலாசார உத்தியோகத்தர்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெறுவதற்குத் தீர்மானம்

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை யாழ்பாடி விடுதியில் நடைபெற்ற கூட்டத்தில் இந்திய இலங்கை மீனவர்களின் தற்போதைய நிலவரங்கள், மாவட்ட மட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தெற்குமீனவர்களின் அத்துமீறி அதிகரித்த வருகை, மானியங்களில் மீனவர்கள் அடைந்த நன்மைகள் மற்றும் பல்வேறுபட்ட பொதுவான விடயங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டன.

1.இக்கூட்டத்தில் மீனவர்கள் எதிர் நோக்கும்பிரச்சினைகளுக்குதீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மீனவ மக்களை ஒருங்கிணைத்து அவர்களை சக்திப்படுத்துவது அதன் பிரகாரம் மாவட்டம் தோறும் பொது வான கூட்டங்கள் கிராமமட்டத்திலான சந்திப்புக்களை முன்னெடுப்பது அத்துடன் வடபகுதி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற் கான முயற்சியாகக் கொண்டு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மூலம் வடமாகாண சபை முதலமைச்சருக்கு மகஜர் சமர்ப்பித்து கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்துவதுபோன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் பொதுச்சபை அங்கத்தவர்கள் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் மற்றும் மாவட்ட இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-3)

பிரிவுத்துயர் பகிர்வு

திருமதி செல்லையா செல்லம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்லம்மா கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப1.0 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

சிவஸ்ரீ சுப்பையா ஐயர் கார்த்திகேசு ஐயர்

உடுவில்புதுமடம்மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சுப்பையா ஐயர் கார்த்திகேசு ஐயர் கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப10. 30 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

சின்னையா மகேஸ்வரி

செம்மணி வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகேஸ்வரி கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பி.ப.3 மணியளவில் 110,செம்மணி வீதியில் நடைபெற்று பின்னர் திருவுடல் சென்ஜேம்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

கைலாயபிள்ளை திருநாவுக்கரசு

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, திருவையாறு 3ஆம் பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை திருநாவுக்கரசு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில்தகனம் செய்யப்படும்.

அந்தோனிப்பிள்ளை மகேந்திரன்

(சட்டத்தரணி)

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மகேந்திரன் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை பி.ப 12.30 மணியளவில் Willesden Green Baptist Chur ch,94 High Road,London NW10 2PR,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தர்மசீலன் பாலசுப்பிரமணியம்



கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து,லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மசீலன் பாலசுப்பிரமணியம் கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் பி.ப.1.15 மணியளவில் Enfield Crematorium, Great Combridge Road,Enfield EN1 4DS United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

குமாரையா கணேசமூர்த்தி

முல்லைத்தீவு தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும் கணுக்கேணி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரையா கணேசமூர்த்தி கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மு.ப. 10 மணியவில் அவலது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கற்பூரப்புல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கிருஷ்ணதாஸ் ரவீந்திரன்

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் நோர்வே, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணதாஸ் ரவீந்திரன் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.1.00 மணிவரை Holders Hill Road,Lon don NW7 1NB,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல்தகனம் செய்யப்படும்.

அருமைநாதன் கிருஸ்ணஜெகன்

சாவகச்சேரி மீசாலையை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைநாதன் கிருஸ்ணஜெகன் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பி.ப 1.30 மணி தொடக்கம் 2 மணிவரை Depart le Mercredi, Institut Medico-legal Quai De La Rapee 75012 Paris France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

செல்லையா அருளானந்தன்

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Soest ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அருளானந்தன் கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.2மணிவரை Osthofenfrie dhof, 59494 Soest,Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிகளைத் தூண்டும் பேச்சுக்களை இலங்கை அரசு உடன் நிறுத்த வேண்டும்

(சென்னை)

உணர்ச்சிகளை தூண்டும் பேச்சுக்களை இலங்கை உடனே நிறுத்த வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் டில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், "பாகிஸ்தான் குறித்த மிகத் தெளிவான கொள்கையை மத்திய அரசு கொண்டுள்ளது. இதில் எந்தக் குழப்பமோ, தடுமாற்றமோ இல்லை.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் கடந்த ஆண்டு டில்லி வந்தபோது, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரு நாடுகளும் மூன்று கொள்கைகளை முடிவு செய்தன. இந்த மூன்று கொள்கைகளும் சிம்லா மற்றும் லாகூர் பிரகடனங்களிலும் ஒரு பகுதியாக இடம்பெற்றுள்ளன.

முதலாவது, பேச்சுவார்த்தை மூலம் ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க நாம் தயார். இரண்டாவது, நமக்குள் (இந்தியா-பாகிஸ்தான்) மட்டுமே இப்பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். எந்த மூன்றாவது நாடும் மத்தியஸ்தம் செய்யக்கூடாது. மூன்றாவது, பயங்கரவாதத்தையும் வன்முறையையும் ஒதுக்குவதன் மூலம் நல்லிணக்கச் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

வெளியுறவு அமைச்சர்

இந்த மூன்று கொள்கைகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று பாகிஸ்தானிடம் தொடர்ந்து கூறி வருகிறோம்.

கடந்த ஓராண்டில் இந்தியா மற்றும் இலங்கை இடையிலான உறவு பெரிய அளவில் வெளிப்படைத்தன்மை கொண்டது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இரு தரப்பிலும் நான்கு முறை பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமீபத்தில் இருதரப்பிலும் மீனவர்களுக்கு இடையில் ஒரு இருதரப்புக் கூட்டம் நடைபெற்றது. தமிழக மீனவர்கள் தரப்பில் வைக்கப்பட்ட ஒரு கோரிக்கையை இலங்கை தரப்பினர் நிராகரித்து உள்ளனர். மீனவர்கள் பிரச்சினையை பொறுத்தவரை எங்கள் அரசாங்கத்துக்கு நல்ல புரிதல் உள்ளது.

இருதரப்பிலும் எல்லை கடந்து மீனவர்கள் மீன் பிடிக்கின்றனர். தமிழக மீனவர்கள் இந்திய எல்லையைக் கடந்தும், இலங்கை மீனவர்கள் இந்திய எல்லைக்குள் வந்தும் மீன்பிடிக்கின்றனர். இரு தரப்பிலும் மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். எனவே, இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்போகிறோம்.

இலங்கையின் தரப்பில் இருந்து அடிக்கடி உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அந்த அறிக்கைகளும், பேச்சுக்களும் சுமுகமான தீர்வு பிறக்கும் வழிகளை அடைத்து விடுகிறது.

உணர்ச்சிகளைத் தூண்டும் பேச்சுக்களை அவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். இது இரு தரப்பு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. அதனால், இதனை மனிதநேய அடிப்படையில் அணுக வேண்டும்" என்றார். இந்த ஓராண்டில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை பெருத்த வெற்றி அடைந்துள்ளது. கடந்த ஓரா ண்டில் இந்த அரசாங்கம் மொத்தம் 101 நாடுகளுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

ஈராக் நாட்டில் தீவிரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள இந்தியர்கள் அனைவரும் கொல்லப்பட்டவர்கள் என்று அங்கிருந்து தப்பித்த ஒருவர் கூறுகிறார் என்பது உண்மை தான். ஆனால், எனக்கு கிடைத்த ஆதாரபூர்வமான தகவல்களின் அடிப்படையில் அங்கு சிறைப்பட்டுள்ள 39 இந்தியர்களும் பத்திரமாக உள்ளார்கள். தெற்கு சீனகடலில் எண்ணெய் அகழ்வு பணியில் இந்தியா எந்த விதிமுறைகளையும் மீறவில்லை. இது தொடர்பான சீனாவின் ஆட்சேபனை ஏற்கத்தக்கதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்தால் ஜெயா பதவிக்கு பாதிப்பு

பி.வி.ஆச்சார்யா தெரிவிப்பு

(பெங்களூர்)

ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதை எதிர்த்து முதலில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என அரசு சட்டத்தரணி ஆச்சார்யா பேட்டியளித்துள்ளார்.

மேல்முறையீட்டின் போது உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு தடை கோர முடியும் என ஆச்சார்யா கூறியுள்ளார். உச்சநீதிமன்றம் தடை விதித்தால் ஜெ.வின் தகுதி நீக்கம் நீடிக்கும் என்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தால் ஜெ. பதவிக்கு பாதிப்பு ஏற்படும் என ஆச்சார்யா விளக்கம் அளித்துள்ளார்.

மேலும் கர்நாடக அரசு உத்தரவிட்டால் வழக்கில் ஆஜராக தயார் என ஆச்சார்யா கருத்து தெரிவித்துள்ளார்.

ஜெ. சொத்துக்குவிப்பு வழக்கில் விசாரணை செய்தே நீதிமன்றம் தண்டனை விதித்தது குறிப்பிடத்தக்கது.

மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றம் மாறுபட்ட தீர்ப்பை அளித்துள்ளது என்று பி.வி. ஆச்சார்யா கூறியுள்ளார்.

மாறுபட்ட தீர்ப்பு வந்துள்ள நிலையில் உச்சநீதிமன்றம் தான் தெளிவுபடுத்த வேண்டும் என பெங்களூரில் ஜெ.வழக்கில் ஆஜரான அரசு சிறப்பு சட்டத்தரணி ஆச்சார்யா பேட்டியளித்துள்ளார். (இ-5)

பாரதச் செய்தி

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில்

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் மீண்டும் தாக்குதல்

(பூஞ்ச்)

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில், அதை மீறி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளது.

அம்மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டம், கிருஷ்ணாகட்டி செக்டாரில் எல்லைகோடு அருகே உள்ள இந்திய ராணுவத்தின் ஆறு நிலைகள் மீது நள்ளிரவில் தொடங்கிய இத்தாக்குதல் இன்று காலை 6 மணி வரை நீடித்தது.

இதற்கு இந்திய ராணுவமும் தக்க பதிலடி கொடுத்தது. இத்தாக்குதலில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

ஒரு மோடிக்கு 100 ராகுல்கள் வந்தாலும் ஈடாகாது-சிவசேனா

பிரதமர் நரேந்திர மோடியின் சக்திக்கும், திறனுக்கும் முன்பு 100 ராகுல்கள் வந்தாலும் ஈடாக மாட்டார்கள் என்று சிவசேனா தெரிவித்துள்ளது. சிவசேனா கட்சியின் இதழான சாம்னாவில் இது குறித்து வெளியான கட்டுரையில், 56 நாட்கள் தலைமறைவு வாழ்க்கைக்குப் பிறகு ராகுல் பேசத் துவங்கியுள்ளார். அவரது கட்சிதொண்டர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் அவர் பேச முயல்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

கட்டாரில் 2014 ஆம் ஆண்டில் மட்டும் 279இந்திய தொழிலாளர்கள் மரணம்

கடந்த 2014-ம் ஆண்டில் மட்டும் கட்டார் நாட்டிற்கு வேலைக்குச் சென்ற 279 இந்திய கட்டட தொழிலாளர்கள் மரணமடைந்திருப்பதாக சர்வதேச மன்னிப்பு சபையின் (Amnesty) ஆய்வு தெரிவித்துள்ளது.

"Promising Little, Delivering Less: Qatar and Migrant Abuse ahead of the 2022 Football World Cup" என்ற தலைப்பில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளது.

2022-ம் ஆண்டு கட்டாரில் நடக்கவுள்ள பிபா காற்பந்து தொடர் போட்டிக்கான கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கான கட்டட தொழிலாளர்கள், பெரும்பாலும் இந்தியாவிலிருந்து தான் அதிகளவு சென்றிருக்கிறார்கள்.

இதுகுறித்து கட்டாரிலிருந்து வந்த கங்கா பிரசாத் கூறுகையில் "எனக்கு அங்கு, அடையாள அட்டை எதுவும் கொடுக்கப்படவில்லை. இதனால் வேறெங்கும் வெளியே செல்ல முடியாமல் கட்டுமான தளம், மற்றும் தொழிலாளர்களுக்கான நாற்றமடிக்கும் அறையிலேயே என் காலம் கழிந்துவிட்டது. என் பாஸ்போர்ட் ஸ்பான்சர்களின் கையிலேயே இருக்குமென்பதால், வேறு எங்கும் சென்று வேலை தேடவும் முடியாமல் போய்விட்டது." என்றார்.

கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 1000 இந்திய தொழிலாளர்கள் கட்டாரில் மரணமடைந்துள்ளனர். இந்தியா மட்டுமின்றி நேபாளத்திலிருந்து சென்ற 162 தொழிலாளர்களும் கடந்த ஆண்டு மரணம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

'ஜெ' சொத்துக்குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றில் மேல்முறையீடு

கர்நாடக அமைச்சரவை முடிவு

(பெங்களூர்)

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய கர்நாடக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் பெங்களூர் உயர் நீதிமன்றம் கடந்த மே 11ஆம் திகதி ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இதையடுத்து, தமிழக முதல்வராக அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கர்நாடக உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்து கர் நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வது குறித்து பெங்களூரில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெங்களூர் உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புக்கு எதிராக இந்த வழக்கில் ஆஜரான கர்நாடக அரசு வழக்குரைஞர் ஆச்சார்யா மற்றும் தமிழக அரசியல் கட்சிகள் பலவும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

மேலும், கர்நாடக அரசு தலைமை வழக்குரைஞரும், சொத்துக் குவிப்பு வழக்கில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று கர்நாடக அரசை வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

இஸ்ரேல் செல்ல பிரதமர் திட்டம்

சுஷ்மா சுவராஜ் தகவல்

இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு செல்ல பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளதாக மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். டில்லியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் இதனை தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "இந்த ஆண்டு இறுதிக்குள் இஸ்ரேல், ஜோர்தான், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறேன். இதைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேல் செல்ல வுள்ளார். பிரதமர் பயணத்துக்கான திகதி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என அவர் மேலும்

தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுக்கடலில் தத்தளிக்கும் ரோஹின்ஜா முஸ்லிம்கள்

ஆயிரக்கணக்கான வங்க தேசிகளும் ரோஹின்ஜா அகதிகளும் மிகப் பெரிய சரக்குக் கப்பல்களில் அந்த மான் கடல் பகுதியில், ஆள் கடத்தும் இடைத் தரகர்க ளால் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள னர். அந்தக் கப்பல்களில் பயணம் செய்து பிறகு தப்பி வந்தவர்களிடம் நேரடியாகப் பேசியதில் இந்தக் கொடூரம் தெரியவந்துள்ளது. இந்தத் தரகர்களுக்கு மிகப் பெரிய மாஃபியா கும்பல் பின்புல மாக இருந்து செயற்படுகிறது.

தாய்லாந்து, மலேசிய நாடுகளைச் சேர்ந்த அதிகா ரிகள் ஆட்கடத்தும் தரகர்கள் மீது கடும் நடவடிக்கையை எடுக்க முற்பட்டதை அடுத்து, அவர்களை எந்த நாட்டிலும் இறக்கி விடாமல் கடலி லேயே பிணையாகப் பிடித்து வைத்துள்ளனர். அகதிகளை விட்டு அவர்களுடைய உற வினர்களுக்கு கைபேசி மூலம் பேசச் செய்து அதிகத் தொகை யைக் கேட்கிறார்கள். பேசிக் கொண்டிருக்கும் போதே அகதிகளைக் கடுமையாக அடித்து அவர்கள் அலறு வதை உறவினர்கள் கேட்கச் செய்கிறார்கள். பணம் கிடை த்தால் அவர்களைக் கரைக் குக் கொண்டுபோய் விடுகி றார்கள். நோயாலோ, சாப்பாடு பற்றாமலோ, அடிப்பதாலோ அகதிகள் இறந்தால் அவர்க ளைக் கப்பலிலிருந்து தூக் கிக் கடலில் வீசிவிடுகிறார் கள் என்ற திடுக்கிடும் தகவல் களை அவர்கள் தெரிவிக்கி றார்கள். அத்துடன் பெண்க ளையும் சிறுமிகளையும் பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்குகிறார்கள்.

கரையிலும் பல முகாம் களை அதிகாரிகளுக்குத் தெரியாமல் ரகசியமாக இடைத் தரகர்கள் நடத்துகிறார்கள். அவற்றில் இறப்பவர்களைப் பெரிய குழி தோண்டிப் புதை த்துவிடுகிறார்கள். தெற்கு தாய்லாந்திலும் மலேசியா விலும் இப்படி அகதிகள் புதைக்கப்பட்ட ரகசியக் கல்ல றைகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. சில இடங்களில் ஒரே குழியில் ஏராளமான மேற்பட்ட சடலங்கள்கூடப் புதைக்கப்பட்டிருக்கின்றன.

வேலை தேடியும் உயி ரைக் காப்பாற்றிக் கொள் ளவும் வெளிநாடுகளுக்குச் செல்லும் மக்கள், அதற்கு உதவுவதாகக் கூறும் இடைத் தரகர்களை நம்புகிறார்கள். அவர்கள் முதலில் 200 டொல ர்கள் கொடுத்தால் போதும் என்கிறார்கள். பிறகு, கப்ப லில் செல்லும்போது வேறு

இடைத் தரகர்கள் அங்கு அடியாட்களுடன் வருகிறார் கள். அவர்கள் அதிகத் தொகை கேட்டு அகதிகளைத் துன்பு றுத்துகிறார்கள்.

அகதிகள் மீது அக்கறை கொண்டு அவர்களை அரவ ணைக்கும் 'ஆங்கன்' என்ற அமைப்பைச் சேர்ந்த கிறிஸ் லிவா சொல்லும் தகவல்கள் நம்மை அதிரவைக்கின் றன. "இடைத்தரகர்களால் இந்தத் தொழிலை விட முடி யாது. எனவே, கப்பல்களில் உள்ளவர்களைக் கரைக்கு அழைத்துவராமல் கடலி லேயே சிறைவைத்து மிரட் டிப் பணம் பறிக்கிறார்கள். பெப்ரவரிக்குப் பிறகு, மேலும் சில ஆயிரம் அகதிகள் கப்பல் களில் சேர்ந்துள்ளனர். தாய்லா ந்து முகாமில் இறந்தவர்களின் எண்ணிக்கையைப் போல பல மடங்கு கடலில் இறந்தி ருக்கிறார்கள்" என்கிறார்.

ரோஹின்ஜா இளைஞர் ஒருவர் சொல்கிறார்: "கால் நடைகளை ஏற்றிச்செல்லும் மியன்மார் படகில் ஏறி வெளி நாட்டில் அடைக்கலம் கேட் கச் சென்றேன். கடலில் 9 நாட்கள் இருந்ததற்குப் பிறகு தாய்லாந்து கடற்கரைக்கு அருகில் மிகப் பெரிய சரக்குக் கப்பலில் ஏற்றப்பட்டோம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்கள் இருந்தனர். அதில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள். அதில் 14 நாட்கள் இருந்தோம். நாங்கள் அந்தக் கப்பலில் ஏற்றப்பட்ட உட னேயே ஆட்களைக் கடத்தும் 3 பேர் கையில் கைபேசியு டன் அந்தக் கப்பலில் ஏறினா ர்கள். யாருக்கெல்லாம் உற வினர்களின் தொலைபேசி எண்கள் தெரியும் என்று கேட்டார்கள். ஒவ்வொரு வராக அழைத்து, உறவின ரிடம் பேசி ஆயிரக் கணக் கில் பணத்தைக் கொடுத்தால் தான் விடுவிப்போம் என்று சொல்லச் சொன்னார்கள். அப்படிப் பேசிக்கொண்டிருந்த போதே அடித்து அலற வைத் தார்கள். யாருடைய எண் ணும் தெரியாது. நெருங்கிய உறவினர்கள் யாரும் இல்லை என்று கூறியவர்களைக் கடு மையாக அடித்தார்கள். கப் பல் இன்ஜினின் சங்கிலியை பிளாஸ்டிக்கால் மூடி, அதைக் கொண்டு அடித்தார்கள். அவர் கள் அடித்த பிளாஸ்டிக் தடிக்கு ள்ளும் இரும்பு போன்ற கன மான எதையோ மறைத்து வைத்திருந்தார்கள். ஒவ் வொரு அடியும் எலும்பு உடை யும் அளவுக்கு இருந்தது. நான் அங்கிருந்து புறப்படு வதற்கு முன்னால் இப்படி அடித்ததி லேயே 3 பேருக்கு பக்கவா தம் ஏற்பட்டு சுருண்டு விழுந் தார்கள். ஒருவர் செத்து விழு ந்தார். அவருடைய சடலத்தை உடனே கப்பலின் மேல் தளத் திலிருந்து கடலுக்குள் தூக்கி வீசிவிட்டார்கள்."

தாய்லாந்தின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் தொலைபேசி மூலம் பேசிய போது இதே போன்ற சம்பவ ங்களை விபரித்தார். "நான் அந்தப் படகில் பெப்ரவரி முதல் 3 மாதங்கள் தங்கியிருந்தேன். அவர்களால் அழைத்து வரப் பட்ட அகதிகளைத் தினமும் அழைத்து அடிப்பார்கள். சிலரை ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறைகூட அடித்திருக்கிறார் கள். அந்தப் படகில் 1,500க் கும் மேற்பட்டவர்கள் இருந்த னர்" என்றார்.

"எண்ணெய் ஏற்றிச் செல் லும் கப்பலை, அகதிகளைத் தங்க வைக்கும் கடல் முகா மாக இடைத்தரகர்கள் பயன் படுத்தியுள்ளனர். அதில் 2,000 பேர் இருந்தனர். சுமார் 2 மாதங்களுக்குக் கடலிலே யே அது இங்கும் அங்கும் போ கொண்டிருந்தது. கப்பலை வாடகைக்கு எடுத்து, அகதி களை மிரட்டிப் பணம் சம்பாதி க்கும் அளவுக்கு இடைத்தரகர்க ளுக்கு அதில் ஆதாயம் கிடை த்து வந்தது" என்கிறார் தாய் லாந்து பொலிஸ் மைய ஆலோ சகர் அப்துல் கலாம். சேனல்-4 நியூஸ் தொலைக் காட்சி க்கு அவர் பேட்டியளித்தார். இந்தக் கதைகள் முடிவில்லா மல் தொடர்ந்து கொண்டேயி ருக்கின்றன. (இ-5)

கால் முறிந்து குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

சாவகச்சேரி கப்பூது வீதி யில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும் பஸ்தர் ஒருவர் கால்முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் புலோலி மேற்கு மணற்புலோலியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை ஸ்ரீதயாராம் (வயது-30) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு விப த்திற்குள்ளாகியுள்ளார்.

வேகக்கட்டுப்பாட்டை இழ ந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதாலேயே அவரது கால் முறிந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வீதிப் போக்குவரத்துப் பொலி ஸார் பிரஸ்தாப நகரை தமது மோட்டார்சைக்கிளில் ஏற்றிபரு த்தித்துறை வைத்தியசாலைக் குக் கொண்டு சென்றனர்.

மேலதிக சிகிச்சைகளுக்க காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார். (இ-3-60)

விஹாரைக்குச் சென்றாலும் குறை சொல்கின்றார்களாம்

மகிந்த ஆதங்கம்

நான் விஹாரைக்கு சென் றாலும் இன்று சிலர் குறை சொல்கின்றார்கள் என முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

கெகிராவ பிரதேச விஹா ரையில் இடம்பெற்ற மத வழிபாடுகளில் கலந்து கொண் டதன் பின்னர் மக்களை சந்தித்து கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நான் ஜனாதிபதி யாக செயற்பட்ட காலத்தில் இரு ந்து இன்று வரை எனது கைக ளில் பிரித் நூல்கள் இன்றி என்றாவது என்னை கண் டிருக்கின்றீர்களா என அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

பௌர்ணமி தினங்களி லும் அசைவ உணவுகளில் பைட் செய் பவர்களே எனக்கு எதிராக விரல் நீட்டி, இவன் தினமும் விஹாரைக்கு செல் கின்றான். இவனுக்கு வேறு வேலை இல்லையா என கேட் கின்றார்கள்.

மேலும் மக்களுக்கு யாரே னும் வாக்குறுதிகளை வழங் கினால் அதனை நிறைவே ற்ற வேண்டும், 100 நாள் வேலைத்திட்டத்தை பாருங் கள் அவற்றில் முக்கியமான வைகள் நிறைவேற்றப்பட வில்லை என முன்னாள் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள் ளார். (இ-5)

ஜூன் மாதம் 377பேருக்கு காசநோய்ப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காச நோய் தொற்று கூடுதலாக ஏற்படும் என சந்தேகிக்கப்ப டும் பகுதிகளில் கடந்த மாதம் 377 பேருக்கு காசநோய் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக யாழ்.மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி ஆர்.மாணிக்கவாசகன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காசநோய் தொற்றை கட்டு ப்படு த்தும் நோக்குடன் காச நோய் வைத் தியசாலையில் காசநோய் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் உற வுகளை மற்றும் அயலவர்க ளிடையே காசநோய் பரி சோ தனை மேற்கொண்டு வரு கின்றோம்.

அந்த வகையில் கடந்த மாதம் சுன்னாகம் பகுதியில் 94 பேரும் செல்வச்சந்நிதி பகுதியில் 44 பேரும் ஏழாலை பகுதியில் 68 பேரும் துன் னாலைப் பகுதியில் 57 பேரும் குரு நகர் பகுதியில் 73 பேரும் இளவாலை பகுதியில் 20 பேரும் சிவபூமி பாடசாலையில் 21 பேரும் எக்ஸ்ரே கதிர் பரிசோ தனை மற்றும் சளிப் பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டுள் ளார் கள்.

தொடர்ந்து இவ்வாறான சேவை முகாம் ஒவ்வொரு பிரதேசத்தி லும் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

யாழ்ப்பாணம் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தி னரின் ஏற்பாட்டில் கூ.நவநீத கிருஷ்ணன் எழுதிய 'உயில்' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் வட மாகாணத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட நூலகங்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்ப ளிப்பாக வழங்கப்ப ட்டன.

(படங்கள்:- சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங்கோல் ஆட்சி
நெடுங்காலம் நில்லாது
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

பாண்டவர் புதல்வர்களை அசுவத்தாமா கொன்ற நேரம் இது

பாண்டவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார்கள். அந்த அனுபவிப்புகளின் அறுவடைதான் தர்மத்தின் வெற்றி – தருமரின் வெற்றி.

பாண்டவர்களுக்குத் துரியோதனன் கேடுவிளைவிக்காமல் விட்டிருந்தால், பாரதப்போர் நடந்திருக்காது. பாரதப்போர் நடக்காமல் இருந்திருந்தால், கீதோபதேசம் இந்த உலகிற்குக் கிடைத்திருக்காது.

எனவே தர்மம் வெல்ல வேண்டுமாயின் – தளைக்க வேண்டுமாயின் அதர்மம் வீழ்ச்சியடைய வேண்டும். தர்மம் வீழ்ச்சியடைதல் என்பதன் மறுபக்கம் அதர்மம் மேலோங்குதல் என்பதாகும். அதர்மம் மேலோங்கினால் மட்டுமே அழிவு ஏற்பட முடியும்.

பாரதத்தில் கௌரவர்கள் அதர்மத்தின் அடையாளமாகக் காட்டப்படுகின்றனர். அதர்மத்தின் சொந்தக் காரர்களான கௌரவர்களும் அதன் தலைவன் துரியோதனனும் தர்மத்தின் வடிவினராகிய பாண்டவர்களுக்குப் பெரும் துன்பம் இழைக்கின்றனர். அதன் முடிவு தான் குருஷேத்திரத்தில் நடந்த 18 நாள் போர்.

18 நாள் போரில் அதர்மம் அழிந்து போகிறது. அது காறும் வீழ்ந்துகிடந்த தர்மம் வீறுகொண்டு – வெற்றி கொண்டு எழுகை பெறுகிறது.

ஆக, தர்மம் வீழ்ந்தால் அது மீளவும் எழுகை பெறும். அதர்மம் வீழ்ந்தால் அது அழிவடையும் என்ற தத்துவத்தை உணர்த்துவதே பாரத இதிகாசம். இத் தத்துவத்தை உணர்ந்து அதன் வழி வாழ்பவர்கள் மன நிறைவோடு வாழ்கின்றனர்.

தர்மம் பற்றி சிந்தியாதவர்கள் எந்நாளும் பதற்றத்தோடும் மன அழுத்தத்தோடும் காலம் கழிக்கின்றனர்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜ பக்ஷவின் ஆட்சியில் அதர்மம் கோலோச்சியது. எவரும் எதுவும் கதைக்க முடியாது. நாங்கள் இட்டதே சட்டம் என்ன இறுமாப்பில் மகிந்தவின் ஆட்சி அமைந்திருந்தது.

தங்கள் அரசுக்கு எதிராக எவர் கதைத்தாலும் அவரை சிறையில் அடைத்தல் என்ற நடைமுறை பின் பற்றப்பட்டது. எனினும் மகிந்தவை தோற்கடிக்க அவரோடு ஒருவர் இருந்தார் என்பதை அறியமுடியாமல் போனதுதான் அதர்மத்தின் மாயை.

அதர்மம் தோற்று தர்மம் வென்ற பின்பு மீளவும் அதர்மம் வெல்வதற்கு ஒரு போதும் இடம்கொடுக்கலாகாதென்பதே இங்கு நோக்குதற்குரியது.

அதர்மம் தோற்று தர்மம் வெல்லுகின்ற சந்தர்ப்பத்தில் தர்மத்தின் வெற்றியை சிதைக்க அதர்மத்தின் பக்கத்தில் இருப்போர் கடும் பிரயத்தனம் செய்வர்.

பாரதப்போரின் இறுதியில், துரியோதனன் வீழ்ந்து போகிறான். துரியோதனன் நிலத்தில் வீழ்ந்த போதிலும் அசுவத்தாமா என்ற துரியோர்தனின் நண்பன் பாண்டவர்கள் வெல்வதை வெறுத்தான். அதனால் போர்த் தருமத்தை மீறி இரவு நேரத்தில் பாண்டவர் புதல்வர்கள் உறங்குகின்ற வேளையில் அவர்களை வெட்டிச்சரித்தான். தர்மம் வென்று விட்டது என்று நினைத்திருந்த நேரத்தில் அதர்மம் செய்த நாசகாரம் அது.

ஆக, மகிந்த தோற்று மைத்திரிவெற்றுவிட்டார் என்ற நினைப்போடு தர்மத்தை விரும்புவோர் உறங்கி விடக் கூடாது.

இலங்கை அரசியலில் இது அசுவத்தாமா பாண்டவர் புதல்வர்களைக் கொன்ற நேரம். எனவே மகிந்தவை மீண்டும் தேர்தலில் நிறுத்தி, அவரை ஆட்சிக்குக் கொண்டுவர அவரோடு இருந்த அசுவத்தாமாக்கள் முயற்சிப்பர்.

இந் நேரத்தில் தர்மம் வெல்லப் பாடுபட்டவர்கள் விழிப்பாக இருந்து அசுவத்தாமாக்களையும் அடக்கம் செய்ய வேண்டும். அப்போது தான் வென்ற தர்மம் நிலை பெறும்.

புகைப்பொருள் எதிர்ப்பு தினவிழா அளவெட்டி அருணோதய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச புகைபொருள் எதிர்ப்பு தின நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அளவெட்டி அருணோதய கல்லூரியில் சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாமவலயகல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராசா, யாழ்.றோட்டறிக் கழகத்தலைவர் சி.அனுராஜ், அருணோதயக் கல்லூரி அதிபர் என்.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை வலிகாமம் வலயத்தில் 2014 இல் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அங்கு இடம்பெறவுள்ளது. (இ-3)

அவுஸ். தொழில்நுட்ப முகாமைத்துவ கல்லூரி இன்று யாழில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்லூரி இலக்கம் 403, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இன்று முற்பகல் 10.22 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கல்வி மற்றும் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி பிரதம விருந்தினராகவும் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் ஆர்.இரவீந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



பதினொராம் நாள் (தீர்த்தம்)

தீர்த்தமாடி வரும் எங்கள் நீராவிப்பதி விநாயகனே!
தீர்த்திடுவாய் எங்கள் இன்னல்கள் எல்லாமே!
நேர்த்திகள் பல வைத்து உன்னைக் கைதொழுவோம் கரிமுகனே!
தீர்த்தநாள் தனிலே போக்கிடுவாய் துயரமல்லாம்!
ஐந்து கரத்தோனே! ஆனை முகத்தோனே!
சித்தி விநாயகனே சீரான வாழ்வு தருவாய்!
திருவீதி வலம் வந்தே திருக்கோலம் காட்டுமையா!
பணிந்தோம் உன் பாதம் ஞான முதல்வனே சரணம்! சரணம்!

பீ.இராகுலன்
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்

அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய 10பேருக்கு 78500 ரூபா அபராதம் விதிப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வாகன அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலு த்திய 10 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 78 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு மாதமும் 14 நாட்களுக்கு வாகனம் செலுத்துவதற்கான அனுமதியை இரத்துச் செய்யுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 10 பேரும் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

அரசியல் நோக்கம் வேறுபட்டாலும் குடும்பத்திற்கு பாதிப்பில்லை–பிரசன்ன

(கொழும்பு)

தற்போதைய அரசில் அர்ஜுன முதலமைச்சர் பிரசன்ன ரண துங்க ரணதுங்க இருக்கின்றார். நான் மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசி யாக இருக்கின்றேன் என மேல் மாகாண சபை சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்றுக் காலை வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள சகோதரர்களாக இருந்தாலும், ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் உண்டு அதன் அடிப்படையிலேயே நாங்கள் செயற்படுகின்றோம்.

இதனால் எங்கள் குடும்பங்களுக்குள் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடையாது.

நாங்கள் மிக ஒற்றுமையாகவே குடும்ப நடவடிக்கைகளில் இருக்கின்றோம்.

அரசியல் வேறு குடும்பம் வேறு என மேல் மாகாண சபை முதல மைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

பாக்.இராணுவ அதிகாரி இலங்கை விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஜெனரல் ரஹீல் ஷெரிப் எதிர்வரும் 5-ம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என குறிப்பிடப்படுகின்றது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஜெனரல் ரஹீல் ஷெரிப் இலங்கைக்கு வரவிருந்த போதிலும் அவரது விஜயம் இரத்து செய்யப்பட்டது.

பாகிஸ்தான், கராச்சி நகரத்தில் பஸ் வண்டி ஒன்றின் மீது மேற் கொள்ளப்பட்ட தீவிரவாத தாக்குதல் காரணமாகவே அவரது விஜயம் இரத்து செய்யப்பட்டது.

இலங்கை இராணுவத்தளபதி கிறிசாந்த டி சில்வா விடுத்த அழைப்பை ஏற்றே அவர் இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் அவர் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்யவுள்ளார். (11)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



யாருடைய நாடு? யார் கவலைப்படுவது? எல்லாம் இறைவனுடையது. நாம் என்ன பெரியவர்களா? இறைவன் என்ன செத்துவிட்டானா? அல்லது தூங்கிக் கொண்டிருக்கிறானா?

அவனுடைய ஆணையின்றி ஓர் இலைகூட விழமுடியாது. ஓம் அவன் இரண்டற்ற ஒன்றே ஆனவன். அவன் என்னில் இருக்கின்றான். நான் அவனில் இருக்கின்றேன். ஒளிக்கடல் ஒன்றில் ஒரு சிறு கண்ணாடிபோல் இருக்கிறேன். நான். நான் இல்லை. நான் இல்லை; அவன் மட்டுமே, அவன் மட்டுமே இருக்கிறான்.

என் வீரமகன்களே! நீங்கள் மகத்தான காரியங்களைச் சாதிக்கப் பிறந்துள்ளீர்கள் என்ற நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டிநாய்களின் குரைப்புகளுக்கு அஞ்சாதீர்கள்.

பரமஹம்ச தேவர் உலக நன்மைக்காகவே பிறந்தார். பெயருக்கோ. புகழுக்கோ இல்லை என்பதை எப்போதும் மனதில் கொள்ளுங்கள். அவர் எதைப்போதிக்க வந்தாரோ அதை மட்டுமே பரப்புங்கள்.

எச்சரிக்கை எல்லோரிடமும் அன்பாகப் பேசுங்கள். ஆத்திரம் காட்டுவதால் எல்லா வேலையும் கெட்டுவிடுகிறது.

ஒரு நாடு விழித்தெழ வேண்டுமானால் அதற்கு உயர்ந்ததோர் இலட்சியம் வேண்டும். அந்த இலட்சியம் எது?அறுதிப் பரம்பொருளே. ஆனால் குணம் எதுவுமில்லாத அத்தகைய இலட்சியத்தினால் எல்லோரும் விழிப்புப் பெற முடியாது. எனவே உருவ இலட்சியம் ஒன்று தேவை. அத்தகைய இலட்சிய உருவே ஸ்ரீஇராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் செரீனா 50-வது வெற்றி

பிரெஞ்ச் ஓபன் டென்னிசில் நடந்த 3 ஆவது சுற்றில் 'நம்பர் வன்' வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும், முன்னாள் நம்பர் வன் வீராங்கனை பெலாரசின் விக்டோரியா அஸரென்காவும் பலப்பரீட்சை நடத்தினர்.

இதில் முதல் செட்டை 3-6 என்ற கணக்கில் பறிகொடுத்த செரீனா 2-வது செட்டிலும் 2-4 என்ற கணக்கில் பின்தங்கினார். இதனால் ஏறக்குறைய அஸரென்கா வெற்றியின் விளிம்புக்கே சென்றார். ஆனாலும் மனம் தளராமல் முழு உறுதியுடன் ஆக்ரோஷமாக போராடிய செரீனா படிப்படியாக சரிவில் இருந்து மீண்டார்.

வலுவான சர்வீஸ் போட்டும், சாதுர்யமான ஷாட்டுகளை விளாசியும் அஸரென்காவின் சவாலை முடிவுக்கு கொண்டு வந்தார். கடைசி இரு செட்டுகளை செரீனா 6-4, 6-2 என்ற கணக்கில் வசப்படுத்தி 4-வது சுற்றை உறுதி செய்தார். 14-வது ஆண்டாக பிரெஞ்ச் ஓபனில் பங்கேற்றுள்ள செரீனா அதில் பதிவு செய்த 50-வது வெற்றி இதுவாகும்.

ஏற்கனவே அவுஸ்திரேலிய ஓபனில் 68 வெற்றிகளும், விம்பிள்டனில் 72 வெற்றிகளும், அமெரிக்க ஓபனில் 79 வெற்றிகளும் செரீனா ருசித்துள்ளார். இதன் மூலம் 'ஓபன் எரா' வரலாற்றில் (அமெச்சூர் வீரர், வீராங்கனைகளுடன், தொழில் முறை வீரர்களும் அனுமதிக்கப்பட்ட 1968ஆம் ஆண்டில் இருந்து) 4 வகையான கிராண்ட்ஸ்லாம் போட்டியிலும் 50 இற்கு மேல் வெற்றிகளை குவித்த முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

ஸ்டெபி கிராப், மார்ட்டினா நவரத்திலோவா, கிறிஸ் எவர்ட் போன்ற ஜாம்பவான்கள் கூட இச்சாதனையை (இவர்கள் மூன்று கிராண்ட்ஸ்லாமில் மட்டுமே 50 இற்கு மேல் வெற்றி) செய்யவில்லை என்பது நினைவுகூரத்தக்கது. (க)

பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட்; கிளிநொச்சி இந்துக்கல்லூரி வெற்றி

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான இருபது-20 கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளின் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியினர் மோதிய வடக்கின் நீலங்களின் போர் கிரிக்கெட் போட்டி முடிவடைந்த நிலையில் பழைய மாணவர்களுக்கிடையிலான போட்டி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. இதில், யோ.நிரோஜன் 47, எஸ்.யூட் வின்சன் 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி, 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக 40 ஓட்டங்கள் மற்றும் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவன் எஸ்.யூட் வின்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டு பாடசாலை ஆசிரியர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற அணிக்கு 15 ஓவர்கள் கொண்ட மென்பந்தாட்ட துடுப்பாட்ட போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. முதலில் ஆடிய கிளிநொச்சி இந்து ஆசிரியர் அணி 14.5 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் அணி 9.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (க)

கோபா டெல் ரே காற்பந்து பார்சிலோனா சம்பியன்

'கோபா டெல் ரே' கோப்பை காற்பந்து தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்றது.

ஸ்பெயினில், உள்ளூர் காற்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் 'கோபா டெல் ரே' கோப்பை காற்பந்து தொடர் ஆண்டுதோறும் நடத்தப்படும். பார்சிலோனாவில் நடந்த 2014-15 சீசனுக்கான இறுதிப் போட்டியில், பார்சிலோனா, அத்லெடிகோ பில்பாவோ அணிகள் மோதின.

ஆட்டத்தின் 20வது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்சி முதல் கோல் அடித்தார். பின், 36 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் நெய்மர் தன் பங்கிற்கு ஒரு கோலடித்தார். முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 2-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் அசத்திய பார்சிலோனாவின் மெஸ்சி, 74 ஆவது நிமிடத்தில் 2ஆவது கோல் அடித்தார். தொடர்ந்து போராடிய அத்லெடிகோ பில்பாவோ அணிக்கு 79 ஆவது நிமிடத்தில் வில்லியம்ஸ் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் இத்தொடரில் அதிக முறை கோப்பை வென்ற அணிகளுக்கான பட்டியலில் பார்சிலோனா அணி தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இதுவரை 37 முறை இறுதிப் போட்டியில் விளையாடிய பார்சிலோனா அணி 27 முறை வெற்றி பெற்று கோப்பையை வென்றது. பத்து முறை தோல்வி அடைந்து 2 ஆவது இடம் பிடித்தது. இப்பட்டியலில் அடுத்த மூன்று இடங்களில் அத்லெடிகோ பில் பாவோ (23 முறை), ரியல் மாட்ரிட் (19 முறை), அத்லெடிகோ மாட்ரிட் (10 முறை) அணிகள் உள்ளன.

இத்தொடரில் அதிக கோல் அடித்தவர்களுக்கான பட்டியலில் பார்சிலோனா அணியின் நெய்மர், செவில்லா அணியின் இயகோ அஸ்பாஸ் முதலிடத்தை பகிர்ந்து கொண்டனர். இவர்கள் இருவரும் தலா 7 கோல்கள் அடித்தனர். பார்சிலோனாவின் மெஸ்சி 5 கோல்களுடன் 3 ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டார். (க)

ஆஸி ஓபன் பட்மின்டன் கரோலினா மரின் சம்பியன்

அவுஸ்திரேலிய ஓபன் சுப்பர் சீரீஸ் பட்மின்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரின் சம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் சீனாவின் ஷிக்சியான் வாங்குடன் நேற்று முன்தினம் மோதிய கரோலினா போராடி வென்று கோப்பையை கைப்பற்றினார். இந்த தொடரில் நடப்பு சம்பியனாக களமிறங்கிய நம்பர் 1 வீராங்கனை சாய்னா நெஹ்வால் (இந்தியா), கால் இறுதியில் ஷிக்சியான் வாங்கிடம் தோற்று வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சீன வீரர் சென் லாங் கோப்பையை கைப்பற்றினார். இரட்டையர் பிரிவில் தென்கொரியாவின் யூ யியான் சியாங் - லீ யோங் டே ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. கலப்பு இரட்டையர் பிரிவில் ஹொங்கொங்கின் லீ ரெஜினால்டு - சாவ் ஹோய் வாஹ் ஜோடி கோப்பையை தட்டிச் சென்றது. மகளிர் இரட்டையர் பிரிவில் சீனாவின் டாங் யுவான் டிங் - மஜின் ஜோடி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது. (க)

வடமாகாண வி.போட்டி வடமராட்சி முன்னிலை

வடமாகாண கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலை அணிகள் மற்றும் வீரர்களுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு விழாவில் வடமராட்சி கல்வி வலயம் 113 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளதாக மாகாண கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.சத்தியபாலன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

வடமாகாண விளையாட்டுப் போட்டி, 5 கட்டங்களாக நடைபெறும் நிலையில் தற்போது முதல் மற்றும் இரண்டாம் கட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்று முடிந்துள்ளன. மூன்றாம் கட்டப் போட்டிகள் இன்று 2ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமாகவுள்ளன.

நடைபெற்று முடிந்த 2 கட்டப் போட்டிகளின் புள்ளிகள் அடிப்படையில் வடமராட்சி முதலிடத்தில் உள்ளது. 104 புள்ளிகள் பெற்ற வலிகாமம் வலயம் இரண்டாமிடத்திலும் 85 புள்ளிகள் பெற்ற யாழ்ப்பாண வலயம் மூன்றாமிடத்திலும் 62 புள்ளிகள் பெற்ற கிளிநொச்சி வலயம் நான்காவது இடத்திலும் 37 புள்ளிகள் பெற்ற வவுனியா தெற்கு வலயம் 5ஆவது இடத்திலும் உள்ளன. தீவக வலயம் இன்னமும் புள்ளிகள் எதனையும் பெறாத நிலையில் இறுதி 12ஆவது இடத்தில் உள்ளது. (க)

சுதந்திரபுரம் மத்தி இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட மானசான் நினைவுக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த, றெட்பானா பாரதி விளையாட்டுக்கழக வீரர்களை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் நடப்பு சாம்பியன் மரியா ஷரபோவா தோல்வியடைந்து வெளியேறினார்.

ரஷ்யாவின் நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவாவுக்கு பிரெஞ்சு ஓபன் ஆடுகளம் நன்கு பரிச்சயமானது.

வெற்றிபெற வாய்ப்புள்ள இந்த களத்தில் தொடர்ந்து சிறப்பாக ஆடி வந்த அவர், நேற்று மகளிர் ஒற்றையர் பிரிவு 4-ம் சுற்றில் செக் குடியரசின் லூசி சபரோவாவை எதிர்கொண்டார்.

ஆனால், தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய ஷபரோவாவின் சேர்வீஸ்களை முறியடிக்க முடியாமல் ஷரபோவா தடுமாறினார்.

முதல் செட்டை போராடி இழந்த ஷரபோவாவின் முயற்சியை 2-வது செட்டிலும் ஷபரோவா தடுத்தார். இறுதியில் 6-7, 4-6 என்ற செட் கணக்கில் ஷரபோவா தோல்வியடைந்து வெளியேறினார்.

இப்போட்டியில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறிய ஷபரோவா, காலிறுதி ஆட்டத்தில் தன்னைவிட தரநிலையில் பின்தங்கியுள்ள முகுருசாவை (தரநிலை-21) சந்திக்க உள்ளார். இதேபோல் மற்றொரு காலிறுதியில் அனா இவானோவிக், ஸ்விட்டோலினா மோதுகின்றனர். (க)

காலிறுதிக்குள் நுழைந்தது சானியா - ஹிங்கிஸ் ஜோடி

பிரான்சில் நடைபெற்று வரும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் காலிறுதி சுற்றுக்கு சானியா - ஹிங்கிஸ் ஜோடி முன்னேறியது.

அதே சமயம் ஆடவர் இரட்டையர் பிரிவில் பயஸ்-நெஸ்டர் ஜோடி மற்றும் போபண்ணா - மெர்ஜியா ஜோடி 3-வது சுற்றில் தோல்வியடைந்து வெளியேறியது.

டென்னிஸ் தரவரிசை பட்டியலில் 10-வது இடத்தில் உள்ள பயஸ் - நெஸ்டர் ஜோடி, ஆறாவது இடத்தில்உள்ள சிமோன்பொலேலி-பாபியோ போக்னினியிடம் 2-6, 4-6 என்ற நேர் செட்டில் தோல்வியை தழுவியது.

அதே போல் 9-வது இடத்தில் உள்ள போபண்ணா - மெர்ஜியா ஜோடி, 5-வது இடத்தில் உள்ள ஜீன் - ஜூலியன் ரோஜர் ஜோடியிடம் 3-6, 7-6 (7), 3-6 என்ற செட் கணக்கில் தோற்றுப்போனது.

எனினும் பெண்கள் இரட்டையர் பிரிவில் முதலிடத்தில் உள்ள சானியா - ஹிங்கிஸ் இணை, 14வது இடத்தில் உள்ள இத்தாலிய ஜோடி கரின்க்னாப் மற்றும் ரொபர்ட்டா வின்சியை 6-1, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

புற்று நோயாளியான 92 வயது மூதாட்டி மரதன் ஓட்டத்தில் சாதனை

அமெரிக்காவின், சான்டீகோவில் 92 வயது மூதாட்டியும், புற்று நோயிலிருந்து மீண்டவருமான ஹாரியட் தோம்சன் என்ற 92 வயது மூதாட்டி அதிக வயதில் மரதன் ஓடிய பெண்மணி என்ற வகையில் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்பாக 2010 ஹோனாலூலு மரதனில் கிளேடிஸ் புரில் என்ற மூதாட்டி தனது 92 வயது 19 நாட்களில் சாதனை நிகழ்த்தினார். ஆனால் தற்போது ஹாரியட் தோம்சன் 92 வயது 65 நாட்களில் மரதன் ஓடிசாதனை புரிந்துள்ளார். இது இவரது 16-வது ராக் அன் ரோல் மரதன் ஓட்டமாகும் ஆனால் இது "கடினமானது" என்கிறார் ஹாரியட் தோம்சன்.

இந்த ஆண்டு எனக்கு கடினமாக அமைந்தது. கடந்த ஜனவரியில் கணவர் இறந்து போனார். எனக்கும் ஒரு காலில் ரண சிகிச்சை நடை பெற்றது. என்னால் இந்த மரதனை முழுதும் ஓடி முடித்துவிட்டேன் என்பதை உணர்ந்த போது உற்சாகமாக இருந்தது. பயிற்சிகள் பெறவில்லை என்றாலும் 7 மணி நேரம், 7 நிமிடங்கள் 49 விநாடிகளில் இவர் கடக்க வேண்டிய தூரத்தைக் கடந்தார். இதுவே முதியோர் ஓட்டத்தில் புதிய சாதனையாக அமைந்துள்ளது.

தனது 70-வது வயது வரை மரதன் பக்கம் இவர் வந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் லிம்போமா, லியுகேமியா புற்று நோய்களுக்கு நிதி திரட்டுவதற்காக மரதனில் பங்கேற்பதற்காக இவரது சேர்ச் இவரை அணுகியது.

அவர்கள் என்னை அணுகும் நேரத்தில்தான் எனது குடும்பத்தினர் புற்று நோய் காரணமாக மரணத்தை சந்தித்தினர். எனவே நாம் இதற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன், முதலாம் ஆண்டு சும்மா நடந்து செல்லலாம் என்றே நினைத்தேன். ஆனால் மற்றவர்கள் ஓடத் தொடங்கவே நானும் ஓடத் தொடங்கினேன்.

நான் மட்டும் ஓடத் தொடங்கவில்லையெனில் இப்போது உயிருடன் உங்கள் முன் நின்று கொண்டிருக்க மாட்டேன் என்றே கருதுகிறேன் என்று 92 வயதிலும் உற்சாகம் குன்றாத இந்த மூதாட்டி கூறுகிறார். (க)

நீதிமன்றத்தில் கலகம்...

த்துக் கொள்ளப்பட்டது முதலாவது வழக்கு யாழ் சிறைச்சாலைக்கு சேதம் விளைவித்தமை, பொலிஸாருக்கு பாரிய காயம் ஏற்படுத்தியமை மற்றும் கொலை முயற்சியில் ஈடுபட்டமை, சட்டவிரோத கூட்டத்திற்கு அங்கத்தவராக இருந்தமை, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 33 சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இரண்டாவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கில் பேருந்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை, வீதி சமிஞ்ஞை விளக்குகளுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 14 சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் பிணை விண்ணப்பம் செய்திருந்த நிலையில் விசேட சூழ்நிலைகளில் மட்டும் பிணை வழங்க முடியும் என நீதவான் கூறியதற்கு இணங்க சந்தேக நபர்களில் இருவருக்கு சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தரால் இவர்கள் 15 மற்றும் 16 வயதுடைய சிறுவர்கள் என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையை அடிப்படையாக கொண்டு இரு சிறுவர்களுக்கும் தலா 5 லட்சம் ரூபாய் பெறுமதியுடைய 3 ஆட்பிணையில் செல்லுமாறு அனுமதித்ததுடன் கிராம சேவகரால் வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இவர்களுடைய செயற்பாட்டை நன்நடத்தை உத்தியோத்தர், அறிக்கையாக மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களில் 8 பேருக்கு பாடசாலை அதிபர்களால் கொடுக்கப்பட்ட நற்சான்றிதழ் மன்றில் சமர்பிக்கப்பட்டது. இவை பிணை வழங்குவதற்கு போதாது என்றும் மாணவர் என உறுதிப்படுத்தி சத்தியக் கடதாசி சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிபதி கேட்டுக் கொண்டார்.

ஏனையவர்கள் விதி விலக்கான சூழ்நிலை என சத்தியக் கூற்று தாக்கல் செய்யப்பட வேண்டும் அதன் பின்னரே பிணை வழங்குவது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், கே.சயந்தன், வி.ரி.சிவலிங்கம், எஸ்.செலஸ்ரீன், எம்.வி.எம்.மாபீர், விஜயரட்ணம், சண்முகலிங்கம், தேவராசா, யோய் மகாதேவன் ஆகியோர் ஆயராகியிருந்தனர்.

இந்த வழக்கில் பொலிஸார் கருத்து கூறுகையில்,

இவர்கள் அனைவரும் கலவரம் நடைபெற்ற பகுதிகளில் கைது செய்யப்பட்டனர். இவர்களுடைய வாக்கு மூலத்தில் ஒருவரும் தாம் மாணவர்கள் என்று குறிப்பிடவில்லை.

அதே சமயம் சம்பவ இடத்துக்கு ஏன் வந்தார்கள் என்ற காரணம் எதுவும் முன்வைக்கவில்லை என தெரிவித்தனர்.

தொழில்நுட்ப வளர்ச்சியை கருத்தில் கொண்டு வெகு விரைவாக இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை முடிக்க வேண்டும் என நீதவான் பொ.சிவகுமாரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (11-9)

புங்குடுதீவில் ஒப்படைக்கப்...

வித்தியா வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் செல்வநாயகம் லெனின் குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மாணவி கொலை செய்யப்பட்டு சில நாட்களின் பின்னர் கடந்த 17 ஆம் திகதி சுவிஸ் குமார், வேலணையில் வைத்து மக்களால் பிடிக்கப்பட்டு சந்தேக நபராக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என பொலிஸாரின் முதல் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மீண்டும் அவர் வெள்ளவத்தை பொலிஸாரினால் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் வைத்து கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டார் என்றும் முதலறிக்கையில் குறிப்பிட்டு பொலிஸார் மன்றில் சமர்ப்பித்தனர்.

அதனையடுத்து முரண்பாடான முதல் அறிக்கை என்றும் சுவிஸ் குமாரைப் தப்பிக்க வைப்பதற்கு பொலிஸார் செயற்பட்டு வருகின்றனர் என மாணவி சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி தவராசா மன்றில் மன்றில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் குறித்த நபர் எவ்வாறு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இருந்து வெள்ள வத்தைக்குச் சென்றார் என்றும் அதற்கு யார் உதவினார்கள் என்பது தொடர்பிலான விசாரணைக்கு மன்று உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதவான் விடயம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை அடுத்த விசாரணையின் போது ஒப்படைக்க வேண்டும் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த 17 ஆம் திகதி இரவு மக்களால் சந்தேக நபராக பிடிக்கப்பட்ட சுவிஸ் குமார் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் தொடர்பில் சாட்சியங்கள் இல்லை என குறிப்பிட்டு பொலிஸார் அவரை விடுதலை செய்திருந்தனர். மறுநாள் மக்களின் குழப்பத்திற்கு அமைய புலனாய்வுப் பிரிவினருடன் புங்குடுதீவுக்கு வந்த சட்ட பீட விரிவுரையாளர் வி.ரி.தமிழ் மாறன் குறித்த சந்தேக நபரை தான் பொலிஸாரிடம் ஒப்படைப்பதாக மக்களிடம் கூறி அழைத்து வந்துள்ளார்.

அதற்கமைய கடந்த 18 ஆம் திகதி குறித்த நபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் இருந்த நிலையில் பின்னர் அவர் அங்கிருந்து காணாமல் போய் வெள்ளவத்தையில் மீண்டும் கைதாகியிருந்தார்.

யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுவிஸ் குமார் எவ்வாறு வெள்ளவத்தை சென்றார் என வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்ட போது சுவிஸ் குமாருக்கு எதிரான சாட்சியங்கள் இல்லை அதனால் தான் அவரை கைது செய்யவில்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்து அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி துவார கேஸ்வரன் என்பவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் வெள்ளவத்தைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும் மக்களால் தாக்கப்பட்ட காயம் காரணமாக சிகிச்சைக்கு உட்படுமாறு தாம் அவரை வைத்திய சாலைக்கு அனுப்பியதாகவும் அவர் தொடர்பில் சாட்சியம் இல்லை என்றும் அவர் எவ்வாறு வெள்ளவத்தை சென்றார் என்பது தமக்கு தெரியாது எனவும் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பத்திரிகையாளர் சந்திப்பின் போது கூறியிருந்தார்.

இது இவ்வாறு இருக்க ஊர்காவற்துறை பொலிசாரின் முதல் அறிக்கையில் ஒன்பதாவது சந்தேக நபர் (மகாலிங்கம் சசிக்குமார்/சுவிஸ்குமார்) தொடர்பில், மாணவியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் ஒன்பதாவது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என குறிப்பிட்டு விட்டு அதன் பின்னர் 21 ஆம் திகதி சந்தேக நபர் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களால் பிடிக்கப்பட்டு மக்களால் ஒப்படைக்கப்பட்டு சாட்சி பூர்வமான ஆதாரங்கள் உள்ள நிலையில் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர் எவ்வாறு வெள்ள வத்தையில் கைது செய்யப்பட்டார் என முரண்பாடாக முதல் அறிக்கை போடப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA – WORK VISA – SKILLED MIGRATION – VISIT VISA
கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA — UK, Australia, Spain, New Zealand, Canada Switzerland & Malaysia
FREE Assessment Send your CV to info@sikaram.lk — மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்தகொள்ள www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004, 021 222 00 11
(சி-1141)

சரவணா புடைவையகம்
SARAVANA TEX
புத்தம் புதிய சல்வார் தெரிவுகளுக்கு சரவணா ரெக்ஸ்
விலைக்கழிவுகள் வழங்கப்படும்
இல.526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
வேறு எங்கும் எமது கிளைகள் இல்லை
(சி-1140)

ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு
விலை: ரூபாய் 65/=
50 குஞ்சுகளுக்கு மேற்பட்ட குஞ்சுகள் எடுப்பின் 2 குஞ்சுகளும் 100 குஞ்சுகள் எடுப்பின் 5 குஞ்சுகளும் இலவசமாக வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
யாழ்ப்பாணம்-0778605098
வவுனியா-0766361172
(627)

English for you
மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோருக்கான English Personal Class
தொடர்புகளுக்கு : 077 6169 470
(632)

மேசன்மார்கள் தேவை
யாழ்.மொறிஸ் கட்டிட ஒப்பந்தகாரருக்கு உடனடியாக மேசன்மார்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
தொடர்பு கொள்ளவும்:-
0776057480
(634)

வெற்றிலையில்...

மாகும். அடுத்த தேர்தலில் நிச்சயம் மகிந்த ஐ.ம.சு.முவின் வெற்றிலை சின்னத்தில் போட்டியிடுவார். நூறு நாட்கள் கடந்து விட்ட போதும் இந்த அரசாங்கம் கலைக்கப்பட வில்லை. தொடர்ந்தும் ஆட்சியை முன்னெடுக்கின்றது. நாம் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவுள்ளோம்.

இந்த பிரேரணை கொண்டு வரப்பட்ட பின்னர் அல்லது அதற்கு முன்பதாகவே பாராளுமன்றம் கலைக்கப்படலாம். மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையில் தற்போது முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. எனவே ஆட்சியை முன்னெடுக்க முடியாத நிலை தலைதூக்கியுள்ளது. அத்தோடு இந்த ஆட்சியை தொடர்வதற்கு நாமும் இடமளிக்கமாட்டோம்.

மகிந்தவுக்கு என அரசியல் அடையாளம் உள்ளது. அது தான் சிங்கள பௌத்த அடையாளமாகும். இதனை இனவாதமாக அர்த்தப்படுத்த முடியாது. விடுதலை புலிகளையும் பயங்கரவாதத்தையும் மகிந்த எதிர்த்தார். அதனை ஒழித்தார். ஆனால் மகிந்த தமிழர்களுக்கு எதிரான இனவாதியல்ல. எதிர்வரும் பொதுத்தேர்தலில் மகிந்த நிச்சயம் ஐ.ம.சு.முவில் போட்டியிடுவார்.

அவரது வேட்பு மனுவில் அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கையெழுத்திடுவாரென்றும் வாசுதேவ நாணயக்கார எம்.பி தெரிவித்தார். (11)

பாதுகாப்பு...

அசாதாரணமான செயற்பாடுகள் காரணமாக பாதுகாப்புக் கருதி அவரை பிரிதொரு இடத்திற்கு வரவழைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என கூறினார்.

குறித்த வாக்குமூலமானது இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்றுள்ளது. சமூக பணிகளுக்காக வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக சிராந்தி ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இதனை அவரது தரப்பு முழுமையாக மறுத்து வருகின்றது. அத்துடன், குறித்த நிதியானது பகிரங்கமான முறையில் பெறப்பட்டு சமூக பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டதாக சிராந்தியின் ஊடக இணைப்பாளர் அனோமா வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

நேற்றைய விசாரணைகளுக்கு சிராந்தி தனது கணவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவுடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

பிரதமர் வேட்பாளராக...

திரிபால சிறிசேனவிடம் தோல்வியடைந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்த மகிந்த ராஜபக்ஷ, நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் அதே கட்சின் சார்பாகப் போட்டியிட முயற்சிப்பதாக, அவரது பேச்சாளர் ரொஹான் வெலிவிட்ட கூறினார்.

எனினும் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன வகிக்கும் நிலையில், அந்தக் கட்சியின் சார்பில் பிரதமர் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு ஜனாதிபதி இணங்காவிட்டால் அவர் கட்டாயமாக வேறு வழியை முன்னெடுப்பார் என்றும் அவரது பேச்சாளர் கூறியுள்ளார்.

எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகவே போட்டியிடுவார் எனவும்,

மகிந்த ராஜபக்ஷ அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட நாடு தற்போது முடங்கிப் போயுள்ளது என்றும் அவரது பேச்சாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் வாரங்களில் பாராளுமன்றத்தைக் கலைப்பார் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. (11)

நீதிமன்ற வளாகத்தில்...

டது.

வழக்கு விசாரணைகள் முடிவடைந்து வெளியில் வந்தவேளை, வித்தியாவின் தாயார் மயங்கி வீழ்ந்துள்ளார்.

இவ்வழக்கு விசாரணையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

சந்தேக நபர்களுக்கு...

ற்றுறை நீதிமன்றங்களிலும் நீதவான்களினது வாசல்தலங்களிலும் முன்னிலைப்படுத்தப்பட்டு நேற்று முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைகளுக்காக ஊர்காவற்துறை நீதவான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேக நபர்களான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாந்தன், சிவதேவன் துசாந்தன், பலனிரூபசிங்கம் குகநாதன், ஜெயரட்ணம் கோகிலன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கில் இரு பொலிஸாரின் வாக்குமூலங்கள் பதியப்பட்டன. அதில் குறித்த மாணவி படுகொலை செய்யப்பட்ட இடம், குற்றம் நிகழ்ந்த இடத்திற்கு பொலிஸார் எவ்வாறு எப்போது சென்றிருந்தனர், சடலம் எவ்வாறு காணப்பட்டது மற்றும் அங்கு கிடைத்த சான்றுகள் தொடர்பிலும் தமது வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர். ஆலடி சந்தியிலிருந்து வல்லன் சந்தி வரையில் 400 மீற்றர் தூரத்தில் உள்ள பிள்ளையார் கோவில் வீதியிலிருந்து இடது பக்கத்தில் இரண்டு பக்கமும் 150 மீற்றர் அகலமளவு பற்றைகளால் சூழப்பட்ட இடம் காணப்பட்டது.

வீதியில் நின்று அந்த இடத்தை பார்க்கும் போது உள்ளே என்ன உள்ளது என தெரியவில்லை. பின்னர் அப்பகுதியூடாக செல்லும் ஒற்றையடி பாதை வழியாக சென்றேன். அது பனைமரங்கள் நிறைந்த இடமாக காணப்பட்டது. இருள் சூழ்ந்த இடமாகவும் காணப்பட்டது. மேலும் உள்ளே சென்ற போது சடலம் ஒன்று கட்டப்பட்ட நிலையில் இருப்பதை கண்டேன். அதன் அங்க அடையாளங்களை வைத்து அது ஒரு பெண் என்பதனையும் தெரிந்து கொண்டேன் என ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும், குற்றம் நிகழ்ந்த இடத்திற்கு ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் இரு பொலிஸ் உத்தியோகத்தர் உடன் ஜீப் வண்டியில் சென்றிருந்தோம். பொன்னுத்துரை பிள்ளையார் கோவிலுக்கு திரும்பும் சந்தியில் வீதியின் வலது பக்கத்தில் வல்லன் கிராமத்திற்கு செல்லும் வீதியின் இடது பக்கத்தில் பாழடைந்த வீட்டின் சுவருக்கு முன்னால் 400 சென்றி மீற்றர் தூரத்தில் பூவரசம் இடது பக்கத்தில் வரைபடத்தின் பிரகாரம் அத்திபாரத்தில் இருந்து உரோமம் ஒன்றினையும் பின்னர் அதே போன்று மூன்று இடங்களில் இருந்தும் உரோமங்களினை அடையாளம் கண்டு சான்று பொருட்களாக அடையாளப்படுத்தி அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கும் அனுப்பி வைத்தோம் என இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தரும் கூறி அதற்கான சான்றுகளையும் மன்றில் சமர்ப்பித்தார்.

பொலிஸார் இருவரின் வாக்குமூலங்களை அடுத்து குறித்த வழக்கின் பாதிக்கப்பட்ட பெண் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் தமது தரப்பு வாதங்களையும் கருத்துக்களையும் முன்வைத்தனர். இதன்போது குறித்த சந்தேக நபர்களது இரத்தமாதிரிகள் சோதனை செய்வதற்கு சிறிது கால அவகாசம் தேவையென குற்றப்புலனாய்வு துறையினர் சார்பில் ஆஜராகியிருந்த குற்றப்புலனாய்வு துறை அதிகாரி கேட்டுக்கொண்டார். எனினும் அதனை ஆட்சேபித்த சட்டத்தரணி கே.வி.தவராஜா குறித்த வழக்கு வடக்கில் மட்டுமல்ல நாட்டிலும் உலக அளவிலும் முக்கியத்துவம் பெற்ற நிலையில் காணப்படுகின்றது. படுகொலை செய்யப்பட்ட மாணவிக்கு விரைவாக நீதி வழங்குமாறும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. ஆகையால் குறிப்பிட்ட சில காலத்திற்குள் விரைவாக வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பது நல்லது என தனது வாதத்தை முன்வைத்தார்.

பின்னர் சந்தேக நபர்கள் ஏதும் சொல்ல இருந்தால் அதனை மன்றில் கூறமுடியும் என நீதவான் கூறினார். இதன்போது நான்கு சந்தேக நபர்கள், தாங்கள் சம்பவ இடத்தில் இல்லை எனவும், பொலிசார் தம்மை தாக்கினர் எனவும் மன்றில் கூறினார். எனினும் ஆதாரமில்லாது கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இதனை ஏன் கடந்த வழக்கு தவணைகளின் போது கூறவில்லை எனவும் நீதவான் கேட்டிருந்தார். இதன் போது சந்தேக நபர்களில் ஒருவர் தான் கடந்த பதின்மூன்றாம் திகதி இங்கு இல்லை எனவும் கொழும்பில் இருந்ததாகவும் வெள்ளவத்தை எச்.என்.பி வங்கி ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் எடுத்ததாகவும் கூறினார்.

பின்பு, குற்றப்புலனாய்வு பிரிவு, பொலிஸ் தரப்பு மற்றும் சட்டத்தரணிகளின் வாதங்களையடுத்து நீதவான் குறித்த வழக்கு தொடர்பான தனது கட்டளையை பிறப்பித்தார். அதில் சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி முன்னிலையில் பெற்று மரபணு பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவுகளை பெற்றுக்கொள்ளுமாறு இந்த மன்று பொலிஸாருக்கு கட்டளை இடுகின்றது.

சட்ட வைத்திய அதிகாரி பெண்ணின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்யும் போது அதிலிருந்து கைப்பற்றப்பட்ட சான்றுபொருட்களை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். வெள்ளவத்தை எச்.என்.பி.வங்கியின் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த வீடியோவின் 13.05.2015 - 14.05.2015 இடைப்பட்ட நாள் பதிவினை முழுமையாக பெற்றுக்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு உத்தரவிட்டார்.

சம்பவ இடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல சான்று பொருட்களையும் உடனடியாக எந்த வித காலதாமதமும் இன்றி நீதிமன்றில் முற்படுத்தல் வேண்டும். சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட தொலைபேசிகளின் தரவுகள் மற்றும் சந்தேக நபர்களால் பாவிக்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் உள்ளிட்ட சகல விபரங்களையும் திரட்டி நீதிமன்றில் முற்படுத்துவதற்கு குற்றப்புலனாய்வு உத்தியோகத்தருக்கு நீதிமன்றம் கட்டளை இட்டது.

மேலும் ஊர்காவற்துறை பொலிஸாரின் முதல் அறிக்கையில் ஒன்பதாவது சந்தேக நபர் (மகாலிங்கம் சசிக்குமார் /சுவிஸ்குமார்) தொடர்பில், மாணவியின் சடலம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் ஒன்பதாவது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என குறிப்பிட்டு விட்டு அதன் பின்னர் 21ஆம் திகதி சந்தேக நபர் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களால் பிடிக்கப்பட்டு மக்களால் ஒப்படைக்கப்பட்டு சாட்சி பூர்வமான ஆதாரங்கள் உள்ள நிலையில் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர் எவ்வாறு வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டார் என முரண்பாடான முதல் அறிக்கை போடப்பட்டுள்ளது.

இது முரண்பாடான அறிக்கையாகும் இது பொலிஸாரால் குற்றவாளியை தப்ப வைப்பதற்கான முதல் அறிக்கை என சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா சுட்டிக்காட்டியதை தொடர்ந்து, சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இது தொடர்பில் தனியான விசாரணை ஒன்றினை நடத்தி இதில் எந்த அதிகாரிகள் சம்மந்தப்பட்டிருந்தாலும் அவர்களை கைது செய்து முற்படுத்துமாறு கட்டளையிட்டிருந்தார்.

இதன் பின்னர் குறித்த சந்தேக நபர்களினையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட குடும்பம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி தவராஜாவின் அனுசரணையுடன் சட்டத்தரணிகளான கே.சுகாஷ், எஸ்.விஜயராணி, ரி.ஜனகன், ஆதித்தன் கார்த்திகா, அம்பிகா சிறிதரன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (4)

யாழ் - கொழும்பு முண்ணனி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக மையங்களில்
உடனடி வேலைவாய்ப்புக்கள்
1000 ற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
சுயவிபரக்கோவையுடன் ஜூன் 8 க்கு முன் நேரில் வரவும்
சிகரம் தொழில் வங்கி
SIKARAM Get Set for Careers & Take off Your Dreams
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 077 36 16 798
(சி-1141)

Golden Group Advertising Company
பல சாதனைகளை படைத்து வருகின்றது. இதன் புதிய பிரிவு குறுகிய நாட்களில் ஆரம்பிக்கப்படவுள்ளமையால் பல்வேறு வகையான பதவி வெற்றிடங்கள். வடக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு அரியசந்தர்ப்பம்.
பதவி வெற்றிடங்கள்
■ வரவேற்பாளர் (பெண்) ■ காசாளர் (பெண்)
■ உள்ளக/ வெளிக்கள உத்தியோகத்தர் (இருபாலாரும்)
■ உதவி முகாமையாளர் ■ முகாமையாளர்
கல்வித் தகைமை: G.C.E O/L A/L
A/L இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்
வேறு மாவட்டங்களில் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.
குறிப்பு:-நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமையால் இன்றே நீங்களும் பதிவாளராகுங்கள். (630)
தொடர்புகளுக்கு: 0779987699, 0776219536

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.